GOKULAM

கோகுலம்

செப்டெம்பர் 1998 ரூ. 6/-



துள்ளுது டால்ஃபின் வியக்குது உள்ளம்!

தாய்க் கோழி ஒளிந்திருக்கும் ஏழு குஞ்சுகளை எப்படி தேடப் போகிறது? நீங்களும் முயலுங்க ளேன்!





பிருந்தாவனம்

கேள்விகள் இரண்டு - பதில் ஒன்று!

1. நல்ல பாம்பு தலை தூக்குவதேன்?
   நாம் கேமிரா முன் நிற்பது ஏன்?
2. பந்து எழும்புவது ஏன்?
   பையன் அழுவது ஏன்?
3. காடு குறைகிறது ஏன்?
   கால்வாய் நீள்கிறது ஏன்?

– எம். வினோத், ஐந்தாம் வகுப்பு,
விருத்தாசலம்.


விடை : 1. படம் எடுக்க, 2. அடிப்பதால்,
3. வெட்டுவதால்.



''உங்க மகனுக்கு ட்ரை சைக்கிள் வாங்கித் தந்தீங்களே என்ன பண்றான்?''

''ஓட்டறதுக்கு 'ட்ரை' பண்றான்!''

– ஜூனியர் தேஜ்



படத்தை நிறைவு செய்யுங்கள்!

கோகுலம்

செப்டெம்பர் 1998


மலர் : 16 இதழ் : 8



அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

செப்டெம்பர் மாதம், கொஞ்சம் கவலையும் ரொம்ப மகிழ்ச்சியும் நிரம்பிய மாதம்.

காலாண்டுப் பரீட்சை சிறிது கவலை தரத்தான் செய்யும். ஆனால், 'அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்' என்று ஆறப் போடாமல் ஆரம்பத்திலிருந்தே சுறுசுறுப்பாகச் செயல்பட்டிருந்தால் காலாண்டுப் பரீட்சையை ஊதித் தள்ளி விடலாம். அப்படியேதான் இதர பரீட்சைகள் விஷயமும். எதையும் ஒத்திப் போடக் கூடாது. அன்றன்று நடக்கும் பாடங்களை அன்றைக்கே மனசில் நன்றாக வாங்கிக் கொண்டு விட்டால், சந்தேகங்கள் இருப்பின் கேட்டுத் தெரிந்து கொண்டுவிட்டால் கவலையே இல்லை. பரீட்சை சமயத்தில் ஜஸ்ட் லைக் தட்... பக்கங்களை ஒரு புரட்டுப் புரட்டினால் எல்லாம் பசுமையாக நினைவு வந்து விடும்.



இந்த மாதத்தில் ரொம்ப மகிழ்ச்சி அளிப்பது கொலு. பெரிசோ, சின்னதோ, மூன்று படிகளோ, பதினோரு படிகளோ, கொலு கொலுதான்! அதை அழகாக அமைப்பதில் ஏற்படுகிற மன நிறைவு வேறு எதில் உண்டு?

'இதெல்லாம் பெண் பிள்ளைங்க சமாச்சாரம்' என்று சிறுவர்கள் ஒதுங்காமல், அக்கா அல்லது தங்கைக்கு பொம்மைகளை எடுத்துத் துடைத்துக் கொடுத்து உதவலாம். தவிர உங்கள் கற்பனையைத் தட்டிவிட்டு, பூங்கா, சாலை, மலை, குளம் என்று களி மண்ணும் மணலும் கொண்டு தயாரித்துத் தரலாம்.

இரண்டு நாட்கள் பாடுபட்டு கொலு வைத்து விட்டால் அப்புறம் எட்டு நாட்களுக்குப் பார்த்துப் பார்த்து மகிழலாம்; பாராட்டுகளையும் பெறலாம். கொலு, உங்கள் அழகுணர்ச்சியின் பிரதிபலிப்பு. எனவே அலட்சியம் செய்யாமல் அதில் அக்கறை காட்டுங்கள்.

கொலு எதிரே போடுகிற வண்ணக் கோலங்களை கோகுலத்துக்குத் தாளில் வரைந்தும் வண்ணம் தீட்டியும் அனுப்பலாம். அதற்காகவே இரண்டு பக்கங்களை ஒதுக்கி இருக்கிறோமே!

கொலு பார்க்கப் போகும் போது சங்கோஜப்படாமல் பாடுங்கள். உங்கள் பாட்டு கச்சேரி பண்ணி பாராட்டுப் பெறுவதற்கு அல்ல. நவராத்திரி தெய்வங்களுக்கு ஒரு ஆத்ம நிவேதனம். பாட்டின் பொருளில் லயித்து பக்தியுடன் பாடினால் சுமாரான சங்கீதமானால் கூட அதில் ஜீவ களை ததும்பும். கேட்பவரையும் உருக்கும்.

துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று நவராத்திரி தெய்வங்களும் உங்களுக்கும் உங்கள் பெற்றோர்களுக்கும் அஞ்சா நெஞ்சத்தையும், குறைவற்ற செல்வத்தையும், அறிவாற்றலையும் அளிக்கட்டும். வாழ்த்துகள்.

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

கோகுலம்


செப்டெம்பர் '98

இந்த இதழில்...









நந்தி நிகேதனம் என்னும் நாட்டுக்கரசன் நந்திவர்மன். நல்லாட்சி புரிந்த நந்தி வர்மன் ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

இதனைக் கேள்வியுற்ற அண்டை நாடான இரத்தினபுரி வேந்தன் பொறாமை கொண்டு நந்தி நிகேதனத்தின் மீது படையெடுத்தான்.

வீரன் கஜபதி!

'சிறுவர் சிறுமியர், முதியவர்கள் தவிர மற்ற யாவரும் போர் செய்ய வந்து விட வேண்டும்' என்று நந்திவர்மன் ஒரு பிரகடனம் செய்தார். உடனே அவர் ஆணைப்படி மக்கள் போரிடத் திரண்டனர்.

அந்த நாட்டில் உள்ள சிற்றூர் ஒன்றில் கஜபதி என்னும் சோம்பேறி இருந்தான். ஒரு ஆள் குறைந்ததனால் ராணுவத்தின் பலம் அப்படி என்ன வீணாகிப் போகப் போகிறது! என்று தலைமறைவாகி வீட்டுக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருந்தான்.


கஜபதியின் வயதான தாய், தன் மகனின் சோம்பேறித் தனத்தை எண்ணி வருந்தினாள். அவனை வீரனாக்க எண்ணி கிராம அதிகாரியிடம் சென்று ஒரு நாடகம் நடத்த உபாயம் ஒன்றினைக் கூறி வந்தாள்.

அன்றிரவு நாலைந்து திருடர்கள் கஜபதியின் வீட்டுக்குள் நுழைந்தனர். கஜபதி எதிர்த்துப் போராடினான். முடியவில்லை. அந்த சமயம் அவன் அம்மா வெளியே சென்று கூச்சலிட்டாள். அண்டை அயல் வீடுகளிலிருந்து பலர் வந்து சண்டையிட்டுத் திருடர்களை விரட்டி விட்டனர்.

அப்போது கஜபதியின் தாய், "கஜபதி பார்த்தாயா. உன் ஒருவனால் மட்டும் திருடர்களைச் சமாளிக்க முடிந்ததா? அண்டை அயலார் பலர் வந்துதானே விரட்டினார்கள். இந்த வீடு உன் தாய் வீடல்லவா. இதைக் காப்பாற்ற உன் ஒருவனால் பலரைச் சமாளிக்க முடியாமல் போய் விட்டது. அண்டை அயலார் உன்னைப் போல அவரவர் வீடுகளில் இருந்து விட்டிருந்தால் நம் கதி என்ன ஆகியிருக்கும். தாய் வீடு போலதான் தாய் நாடும். அதனையும் காத்திட அனைவரும் ஒன்று திரண்டு போனால்தான் வெற்றி கிட்டும்" என்றாள்.

இதனைக் கேட்டதும் கஜபதி தன் தவறை உணர்ந்தான். கஜபதியும் மறுநாள் காலையில் படையில் சேரக் கிளம்பி விட்டான்.

— ஏழ்வரைக்கடியான்



பொறுமை கடலினும் பெரிது!

சிவசங்கரன், சச்சிதானந்தன் இருவரும் இணைபிரியா நண்பர்கள். இருவரும் பொற் கொல்லர்கள். இருவரது வீடும் அருகிலேயே இருந்தது. சச்சிதானந்தன் பொறுமைசாலி. ஆனால் சிவசங்கரன் அவசர புத்தி கொண்டவன்.

ஒருநாள் அரசர் அவ்விரு நண்பர்களையும் அழைத்து மறுநாள் மாலைக்குள் இரண்டு மூட்டைகள் நிறைய வெள்ளிப் பொருட்கள் கொண்டு வருமாறும் அது ஐந்து கிலோவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார். மறுநாள் காலை வெள்ளிப் பொருட்கள் நிறைந்த மூட்டையை தயார் செய்தனர்.

மாலையில் மூட்டையை எடுத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தனர். அப்போது சிவசங்கரன் இப்படி சென்றால் நாளை தான் செல்ல முடியும் என்று கூறி வேகமாக ஓட ஆரம்பித்தான். சச்சிதானந்தன் பொறுமையாகவே சென்றான்.

சிவசங்கரன் பாதி தூரம் கூட சென்றிருக்க மாட்டான். அப்போது ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தான். அவன் கொண்டு வந்த மூட்டையும் கீழே விழுந்தது. அதில் இருந்த வெள்ளிப் பொருட்கள் கீழே சிதறின. சில பொருட்கள் ஒடுங்கிப் போயின.

சச்சிதானந்தன் அரண்மனையை அடைந்தான். அப்போது மணி ஆறு. அரசரிடம் சென்று மூட்டையைக் கொடுத்தான். அவன் உரிய நேரத்தில் கொடுத்ததால் அரசர் அதை எடை போட்டுப் பார்க்கவில்லை. அதற்குரிய விலையைக் கொடுத்துவிட்டு மூட்டையைப் பெற்றுக் கொண்டார்.

சிவசங்கரனோ கீழே சிதறிய பொருட்களைத் தேடிக் கொண்டிருந்தான். சில மணி நேரம் தேடிய பின் போனது போகட்டும் என்ற முடிவோடு அரண்மனைக்குச் சென்றான். அப்போது மணி பத்துக்கு மேல் ஆயிற்று. எல்லோரும் அரண்மனையில் உறங்கிக் கொண்டிருந்தனர். அவன் காலை வரை அங்கேயே அமர்ந்திருந்தான்.



விடிந்த உடன் மன்னரிடம் சென்று மூட்டையைக் கொடுத்தான். அவன் காலம் கடந்து வந்ததால் மன்னர் அதை எடை போட்டுப் பார்த்தார். அதில் ஐந்து கிலோவுக்கும் குறைவாகவே பொருட்கள் இருந்தன. உடனே மன்னர் அவன் மீது சினம் கொண்டார். காவலாளிகளை அழைத்து "என்னை ஏமாற்ற நினைத்த இவனை சிறைச் சேதம் செய்யுங்கள்" என்று ஆணையிட்டார். அவ்வேளையில் சச்சிதானந்தம் ஓடி வந்து மன்னரிடம் "என் நண்பன் உங்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இப்படி செய்திருக்க மாட்டான். அவனை விசாரித்துப் பாருங்கள், உண்மை தெரியும்" என்று கூறினான்.


சிவசங்கரன் நடந்ததைக் கூறினான். அரசரின் சினம் சற்று தணிந்தது. எனினும் பொருட்களை எடுத்துக் கொள்ள மறுத்து விட்டார். இவர்களின் நட்பை மன்னர் பாராட்டினார். அன்று முதல் சிவசங்கரனும் பொறுமையைக் கடைப்பிடித்தான்.

– பா. ஆனந்தகுமார்

ஒரே ஒரு வரம்!

ஒரு மீனவன் நதியில் வலை வீசினான். ஒரு பெரிய மீன் சிக்கியது. அதை கையில் எடுத்ததும் அந்த மீன் பேசியது. "நண்பரே நான் இந்த நதியின் மகன். நீங்கள் என்னை விட்டுவிட்டால் நான் உங்களுக்கு ஒரு வரம் தருவேன். புத்திசாலித்தனமாக நீங்கள் அந்த ஒரு வரத்தைக் கேட்டால் சௌக்கியமாக வாழலாம்" என்றது.

மீனவன் என்ன வரம் கேட்பது என்று குழம்பினான். பின்பு மீனிடம், "இந்த நீர்க் குடுவையினுள் உன்னை விடுகிறேன். வீட்டில் எனது குடும்பத்தைக் கலந்தாலோசித்து வரம் கேட்கிறேன். பின்பு உன்னை விட்டு விடுகிறேன்" என்று கூறி அதனைப் பற்றிச் சென்றான்.



மீனவனின் தந்தை நிறைய பணமும், தாய் தனது குருடான கண்கள் தெரிய வேண்டும் என்றும், மனைவி ஒரு அழகான குழந்தை வேண்டும் என்றும் கேட்டனர்.

சற்று யோசித்த மீனவன் மீனிடம் சென்று, "மீனே என் மாளிகை வீட்டின் ஐந்தாவது மாடியில் இருந்து என் அழகான குழந்தை தங்கத் தொட்டிலில் ஆடுவதைக் கண்டு என் தாய் மகிழ வேண்டும்" என்று கேட்டான்.

மீனும் வரமளித்துவிட்டு விடுதலை பெற்று நதியினுள் சென்று விட்டது.

இவ்வாறு மீனவனின் சமயோசித புத்தியால் மூவரின் ஆசையும் நிறைவேற மகிழ்ச்சியோடு பல்லாண்டு காலம் வாழ்ந்தனர்.


– ஐ. கமால் பாஷா
அரசினர் ஆண்கள்
மேல்நிலைப்பள்ளி,
வத்தலக்குண்டு.



முறை மேலே வந்து சுவாசித்து விட்டு மீண்டும் நீந்துகின்றன.

இவை குழுக்களாகவே வாழ விரும்புகின்றன. ஒரு குழுவில் பத்திலிருந்து ஆயிரம் டால்ஃபின்கள் வரை சேர்ந்து இருக்கின்றன.

ஒரு டால்ஃபினுக்கு



டால்ஃபின்களைப் பற்றியும், அவைகளின் சாகச நிகழ்ச்சிகளையும் நாம் புத்தகங்களில் படித்தும், டீ.வி., திரைப்படங்களில் பார்த்தும் வியந்திருக்கிறோம்.

டால்ஃபின்கள் பொதுவாகவே மிகவும் சாதுவான, நன்கு பழகக் கூடிய பாலூட்டி. இதை திமிங்கலங்களின் சகோதரர்கள் என்று கூட சொல்லலாம். இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் டால்ஃபின்கள் மென்மையானவை. இவை பெரிய ஆறுகளிலும், கடல்களிலும் வாழ்கின்றன.

நீருக்குள் அவை செல்வதையும் சிறிது நேரத்தில் மேலே வந்து துள்ளிக் குதிப்பதையும் பார்த்திருக்கிறோம். இது ஏன் தெரியுமா? இவை தண்ணீரிலேயே வாழ்ந்தாலும் கூட நீருக்கடியில் மூச்சு விட இயலாது.

டால்ஃபின்களின் சாகசங்கள்!

எனவே மூச்சு விடுவதற்காகவே சிறிது நேரத்திற்கு ஒரு

ஏதாவது காயம் ஏற்பட்டாலோ, மூர்ச்சை யானாலோ உடனே மற்ற டால்ஃபின்கள் அதை தண்ணீருக்கு மேலே கொண்டு வந்து சுவாசிக்க வைக்கின்றன.

அதே போல் தாய் டால்ஃபின் குட்டி போடும் போதும் மற்ற டால்ஃபின்கள் தகுந்த உதவியை அளிக்கின்றன.

இவை மனிதர்களுக்கும் பேருதவி

புரிகின்றன. வழி தவறிய கப்பலுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன. கடலில் தவறி விழுந்த மனிதனை கரை சேர்க்கும் வேலையையும் செய்கின்றன.

டால்ஃபின்களுக்கு பார்க்கும் சக்தி குறைவு. ஆனால் கேட்கும் சக்தி மிக அதிகம். தண்ணீரில் ஏற்படும் அசைவுகளை வைத்து தன் இரையை சரியாகப் பிடித்து விடுகின்றன.

விளையாட்டை மிகவும் விரும்பும் டால்ஃபின்கள் கப்பலுடன் போட்டி போட்டுக் கொண்டு நீந்துகின்றன.

இவை விரைந்து கற்றுக் கொள்ளும் பண்பினைப் பெற்றுள்ளன. அத்துடன் வெகு காலத்திற்கு நினைவில் நிறுத்திக் கொள்ளும் இயல்புடையவை.

சாதுவாகவும், உதவும் குணம் உடையதாகவும், புத்திக் கூர்மை மிக்கதாகவும் உள்ள டால்ஃபின்களுக்கு பயிற்சி அளித்து காட்சிக் கூடங்களில் நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்.

வெளிநாடுகளில் இது போன்ற 'டால்ஃபின் காட்சிகள்' அதிகமிருந்தாலும் நம் நாட்டில் அதுவும் சென்னையில் - சமீபத்தில் 'டால்ஃபின் சிட்டி' ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

இது மகாபலிபுரத்திற்கு பத்து கிலோ மீட்டருக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளது. பல்கேரியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று டால்ஃபின்கள் இங்கு உள்ளன.

பயிற்சியாளர்களின் கை அசைவையும், இசையின் தன்மையையும் அறிந்து அதற்கேற்றவாறு சாகச நிகழ்ச்சிகளை நடத்தி நம்மை அசரவைக்கின்றன.

தலைகீழாக நிற்பது, தூக்கி ஏறியப்படும் வளையங்களை தன் வாயால் பிடித்து பயிற்சியாளர்களிடம் கொடுப்பது, உயரந் தாண்டுவது, , கூடைப்பந்து விளையாடுவது, தன் வாலால் உதைத்து கால் பந்து விளையாடுவது, பத்தடி உயரத்தில் நிற்கும் பயிற்சியாளரிடம் இருக்கும் உணவை தாவிச் சாப்பிடுவது என பலவித சாகசங்கள் குழந்தைகளிடம் அதிக வரவேற்பினைப் பெற்றுள்ளன.

இத்துடன் கடல் சிங்கங்களின் சாகசங்களும் இங்கு காட்டப்படுகின்றன.

இவ்வளவு தூரம் நம் ஊருக்கே வந்துள்ள டால்ஃபின்களைப் பார்க்க



அனைவரும் விரும்புகிறார்கள். ஆனால் நுழைவுக்கட்டணம்தான் மலைக்க வைக்கிறது. குழந்தைகளுக்கு 150 ரூபாய், பெரியவர்களுக்கு 175 ரூபாய். அதுவும் ஆகஸ்ட் 4 வரைதான் இக்கட்டணம். அதற்குப் பின் மேலும் உயருமாம்!

வசதியானவர்களுக்கு மட்டுமே பயன்படும் விதமாக அமைக்கப்பட்டுள்ள டால்ஃபின் சிட்டி நுழைவுக் கட்டணம் அனைவருக்கும் பயன்படும் விதத்தில் குறைக்கப்பட்டால் நாம் மகிழ்வோம்!

அட்டையில் : **கதிர் வசுதா**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



பழசாகச் செருப்பிரண்டு
பெரிய அளவில்
பல்விழுந்த சீப்பொன்று,
பாத்திரம் நாலு
படம் போட்ட பத்திரிகைகள்
ஐந்தோ ஆறோ
பால் பாயிண்ட் பேனாக்கள்,
சாவிக்கொத்து
கடிகாரம், தொலைபேசி,
பிளாஸ்டிக் கூடை
மோடாக்கள், முக்காலி,
தண்ணீர் வாளி
விளையாட இவை
எனக்குப் போதும் அம்மா!
வேறொன்றும் விலை
கொடுத்து வாங்க வேண்டாம்.

— ஸுஜாதா விஜயராகவன்



உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!

எஸ். சங்கர்

அன்று பள்ளி விடுமுறை.

காலையில் கண் விழித்ததிலிருந்தே கண்ணன் சுறுசுறுப்பாக இருந்தான். தன் நண்பர்கள் குப்புவும், பாலுவும் எப்போது வருவார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்து வாயிற்படியிலேயே காத்திருந்தான்.

பள்ளிக்கூட நாட்களில் அவன் இப்படி சுறுசுறுப்பாக இருந்ததே கிடையாது.

விடுமுறை நாளென்றால் போதும். 'உண்டிவில்'லை எடுத்துக் கொண்டு காலையிலேயே பறவைகளை வேட்டையாடப் புறப்பட்டு விடுவான்.

பறவைகள் எந்தப் புதரில் இருந்தாலும் சரி, எவ்வளவு உயரமான கிளையில் உட்கார்ந்திருந்தாலும் சரி, குறிதவறாமல் அடிப்பதில் கண்ணன் வல்லவன்.

அவனுடைய கூட்டாளிகள் பாலுவும், குப்புவும் அவனது வேட்டைக்குத் தேவையான கூழாங்கற்களைச் சேகரித்துத் தருவதோடு வீழ்த்தப்பட்ட பறவைகளைப் போய் எடுத்து வரும் வேலையையும் செய்வார்கள்.

அவர்கள் மூவரும் வேட்டைக்குப் போய்த் திரும்பினால், அன்று பிற்பகலில் குறைந்தது பத்து பறவைகளாவது குற்றுயிராய் அவர்களது பையில் இருக்கும்.

அவற்றை விலைகொடுத்து வாங்குவதற்கென்றே அந்த ஊரில் சாமியப்பன் இருந்தான்.

அந்தப் பறவைகளை மனம்போன போக்கில் விலைகொடுத்து வாங்கிக் கொள்வான். கிடைக்கும் பணத்தை மூன்று நண்பர்களும் சமமாகப் பிரித்துக் கொண்டு அவரவர் வீடு போய்ச் சேர்வார்கள்.

மறுநாள் பள்ளியில் தின்பண்டங்கள் வாங்கித் தின்ன அந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இதுதான் அவர்களது வழக்கம்.

கண்ணனின் தாய் செல்லம்மாள், அவனுக்கு எவ்வளவோ புத்திமதி சொல்லிப் பார்த்தார்.

பலனில்லை. கூலி வேலை செய்து குடும்பம் நடத்தி வருபவர் அவர்.

"வாயில்லாப் பறவைகளைக் கொல்வது பாவம்; அந்தப் பறவைகளுக்கும் பாசம் உண்டு; அவையும் மனிதர்களைப் போலத்தான். அவற்றைப் பிரிப்பது மிகவும் பாவம். பேசத் தெரியாத அந்த ஜீவன்கள் சாபம் விட்டால் நமக்குத் துன்பம்தான் வரும்" என்றெல்லாம் செல்லம்மாள் கண்ணனிடம் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார்.

அவன் காது கொடுத்துக் கேட்க மாட்டான்.

பாலுவும் குப்புவும் வந்து சேர்ந்த வுடன் தன் வேட்டைக்குப் புறப்பட்டு விட்டான் கண்ணன்.

இன்று அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கும் இடம் குளத்துக்கரை.

ஊர்க் கோடியில் இருக்கும் குளத்தைச் சுற்றிலும் உள்ள மரங்களில் எந்த நேரமும் பறவைகள் பாடிக் கொண்டிருக்கும்.

கண்ணனின் குறிக்குப் பலியாகியது ஒரு பறவை. அதனைத் தொடர்ந்து மூன்று சிட்டுக் குருவிகள்.

அதற்குள் பறவைகளெல்லாம் எந்தெந்த இடம் கிடைத்ததோ அங்கங்கு போய் பயத்துடன் ஒளிந்து கொண்டன.

அதன் பிறகு எதுவும் மாட்டவில்லை. நேரம் போனது.

கண்ணனுக்கு எரிச்சலானது. காலை உணவும் சாப்பிடவில்லை. உச்சி வெயிலும் வந்து விட்டது. பசி அதிகமானது. எனவே, வீட்டுக்குத் திரும்பி, மீண்டும் பிற்பகல் மூன்று மணிக்குச் சந்திக்க முடிவெடுத்தனர்.

அன்று அகப்பட்ட பறவைகளைச் சாமியப்பனிடம் தந்து விட்டுப் பணத்தோடு மூன்று மணிக்குக் கண்ணனைத் தோட்டத்து வழியாக வந்து சந்திப்பதாகக் கூறிவிட்டுப் பாலுவும், குப்புவும் பிரிந்து சென்றனர்.

அன்று கண்ணனுக்கு மிகவும் பிடித்தமான உணவு. நன்றாகச் சாப்பிட்டான். சாப்பிட்டவுடன் களைப்பு அதிகமானது.

தோட்டத்துப் பக்கமாக உள்ள வேப்ப மரத்தடியில் இருந்த கட்டிலில் போய்ப் படுத்தான்.

படுத்தவுடனேயே தன்னையும் அறியாமல் தூங்கி விட்டான்; ஆழ்ந்த உறக்கம்.

சற்று நேரத்தில் குப்புவும், பாலுவும் வந்து ரகசியமாகக் குரல் கொடுத்தனர்.

கண்ணன் கண்விழித்து எழுந்தான். ஓசைப்படாமல் எழுந்து மெல்ல அவர்களைப் பின்தொடர்ந்தான்.

மூவரும் ஊரின் எல்லைக்கே வந்து விட்டனர்.

அங்கே ஓர் இலுப்பைத் தோப்பு.

புதர்களால் சூழப்பட்ட இலுப்பை மரங்கள் நிறைய இருந்தன. தோப்புக்குள் நுழைந்தவுடனேயே ஏதோ இருண்ட பிரதேசத்துக்குள் நுழைந்த உணர்வு உண்டாகும். அவ்வளவு அடர்த்தி.

வண்ண வண்ணப் பறவைகள் அங்கே ஏராளமாக இருந்தன. உண்மையில் ஏதோ பறவைகள் மாநாடு நடப்பது போல இருந்தது.

கண்ணனுக்கு முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது.


உண்டிவில்லை எடுத்தான். சரியாகக் கூழாங்கல்லைப் பொருத்தி இழுத்து விட்டான். கல் பறந்தது. விரைவாகப் பாய்ந்து சென்றது. ஆனால், கல் போய் பறவையை அடையும் முன்னரே அது பறந்து விட்டது.

கண்ணனின் குறி தவறி விட்டது.

தன் குறி தவறி விட்டதை எண்ணி வருந்திய கண்ணன் அடுத்த கல்லை எடுக்க பாலுவை நோக்கித் திரும்புவதற்குள்...

'அம்மா!' என்ற குரல் கேட்டு அதிர்ந்தான். குரல் வந்த திசை அவன் கல் விட்ட திசைதான்.

மூவரும் அந்த இடம் நோக்கி ஓடினர்.



அங்கே, மரத்தடியில் ஒரு முனிவர் உட்கார்ந்திருந்தார். நீண்ட தாடியும் ஒட்டிய உடலும் அவரது நீண்ட நாளைய தவத்தை எடுத்துரைத்தன.

அவருடைய நெற்றியிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. வலது கையால் நெற்றியைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

அந்தக் காயம் கண்ணன் விட்டெறிந்த கல்லால்தான் உண்டானதென்பதை அவன் உணர்வதற்குள்...

“அடேய், சிறுவனே! நீதான் உண்டிவில்லால் என்னை அடித்துக் காயப்படுத்தி என் தவத்தைக் கெடுத்தவனா? உன்னை என்ன செய்கிறேன், பார்!” என்று முனிவர் கர்ஜித்தார்.

அந்தக் கணமே கண்ணனை விட்டு விட்டு நண்பர் இருவரும் ஓடி மறைந்தனர்.

என்ன செய்வது என்று புரியாமல் கண்ணன் தவிப்பதற்குள், முனிவர் கமண்டலத்திலிருந்த தண்ணீரை கண்ணனை நோக்கித் தெளித்தார்.

அவ்வளவுதான்! கண்ணன் கண் இமைப்பதற்குள் ஒரு சிட்டுக் குருவியாக மாறிப் போனான்.

உடல் நடுங்கியபடியே பேச முயன்றான். குரல் வரவில்லை. கிச் கிச் என்ற ஓசைதான் வந்தது. நண்பர்களைத் தேடினான். தென்படவில்லை. திரும்பிப் பார்த்தான்; முனிவரையும் காணவில்லை. ஓட நினைத்தான்; முடியவில்லை.

மாறாக, பறக்க முயன்றான்; முடிந்தது. பறந்தான்.

தன் நண்பர்களைப் பார்த்துத் தன் நிலையைச் சொல்ல வேண்டுமென எண்ணி நேரே அவர்களைத் தேடிப் புறப்பட்டான்.

“கிச் கிச்” என்று கத்தியபடியே கண்ணன் பாலுவின் தோள் மீது போய் உட்கார்ந்தான்.


பாலு, ‘ஆஹா’ இந்தச் சிட்டுக் குருவி தானாகவே வந்து தோள் மீது உட்காருகிறதே பிடித்து விடலாம் என்றெண்ணி குப்புவிடம் கூறினான்.

கண்ணன் புரிந்து கொண்டான்.

பாலுவிடம் ஒரு குருவி அகப்பட்டால் என்னவாகும் என்பது அவனுக்குத் தெரியாதா என்ன!

தான் ஒரு சிட்டுக் குருவியாக இப்போது இருக்கிறோம் என்ற உணர்வு வந்தவுடன்





'விர்'ரென்று பறந்து அருகிலிருந்த் மரக் கிளையில் போய் உட்கார்ந்தான் கண்ணன்.

குப்பு வேகமாகக் குனிந்து கீழே கிடந்த கல் ஒன்றை எடுத்துக் குருவியைப் பார்த்து வீசினான்.

ஒரு கல் குருவியைத் தாக்கிக் காலிலே காயத்தை உண்டாக்கியது. வலியில் துடித்த குருவி இனிமேல் இங்கிருந்தால் தன் உயிருக்கே ஆபத்து என்பதை உணர்ந்தவுடன் பறந்து தப்பித்துச் சென்றது.

வேறு ஒரு கிளையில் அமர்ந்த கண்ணன் குனிந்து தன் காலைப் பார்த்தான்; ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

வேதனைப்பட்டான். வலிபொறுக்க முடியவில்லை. அழுதான்.

தன்னால் அடிபட்ட பறவைகளுக்கும் இப்படித்தானே வலித்திருக்கும் என்றெண்ணி வருந்தினான்.

பேசத் தெரியாத ஜீவன்கள் வலியில் எப்படித் துடிக்கும் என்பதை உணர்ந்தான்.

தன் தாயை நோக்கிப் பறந்தான்.

அப்போதுதான் செல்லம்மாள் தெரு வாசலில் வந்து உட்கார்ந்தார். பறந்து போன கண்ணன் அவர் மடியில் போய் விழுந்தான்.

பதறிப் போன செல்லம்மாள் சிட்டுக் குருவியைக் கையிலெடுத்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

செல்லம்மாளுக்குப் பயம் வந்து விட்டது.

எங்கே தன் மகன் வந்து விட்டால் அவனுக்கு அந்தக் குருவி இரையாகி விடுமோ என்று அஞ்சி மெல்ல கையிலெடுத்துப் பொறுமையாக வீட்டுக் கூரை மேலே விட்டார்.

"போய் விடு! போய் விடு! எங்காவது பறந்து போய் விடு, என் மகன் வருவதற்குள் போய் விடு. இல்லையென்றால் அவன் உன்னைக் கொன்று விடுவான், பறந்து போய் விடு" என்றார்.

கண்ணன் அழுதான். தன் தாய்க்குக் கூட தன்னைப் புரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டதே என்று புலம்பினான்.

"அம்மா, நான்தானம்மா, கண்ணன். உன் மகன். என் பேச்சைப் புரிந்து கொள்ளம்மா! ஐயோ! குருவியின் பேச்சுதான் உனக்குப் புரியாதே! நான் என்ன செய்வேன் என்னைக் காப்பாற்றம்மா" என்று கதறினான்.

கண் விழித்துப் பார்த்தான் கண்ணன்.

சுற்றுமுற்றும் பார்த்தான். கட்டிலிலிருந்து கீழே விழுந்திருந்தான்.

தன்னைத் தொட்டுப் பார்த்தான். மனிதனாகவே இருந்தான். முகம் மலர்ந்தான்.


'அப்பாடி... தப்பித்தேன்! குருவியாக மாறவில்லை. அப்படியென்றால் இவ்வளவு நேரம் கனவுதான் நாம் கண்டிருக்கிறோம்' என்று திருப்தியுடன் கட்டிலில் ஏறி உட்கார்ந்தான்.


கால் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான்.

உண்டி வில் அப்படியே இருந்தது. அதை வெளியே எடுத்து தூக்கி எறிந்தான்.

அன்று முதல் உண்டி வில்லையே அவன் தொடுவது கிடையாது. தோட்டத்தில் காலை மாலை இரு வேளையும் பறவைகளுக்குத் தீனி போட்டு மகிழ்கிறான்.


பாலுவும் குப்புவும் கண்ணனைத் தேடி வருவது கிடையாது. அவனும் அவர்களைச் சந்திப்பதில்லை.


முயற்சி
கதை:- விநோதினி, லோகநாயகி
படம்:
ஏதோ பத்திரிகையைப் பார்த்துவிட்டு~
சே! இந்த மாதமும் என் கதை வெளி வரலை!
ஹும்.. இனி நான் கதையே எழுதப் போவதில்லை
மறு வாரம்~
அனிதா அக்கா எங்கே கிளம்பறே?
மாவட்ட அளவிலே நடக்கிற பேச்சுப் போட்டிக்கு!
ஏண்டா சிரிக்கிறே?
பரிசு வாங்கவே பிறந்த கீதா கலந்துக்கப் போறாளாம்... அதான்!
உன்னை மாதிரி இல்லை நான், ஒரு கதை வரலேன்னா எழுதுவதையே விட்டு விடுவதற்கு!
ஓ! தோல்வின்னு தெரிஞ்சும், போட்டியா?!
இல்லை. முதல்ல நமக்குத் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வேணும்!
ரிசல்ட் இப்பவே தெரியுது எனக்கு!


உனக்கு அப்படித் தெரிஞ்சா, நான் கலந்துக்காம இருக்கணுமா? என்னுடைய அனுபவ அறிவை நான் வளர்த்துக்க வேண்டாமா?
சரி சரி கிளம்பு
போட்டி முடிந்தது....
என்ன, பரிசு, கிடைத்ததா?
ம்.. மூன்றாவது இடம்.
நான் தான் அப்பவே சொன்னேனே? இனி அடுத்த போட்டியிலே கலந்துக்குவியா?
நிச்சயமா கலந்துப்பேன்
ஏன்? கீதா வேற ஊருக்குப் போறாளா?
இந்தக் கிண்டலெல்லாம் வேண்டாம்!


முதல் பரிசு கிடைக்கலை யேன்னு உனக்கு வருத்த மாகவே இல்லையா அக்கா?
இல்லடா, ரவி...ஏன்? கம்பளிப் பூச்சி, நாம் இப்படி இருக்கோம்னு வருத்தப்பட்டா, பட்டாம் பூச்சியாக முடியுமா?
அன்று இரவு–
ரவி தூங்காம என்ன செய் யறே?
கதை எழுதறேன், அக்கா!
ரவின்னா ரவிதான். நல்ல விஷயத்தை டக்கின்னு புரிஞ்சுக் கிட்டியே!

பிருந்தாவனம்




கடல் நிறைய மீன்கள்!

காட் என்பது அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் காணப்படும் ஒரு வகை மீன். இவை ஒரு தடவைக்கு அறுபது லட்சம் முட்டைகள் வரை இடும். ஆனால் முட்டை பொரித்து மீன் குஞ்சாகி உயிர் வாழ்வது அதில் நாலோ ஐந்தோ தானாம்! அத்தனை முட்டைகளும் மீனானால் அட்லாண்டிக் மகா சமுத்திரமே மீன் மயமாகி கடல் நீர் நிலத்தில் புகுந்து விடும்.

தீக்கோழி ரேஸ்!

ஆப்பிரிக்காவில் தீக் கோழி ரேஸ் மிகப் பிரபலமானது. ரேஸில் கோழியை ஓட்டிச் செல்லும் ரைடர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் பயணம் செய்ய வேண்டும். தீக்கோழி மணிக்கு 64 கி.மீட்டர் வேகத்தில் ஓடக் கூடியது. ரைடர்கள் இதன் இறக்கைகளை வலுவாகப் பற்றிக் கொள்வார்கள்.





நாய் படாதபாடு!


ஸ்நூப்பி, டி-ஷர்ட், கிமோனா, மிங்க் கோட் என்று மனிதர்கள் அணியும் உடைகளைப் போலவே ஜப்பானியர்கள் வளர்க்கும் நாய்களுக்கும் உடை உண்டு.

இவற்றின் அதிகபட்ச விலை ஒன்றரை லட்சம் யென். இது மட்டுமல்ல. நாய்களின் உடல் வலியைப் போக்கும் நீராவிக் குளியலறைகள், உணவுக் கூடங்கள், தனிப் பற்பசை எல்லாம் உண்டு!

ரேஷன் கார்டு!


வட கொரிய மக்கள் தங்கள் நாட்டில் உள்ள சிற்றுண்டி விடுதிகளுக்குச் சென்றால் காசு எடுத்துச் செல்ல மறந்தாலும் மறப்பார்களே தவிர - தங்கள் ரேஷன் கார்டை மட்டும் மறக்கவே மாட்டார்கள்.

ரேஷன் கார்டு இல்லை என்றால் சிற்



றுண்டிச் சாலைக்குள் நுழையவே முடி யாது! ரேஷன் கார்டுகளில் அவரவர்க் குரிய உணவு அளவு குறிக்கப்பட்டிருக்கும். அந்த அளவுப் படிதான் சிற்றுண்டிச் சாலைகளில் உணவு கிடைக்கும்.

– ஆர்.ஆர். பூபதி,
திண்டுக்கல் - 624 705.




சிலந்தி தன் வலையில் சிக்காமலிருப்பது ஏன்?

சிலந்தி வலையில் பூச்சிகள் சிக்கு வதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் சிலந்தி மட்டும் அதில் சிக்காததின் கார ணம் என்ன?

சிலந்தியின் வலையில் சில இழைகள் ஒட்டிக் கொள்ளும் தன்மை இல்லாதவை. சிலந்தி அதன் மீது ஊர்ந்து செல்லும் பொழுது அதன் கால்கள் ஒட்டிக் கொள் ளாத இழைகளின் மீது மட்டுமே படும். தான் பின்னிய வலையில் எந்த இழை ஒட்டும், எவை ஒட்டாது என்பதை சிலந்தி நன்கு அறியும். அதனால் எவ்வளவு வேக மாகச் சென்றாலும் ஒட்டாத இழைகளின் மீது மட்டுமே கால்களை வைக்கும். இத னால்தான் சிலந்தி தன் வலையில் சிக்குவ தில்லை.

– பொது அறிவுத் தேன் கூடு.
தகவல் : கே.ஆர். உதயகுமார்.



சமன் பாட்டிற்காகப் போடப்படும் '=' அடையாளக்குறி 16ம் நூற்றாண்டில்தான் இங்கிலாந்தில் முதன் முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது.

ஆதாரம் : அட! அப்படியா?
தகவல் : நெ. இராமன், சென்னை - 74.

1. தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர் களுள் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டிய மன்னர் யார்?

2. தமிழ் நாட்டிலேயே அதிகப்படியாக 125 கோவில்களைத் தன்னகத்தே கொண் டுள்ள இடம் எது?

3. உலகிலுள்ள தீவுகளில் மிகப் பெரியது எது?

4. முதல் சுதந்தரப் போரில் பங்கு கொண்ட ஜான்ஸி ராணி லட்சுமி பாயின் கல்லறை எங்குள்ளது?

5. 'கதகளி' நாட்டியத்திற்குப் பெயர் போன மாநிலம் எது?

6. இமய மலைத் தொடரைச் சேர்ந்த திபெத் நாட்டிலுள்ள இந்துக்களின் புண்ணிய ஸ்தலம் எது?

7. தென்கிழக்கு ஆசியாவில் சீனா விற்கும், ஜப்பானிற்கும் இடையில் உள்ள தீபகற்பம் எது?

விடை:

1. கரிகாலன், 2. காஞ்சிபுரம், 3. கிரீன் லாந்து, 4. குவாலியர்; 5. கேரளம், 6. கைலாயம், 7. கொரியா.




கூட்டு பிரமாதம்!

பிடித்த காட்சி?

கோடை விடுமுறைக்கு என் நண்பன் எங்கள் கிராமத்திற்கு வந்திருந்தான். அவனை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டினேன். அவன் ஊருக்குக் கிளம்பும் போது "உனக்கு, எங்க கிராமத்திலே பிடிச்ச காட்சி எது?" என்று கேட்டேன். அதற்கு அவன் "தொலைக்காட்சி தான்" என்றான். என் கோபத்தைக் கண்ட நண்பன் "சும்மா சொன்னேன்டா, இந்த ஊரே எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு" என்றான்.

– இ. நடராஜன்,
அனந்தபுரம், செஞ்சி தாலுகா.



மிளகாய் இல்லை!

நான் கடைக்குச் சென்றிருந்தேன். அருகில் இருந்தவர் கடைக்காரரிடம் "உங்க கடையிலே வெங்காயம் வாங்கிட்டு, மிளகாய் இல்லைன்னு சொன்னதாலே பக்கத்துக் கடைக்குப் போனேன். அந்தக் கடைக்காரர் எங்கே வெங்காயம் வாங்குனீங்களோ அங்கேயே மிளகாயும் வாங்கிக்குங்க என்று சொல்லிட்டார்'




என்றார். இதைக்கேட்ட இன்னொருவர் "பின்னே என்னப்பா! இட்லி ஒரு கடையிலும் சட்னி இன்னொரு கடையிலுமா வாங்குவே?" என்றாரே பார்க்கலாம்!

– சி. அன்பழகன்,
மணையாரன் காடு, சேலம் மாவட்டம்

கூட்டு வேணுமா?

எளிதில் ஏமாறும் குணம் கொண்டவள் என் தங்கை. அவளுக்குப் பிடிக்காத பொருளையும் யாராவது புகழ்ந்து பேசினால் உடனே ஏற்றுக் கொள்வாள். ஒரு நாள் கத்தரிக்காய் கூட்டு பிடிக்காது என்று சாப்பிட மறுத்தாள். எங்கள் அப்பா வழக்கம் போல் அவளை ஏமாற்ற நினைத்து "ஆஹா! கூட்டு பிரமாதம். இன்னும் கொஞ்சம் வை" என்றார். உடனே தங்கை "இன்னும் கொஞ்சம் கூட்டு தானே வேணும். இந்தாங்க" என்று தன் தட்டிலிருந்த கூட்டை எடுத்து அப்பா தட்டில் வைக்கும் போது அப்பாவின் முகத்தைப் பார்க்க



ஊமையா?

என் அண்ணன் சிறந்த பட்டிமன்ற பேச்சாளர். ஒரு நாள் அண்ணன் அவர் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது "நான் பன்னிரெண்டு வயசிலதான் பேசவே ஆரம்பித்தேன்" என்று கூறினார் அண்ணன். அருகில் இருந்த என் குட்டி தம்பி "அப்ப பன்னிரெண்டு வருஷம் ஊமையா இருந்தீங்களா?" என்று கேட்டான். "இல்லடா பன்னிரெண்டு வயசிலதான் மேடையில் பேச ஆரம்பித்தேன்" என்று விளக்கினார் அண்ணன்.

– வி. விஜயலக்ஷ்மி, திருச்சி – 18.

சில்லறை இல்லை!

நானும் அம்மாவும் பக்கத்து ஊருக்குச் செல்ல பேருந்தில் ஏறினோம். பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. கண்டக்டர் "எங்கிட்டே சில்லறை இல்லே, சில்லறை இல்



வேண்டுமே!

– க. காத்யாயனி,
ஏழாம் வகுப்பு, 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

லாதவங்க எல்லாம் கீழே இறங்குங்க" என்றார் கோபமாக. அதற்கு நான் "சார் உங்ககிட்டேயும் சில்லறை இல்லை, நீங்களும் கீழே இறங்கப் போறீங்களா?" என்று கேட்டேன். அனைவரும் சிரித்தனர். என் அம்மா "இப்படி பேசக்



கூடாது" என்று என்னைக் கண்டித்தார்.

– க. பாலாஜி,
செவ்வாய்பேட்டை, சேலம்.

சொந்தக்காரரா?

எங்கள் உறவினர் திருமணத்திற்குச் சென்றிருந்தோம். எங்களுடன் என் நண்பனும் வந்திருந்தான். மண்டபத்தில் மொட்டையுடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரைக் காட்டி என் நண்பன் "உங்க சொந்தக்காரரா?"




என்றான். அருகில் வந்த அவர் என் நண்பனிடம் "எனக்கு கார் வச்சிக்கிற அளவுக்கெல்லாம் வசதி கிடையாது" என்றாரே பார்க்கலாம்!

– ஜி. மகாராஜன்,
பத்தாம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி,
பெரியதச்சூர் அஞ்சல்.



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

5. நான்கு வகையான தமிழ்ச் செய்யுள்களில் ஒன்று *(4)*

7. பெட்டி, பெட்டியாக இருக்கும். இதில் பயணம் செய்யலாம் *(3)*

9. 'வீடு' கட்டும் நிலத்தை இப்படியும் அழைக்கலாம் *(2)*

11. நீரிலும் நிலத்திலும் வாழும். தாவி குதிக்கும் *(3)*

13. இது சோறு போடும் என்பது பழமொழி *(4)*

14. பட்டாசுகள் தயாரிப்புக்குப் புகழ் பெற்ற ஊர் *(4)*

வலமிருந்து இடம்:

1. பாண்டவர்களின் மனைவி *(4)*

2. நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று *(4)*

4. உரக்கப் பேசினான் என்பதை இப்படியும் அழைக்கலாம். காய் நறுக்கவும் பயன்படும் *(3)*

6. இல்லை என்பதற்கு எதிர்பதம் *(2)*

8. கம்ப்யூட்டரை இப்படியும் அழைக்கலாம் *(3)*

10. தேச பக்தி வார்த்தையில் இறுதி எழுத்து இங்கே இல்லை *(4)*

மேலிருந்து கீழ்

1. திருவிழாக்களில் தாகம் தீர்க்க இதைக் கொடுப்பார்கள் *(4)*

2. தமிழ்நாட்டில் அணுமின் நிலையம் உள்ள இடம் *(6)*

10. வெற்றியை இப்படியும் அழைக்கலாம் *(3)*

12. தமிழ் மாதங்களில் ஒன்று. கடைசிக்கு முதல் மாதம் *(2)*

கீழிருந்து மேல்

3. 'கொறி' விலங்கு வகையைச் சார்ந்தது. இதன் எதிரி பூனை *(2)*

5. இசைக்கருவிகளில் ஒன்று. களி மண்ணால் ஆனது *(3)*

13. விடுதலையை இப்படியும் அழைக்கலாம் *(6)*

14. மனிதனுக்கு மட்டும் உரியதாகக் கருதப்படும் இது. அறிவைப் பயன்படுத்தி பகுத்துப் பார்க்கும் திறன் *(4)*

விடை - 61 ஆம் பக்கம்

து. கார்த்திகேயன்,
பதினோராம் வகுப்பு,
நாடார் மேல்நிலைப்பள்ளி,
கோவில்பட்டி.



காகிதத்தில் இவ்வளவு விஷயமா?

காகிதம், தொகுப்பாளர் அரவிந்த் குப்தா, சு. பாலகுருநாதன், பக். 96, ரூ. 25/- அறிவியல் வெளியீடு, 24, கெனால் சாலை, திருவான்மியூர், சென்னை - 41.

காகிதம் என்ற தாளை வைத்துக் கொண்டு கைகளின் உதவியால் என்னவெல்லாம் செய்யலாம் என்பதை விளக்கமாகக் கூறி, விளக்கப்படங்களையும் தந்திருக்கிறார்கள். எழுத மட்டுமே என்று நமக்கு அறிமுகமாகியிருக்கும் காகிதத்தால் இத்தனை பொருள்களையும் வேலைகளையும் செய்யலாமா என்று நமக்கே மலைப்பாக இருக்கிறது. பொழுது போகாமல் தவிக்கும் துறுதுறுப்பான பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது, பள்ளிகளில் பயிற்சி வகுப்பை நடத்தும் ஆசிரியப் பெருமக்களுக்கும் இது நன்கு பயன்படும் புத்தகம்.

✤

கடலோடிகள் – வாண்டு மாமா, பக். 120, ரூ. 30/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளன் தெரு, சென்னை - 17.

உலகப் புகழ்பெற்ற புத்தக வெளியீட்டு நிறுவனமான 'பெங்குவின்' சிறுவர்களுக்கான அற்புதமான நூல்களைத் தனது 'பப்பின்' பதிப்புகள் வாயிலாக வெளியிட்டுள்ளது. அவைகளைப் பார்க்கும் போது அப்படிப்பட்ட நூல்கள் தமிழில் வரவில்லையே என்ற ஏக்கம் தோன்றும். பொருள், ஓவியங்கள் தயாரிப்பு என எல்லாவற்றிலும் அவை மிகச் சிறந்திருக்கும். இந்தக் குறையை வாண்டு மாமாவின் கங்கை வெளியீடுகள் தீர்த்து வைக்கின்றன. உலகப் புகழ்பெற்ற கடலோடிகளான கொலம்பஸ், வாஸ்கோடகாமா, வால்டர் ராலே, காப்டன் குக் போன்றவர்களின் வரலாறுகள் இதில் உயிருள்ள சித்திரங்களோடு தரப்பட்டுள்ளன. இந்த முயற்சிக்காக ஆசிரியரையும் பதிப்பாளரையும் மனதாரப் பாராட்டலாம்.

✤

என் குறுக்கெழுத்துப் புதிர்கள், மு. அப்பாஸ், பக். 128, ரூ. 24/- மணிமேகலை பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை - 17.

குறுக்கெழுத்துப் புதிர்கள் எல்லா வயதினருக்கும் மகிழ்ச்சியளிப்பவை. என் குறுக்கெழுத்துப் புதிர்களுக்கு மொழி அவசியம் இல்லை. எண்களைப் பற்றிய அறிவு இருந்தால் போதும். எண் குறுக்கெழுத்துப் புதிர்களாக 80 புதிர்கள் இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஈடுபாட்டோடு இதை வைத்துக் கொண்டு விடுவிக்க உட்கார்ந்து விட்டால் பொழுது போவதே தெரியாது. நல்ல முயற்சி.

✤

கடமை உள்ளம், இரா. பாலசுப்ரமணியன், பக். 70, ரூ. 14/- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41, பி சிட்கோ இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட், சென்னை - 98.

ஒரு பெரும் பண்ணைக்காரர் சென்னையிலும் பர்மாவிலும் ஏகப்பட்ட நிலபுலன் கொண்டவர். இவரைப் போலவே போலி ஒருவரைத் தயார் செய்து உண்மையானவரைப் பாதாளச் சிறையில் அடைத்து விட்டு அவருடைய சொத்துக்களையெல்லாம் தங்கள் பெயருக்கு மாற்றிக் கொள்கிறது ஒரு மோசடி கும்பல். கதாநாயகனான சிறுவன் ரமணியின் தங்கையும் இந்தக் கும்பலால் கடத்தப்பட, ரமணி வயதுக்கு மீறிய வீரதீரச் செயல்களில் எல்லாம் ஈடுபட்டு பல ஆபத்துகளை வென்று மோசடிக் கும்பலைப் போலீசுக்குப் பிடித்துக் கொடுத்து, குடியரசுத் தலைவரின் விருதையும் பெறுகிறான். கதையில் விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லை. படங்கள் நூலுக்கு அழகூட்டுகின்றன.

– ரே



மக்களின்

நற்செயல் மூட்டை!

ஜானகிமணாளன்

மதுராபுரியில் துறவி ஒருவர் இருந்தார். அவருக்கு மக்களிடம் நல்ல மரியாதை. அவர் என்ன சொன்னாலும், அவர்கள் அதன்படி நடப்பார்கள்.

ஒரு நாள், அந்தத் துறவி, தலையில் ஒரு பெரிய மூட்டையைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு எங்கோ கிளம்பிப் போனார். அதைக் கண்ட மக்களிடம் பெரும் ஆச்சர்யம்!

'துறவியார் தலையில் என்ன பெரிய மூட்டை? அதை அவர் எங்கு தூக்கிச் செல்கிறார்? அதற்குள் என்ன இருக்கிறது? மிகுந்த கனமான சாமான் போல் தெரிகிறதே?' இதற்கெல்லாம் விடை காணா விட்டால் தலையே வெடித்துவிடும் போல் அவர்களுக்கு இருந்தது.

சிலர் துணிந்து அவரிடமே கேட்டுவிட முடிவு செய்தனர். "என்ன துறவியாரே! நலம்தானே? எங்கே இப்படிக் கிளம்பி விட்டீர்கள்?" என்றார் ஒருவர்.

அவர், "நானா? ஆற்றுக்குப் போகிறேன்... அங்கு ஒரு முக்கியமான வேலை!" என்றார்.

"சரி... தலையில் என்ன பெரிய மூட்டை? எல்லாம் அழுக்குத் துணிகளா? துவைப்பதற்காகச் சுமந்து செல்கிறீர்களா?" என்று அடுக்கடுக்காக வினவினர்.

துறவியால் நிற்கக் கூட முடியவில்லை. மூட்டை அத்தனை கனம். "இல்லையப்பா இல்லை... எல்லாம் நம் முன்னோர்கள் குறிப்பிட்ட பொருள்கள். எல்லாவற்றையும் அவர்கள் சொல்லி வைத்துள்ளபடி செய்ய ஆற்றுக்குப் போகிறேன்... வரட்டுமா?" என்று நகர்ந்தார் துறவி.

ஆவல் மேலும் அதிகரித்து விட்டது. "முன்னோர்கள் குறிப்பிட்ட பொருளா? என்ன அது? அவர்கள் சொல்லி வைத்துள்ள படியா? என்ன சொல்லி வைத்துள்ளார்கள்?" என்றனர்.

அதற்குத் துறவி, "இந்த மூட்டை முழுவதும் நான் பிறருக்குச் செய்த நற்செயல்கள் உள்ளன. நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ள பொருள் அதுதான். அவற்றை எல்லாம் அன்றாடம் ஆற்றில், குளத்தில், ஏரி, கடலில் அல்லது கிணற்றில் போட்டு விட வேண்டும் என்று அவர்கள் சொல்லியுள்ளனர். இவற்றை நான் ஆற்றில் போட விரும்புகிறேன். ஆறு நம் ஊரில் சற்று

தூரத்தில்தானே உள்ளது. என்னால் தினசரி அவ்வளவு தூரம் செல்ல முடியவில்லை. எனவே, நீண்ட நாட்களாக அவற்றை மூட்டை கட்டி வைத்திருந்தேன். எனக்கும் வயதாகிறது அல்லவா? எந்த நேரத்தில் இறப்பு வரும் என்று யாருக்குத் தெரியும்? ஆற்றில் போடாமல் இறந்து விட்டால்? எனக்கு ஆத்ம சாந்தி கிட்டாமல் போய்விடுமே! எனவேதான் இந்த நற்செயல் மூட்டையை ஆற்றில் போடப் போய்க் கொண்டிருக்கிறேன்..." என்று தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

துறவியார் சொன்னதைக் கேட்ட ஊர் மக்களிடம் ஒரு எண்ணம். 'நாமும் நற்செயல்களை மூட்டைகட்டி ஆற்றில் ஏன் வீசி விடக் கூடாது? எல்லாருக்கும் ஆத்ம சாந்தி கிடைக்குமே?' என்று அவர்கள் நினைத்தனர். அனைவரும் கூடி முடிவெடுத்து, அதுவரையில் செய்த நற்செயல்களை அவரவர் தனித்தனியே மூட்டையாகக் கட்டினர்.



என்ன ஆச்சர்யம்! ஒருவரது மூட்டை கூடத் துறவியாரின் மூட்டையளவு பெரியதாக இல்லை. கனத்திலும் பஞ்சு போல் இலேசாக இருந்தது. அனைவரும் துறவியைப் பின் தொடர்ந்து சென்று, தமது நற்செயல் மூட்டைகளை ஆற்றில் எறிந்து விட்டனர்.

ஆனால், அந்த மூட்டைகள் ஆற்று நீரில் மூழ்கவில்லை. நீரின் வேகத்திலும் சுழற்சியிலும் சிக்கிப் புரண்டன. அப்போது அவற்றின் முடிச்சு அவிழ்ந்து போய், மூட்டையினுள் அடைபட்டுக் கிடந்த நற்செயல்கள் யாவும், ஆற்றின் கரை நெடுகிலும் மணலில் ஒதுங்கிச் சிதறி விட்டன. அக் காட்சியைக் கண்ட மக்களுக்குப் பெருமையாக இருந்தது. அவர்களிடம் கர்வம் தலைக்கு ஏறியது. அனைவரும் பெருமையடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டனர்.

"அதோ பார்த்தாயா? அந்த நற்செயலைச் செய்தது நான்தான்... ஒரு சமயம் சோற்றுக்குத் திண்டாடிய ஒருவருக்கு, எத்தனை நாள் நான் சாப்பாடு போட்டிருக்கிறேன் தெரியுமா? அந்த நற்செயல்தான் இது..." என்றார் ஒருவர்.

இன்னொருவர், "ஒருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது, அவருக்கு நான், அடேயப்பா... எத்தனை உதவிகளைச் செய்திருக்கிறேன் தெரியுமா? அது இதோ கிடக்கிறது பார்!" என்றார்.

வேறொருவர் முன் வந்து, "என் நண்பனின் மகன் ஒருவன் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் திண்டாடினான். அவனுக்கு நான்தான் வேலை வாங்கிக் கொடுத்தேன். அந்த நற்செயல் இதோ கிடக்கிறது பார்" என்றார்.

இவ்விதம் அங்கிருந்த ஒவ்வொருவரும், தாம் செய்த நற்செயல்களைச் சுட்டிக் காட்டிப் பெருமையடித்துக் கொள்ளலாயினர்.

ஆனால், துறவியார் மட்டும் வாயே திறக்கவில்லை. சற்று தூரத்தில் நின்று, அங்கு நடப்பதை எல்லாம், இலேசான புன்முறுவலுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

சரி... அவருடைய நற்செயல்

மூட்டைக்கு என்ன நேர்ந்தது?


அதை ஆற்று நீர் விழுங்கி விட்டது. ஆம்– அது போய் ஆற்றின் அடித்தரையில் கவலையற்று உட்கார்ந்து விட்டது.

'ஆற்று நீரின் இத்தனை வேகத்திலும், அவரது மூட்டை மட்டும் ஏன் சுழலில் சிக்கவே இல்லை? அதன் முடிச்சும் அவிழவே இல்லையே! அது ஏன்?' இது தான் அனைவருக்கும் புரியாத புதிராக இருந்தது.

சிலர் துறவியிடம் சென்று கேட்டு விட்டனர். "உங்கள் ஒருவரின் நற்செயல் மூட்டை மட்டும் எப்படி தண்ணீரில் மூழ்கியது?"

"ஓ... அதுவா? என் மூட்டை மிகவும் பெரியது. அதில் நற்செயல்கள் மிகமிக அதிகம். எனவே நல்ல கனம். அது போதாது என்று நான் ஒரு கனம் மிக்க கல்லையும் வைத்து மூட்டையை இறுகக் கட்டி, அதை ஆற்றில் போட்டேன்" என்ற துறவி, "ஏன் தெரியுமா? எனது நற்செயல்கள் இப்படி வெளிவந்து, கரையோரம் ஒதுங்குவதை நான் விரும்பவில்லை. ஆனால் உங்கள் விருப்பம் இதுவாக இல்லை – 'நாம் செய்த நற்செயல்களைப் பற்றிப் பலரும் அறிந்து கொள்ள வேண்டும். அதற்காக எல்லாரும் நம்மைப் போற்றிப் புகழ வேண்டும்' என்றே விரும்பினீர்கள். இங்கு வந்ததும் இதே எண்ணத்தில்தான்... இப்போது நீங்கள் பேசிக் கொண்டிருந்தது அதை உறுதி செய்து விட்டது. மேலும், கல் எதையும் நீங்கள் அதனுடன் வைத்துக் கட்டவில்லை. எனவே தான், மூட்டை அவிழ்ந்து உங்கள் நற்செயல்கள் கரையோரம் ஒதுங்கிக் கேலிக்குரிய பொருளாகக் கிடக்கின்றன" என்று விளக்கினார்.

அதைக் கேட்டு ஊரார் அனைவரும் வெட்கித் தலை குனிந்தனர்.



"அரபிக் கடல் பெருசுன்னு எப்படி சொல்லறே?"

"அதுதான் அர'பிக்' கடலாச்சே!"

– பொன் குமார்.



உலகிலேயே நீண்ட காலம் ஆட்சி செய்தவர் எகிப்திய அரசர், 'இரண்டாம் எப்பியராம்' என்பவர். இவர் தொண்ணூறு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார்!

– இரா. சுகன்யா, மங்கைநல்லூர்

விலை என்ன?

1961-ஆம் ஆண்டு குழந்தைகள் புத்தக டிரஸ்ட் தனது முதல் புத்தகத்தை வெளியிட்டது. நேரு மகிழ்ச்சி அடைந்தார். 'இதன் விலை என்ன?' என்றார்.

வெளியிட்டாளர்கள் "ஐந்து ரூபாய்" என்றார்கள்.



நேரு, "இந்தியாவில் எத்தனை குழந்தை இந்த விலை கொடுத்து புத்தகம் வாங்கும்?" என்று வருத்தத்துடன் கூறி புத்தகத்தின் விலையைக் குறைக்கச் சொன்னார்.

வெளியீட்டாளர்களும் புத்தகத்தின் விலையை குறைத்தனர். நேரு மன மகிழ்ந்தார்.

ஆதாரம் : மேதைகளின் கருத்துக் களஞ்சியம் எனும் நூல்.

தகவல் : கே. அலெக்சாண்டர், தூத்துக்குடி.


தீரசேனன் வென்ற
திகில் மலை!
3
கதை : விஜி
படம் : தாமரை
தீரசேனன் பாதை தெரியாமல் அப்படியே நடந்து கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் பாதை தென்பட்டது.
அருகில் இருந்த மரத்தில் ஏறி கூழைக் குடித்தான்.
தூக்கம் அசத்தியது. சற்று கண் அயர்ந்தான்.
சற்று நேரத்தில் கிடுகிடுக்கும் பயங்கர சத்தம் கேட்டு கண்விழித்தான் தீரசேனன்.
ஐயோ! ராட்சத பூதம்! வாள் எங்கே?
பதட்டத்தில் வாள் கைதவறி கீழே விழுகிறது.


என்னை மீறி உன்னால் அற்புத நீரை எடுக்க இயலுமா? ஹா! ஹா!
அங்கே பார் என் அண்ணன் நின்று கொண்டிருக்கிறான்.
எங்கே? முதலில் அவனை கவனிக் கிறேன்.
பூதம் பிடியைத் தளர்த்த வாளைப் பாய்ந்து எடுத்தான் தீரசேனன்.
ஐயோ! என்னை ஒன்றும் செய்யாதே. இந்த வாள் வைத்திருப் பவருக்கு நான் அடிமை.
எனக்கு ஒரு உதவி செய்.
கட்டளை இடுங்கள்.
என்னை மலை உச்சிக்கு அழைத்துச் செல்.
உத்தரவு இளவரசே!


என்மேல் ஏறிக் கொள்ளுங்கள்.
அரை நாளில் அற்புத நீர் ஊற்றை அடைந்தனர்.
எஜமானரே! அற்புத நீர் ஊற்றை ஒரு அரக்கன் காவல் காக்கிறான். அவனை சமாளித்தால்தான் நீரை எடுக்க முடியும்.
என்ன செய்யலாம்? இந்த வாளால் சமாளிக்க இயலாதா?
கடினம்தான்! ஆனால் அவன் இடது கால பெரு விரலில்தான் உயிர் இருக்கிறது.
உனக்கு என் நன்றி.
தீரசேனன் அரக்கனிடம் சென்றான்.
ஹா! ஹா! ஹா!
அரக்கனின் சிரிப்பால் மலையே அதிர்ந்தது.


தீரசேனன் அரக்கனிடம் சண்டை இட்டான்.
தீரசேனனுக்கு பயங்கர காயம் ஏற்பட்டது.
ஆ!
ஐயோ! அற்புத நீர் எடுக்காமல் என் உயிர் போகப் போகிறதோ!
கீழே விழுந்த தீரசேனன் அரக்கனின் பெருவிரலை நோக்கி வாளைப் பாய்ச்சினான்.
ஹா..ஹா
தொடரும்

யாருடைய தலையில் எது இருக்க வேண்டும்?
– போட்டி முடிவு

தபால் துறையின் வேலை நிறுத்தத்தால் நிறைய வாசகர்கள் இப்போட்டியில் பங்குபெற இயலவில்லை என்பதை அறிய முடிகிறது. கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளையே தந்திருந்தார்கள். எனவே பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. ஆர். சாந்தி, ஈரோடு
2. என். முத்துகுமார், காளையார் கோவில்
3. பா. ஸ்ரீவித்யா, மேட்டூர் அணை - 2
4. எஸ். பால கௌரி, கோப்பனூர்புதூர், கோவை மாவட்டம்
5. பி. கார்த்திக், கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்
6. எம். ஐஸ்வர்யா, திருநெல்வேலி
7. வி. வெங்கடசுப்ரமணியன், சென்னை
8. ஏ.சி. பூர்ணிமா, கலவை, விழுப்புரம் மாவட்டம்
9. டி. தேவராஜ், செங்கம்
10. மு. ரேவதி, மணல்மேடு, மயிலாடுதுறை
11. வி.பி. ராகவேந்திரன், புத்தூர், திருச்சி மாவட்டம்.
12. சாவித்திரி, பரவை, மதுரை மாவட்டம்
13. மோ. சரவணன், ஆற்காடு, வேலூர் மாவட்டம்
14. எஸ். கவிதா, கூடலூர்
15. ஜெ. தீபப் பிரியன், ஐந்தாம் வகுப்பு, குரு துரோணா மெட்ரிக்குலேஷன் பள்ளி, கண்ணமங்கலம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

சரியான விடை
1. வண்டி ஓட்டுபவர் – கோமாளி
2. மீன் பிடிப்பவர் – ஆசிரியர்
3. கரகம் – சீக்கியர்
4. கிருஷ்ணன் – கிரிக்கெட் வீரர்
5. அரசர் – சுதந்தரப் போராட்ட வீரர்
6. போலீஸ் – காய்கறி விற்பவர்

குறளைக் கண்டுபிடியுங்கள்!

தலையாய அறம்

நூலோர் தொகுத்த நல்லறங்கள்
நூறு நூறாய் இருந்தாலும் –
மேலாய் நிற்கும் அறம் எதுவோ?
மெல்ல எனக்கும் சொல்லுங்கள்.

கோயில் பலவும் கட்டுவித்தல்
குளங்கள் பலவும் வெட்டுவித்தல்
நோயில் வாடும் ஏழையர்க்கு
நோய்கள் தீர உதவிடுதல்...


பாதை ஓரம் மரம்நடுதல்,
பள்ளிக் கூடம் வைத்திடுதல்,
அனைத்தும் நல்ல அறங்கள்தாம்...

அதற்கும் மேல் ஓர் அறம் உண்டாம்...

கொல்லா நோன்பை மேற்கொள்தல்
குறிப்பாய் நல்லறம் என்றாலும்..
பல்லுயிர் ஓம்பிப் பகுத்துண்ணல்
பாரே போற்றும் நல்லறமாம்!


– ரா. பொன்ராசன்



பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.








என்ன ஒற்றுமை? — போட்டி

இங்கு நான்கு தொகுதிகளாகப் பதினாறு படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டி இதுதான்: முதல் படம் "சீப்பு" என்று சொல்வீர்கள். அதே போல் மற்ற மூன்று படங்களையும் வாய்விட்டுப் 'படியுங்கள்'. அப்போது ஓர் ஒற்றுமை தெரியவரும். இதே ஒற்றுமை இதர மூன்று தொகுதிகளிலும் உண்டு. அந்த ஒற்றுமை



என்ன? கண்டு பிடித்து எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 30.9.98. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதினால் பரிசு குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097

வல்லாள

கர்நாடகத்தில் பானு என்ற நகரை வல்லவராஜன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் மனைவி கமலினி. அவர்களுக்கு நெடுநாள் தவமிருந்து ஒரு பிள்ளை பிறந்தது. என்ன கொடுமை! குழந்தை பிறந்தவுடன் அழவில்லை! வைத்தியர்கள் சோதித்துப் பார்த்து உனமை என்று கூறினர். அதோடு குழந்தையின் உடலெங்கும் கொப்பளங்களாக இருந்தன.

அம்மை போட்டிருக்கிறதென்று வேப்பிலையும், மஞ்சளும் அரைத்துப் பூசினர். உள்ளுக்கும் மருந்து கொடுத்தனர். மாரியம்மன், காளி கோவில்களுக்கு ஆராதனையும் செய்தான் மன்னன். குழந்தையின் கொப்பளத்திலிருந்து சீழும், இரத்தமும் வடிந்தது. தாதிகள் குழந்தையைத் தொடவே அஞ்சினர். இந்த நிலையில் குழந்தை குருடு, செவிடு என்றும் தெரிந்தது.

அரசன் வைத்திய வல்லுனர்களை அழைத்து எல்லாவித வைத்தியங்களும் செய்தான்.



இதனிடையே குழந்தை வளர்ந்தது. பன்னிரண்டு ஆண்டுகளாக மருத்துவம் செய்து அலுத்த அரசன் குழந்தை தட்சணை தன் புகழின் கனங்கமாக நினைத்தான். அத

விநாயகர்

ஆர். பொன்னம்மாள்

னால் அவனைக் கொடிய வனவிலங்குகள் வாழும் காட்டில் விட திட்டம் தீட்டினான்.

வல்லவனின் திட்டத்தைத் தெரிந்து கொண்ட கமலினி யாருமறியாதபடி தட்சனோடு காட்டிற்குப் போய் விட்டாள்.

அவள் இருந்த வனத்துக்கு அருகில் இருந்த ஊர் குண்டினபுரம். அங்கே மகனோடு சேர்ந்து பாடிப் பிச்சை எடுப்பாள். குருட்டு, ஊமையான தட்சனின் நிலை கண்டு பலர் கருணை காட்டுவார்கள். சிலர் அவனது தேக ரணங்களைக் கண்டு வெறுத்து விரட்டுவார்கள்.

முக்கால முனிவர் ஒருநாள் அவர்களுக்கு எதிரே வந்து கொண்டிருந்தார். முக்காலமும் உணர்ந்தவராதலால் முக்கலர் என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. பலத்த காற்று வீசியதால் முக்கலரின் காவியாடை தட்சனின் மேனியில் பட்டது.

அவ்வளவுதான்! "அம்மா" என்றான் தட்சன். அவன் உடலிலிருந்த காயங்கள் ஒவ்வொன்றாய் மறைவதைக் கண்டு ஆனந்தப் படுவதா, மகன் பேசுவதை எண்ணி மகிழ்வதா என்று கமலினி திகைத்தாள்.

"அம்மா, உங்களையும், முனிவரையும் பார்க்க முடிகிறது" என்று கூறி தட்சன் தாயை மேலும் திணறடித்தான்.

"கமலினி! உன் புதல்வனால் இனி மற்றவர் பேச்சைக் கேட்கவும் முடியும். அவன் செவிட்டுத் தன்மை இன்றோடு நீங்கியது" என்றார் முக்கல முனிவர்.

'தடார்' என்று முனிவர் காலடியில் விழுந்து கண்ணீரைப் பெருக்கினாள் கமலினி.





"ஸ்வாமி! உங்களைத் தழுவிய காற்று என் மகன் மேல் பட்டதால் என் புதல்வனின் எல்லாக் குறைகளும் தீர்ந்தன. தாங்கள் மகான். இந்த அளவு துன்பப்பட என் குமாரன் செய்த குற்றமென்ன? அதைத் தெரிந்து கொண்டால் இனி அம் மாதிரி தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள முடியும் அல்லவா?" என்று வேண்டினாள்.

முற்கலர் "கமலினி எழுந்திரு. நாம் தெரு முனையில் உள்ள விநாயகர் ஆலயத்தில் போய் பேசுவோம்." என்றார்.

மூவரும் விநாயகர் ஆலயம் வந்தனர். முற்கலர், பிராகாரத்தில் தலவிருட்சத்தின் கீழ் அமர்ந்தார். கமலினியும், தட்சனும் பக்தர்களும் முனிவர் எதிரே நின்றிருந்தனர். முற்கலர் கூறத் தொடங்கினார்:

சிந்து தேசத்தில் கலியாணன் என்ற வணிகர் தன் மனைவி இந்துமதியோடு வாழ்ந்து வந்தார். அவர்களுடைய ஒரே செல்வனின் பெயர் வல்லாளன்.

அவனுக்குப் பிள்ளையார் மேல் அதிக பக்தி. ஆற்றங்கரையிலும், குளத்தங்கரையிலும், தெரு முனைகளிலும் தரிசனம் தருகிறார். அருகம்புல், எருக்கிலை, அவல், பொரி கடலை என்று எளிய பொருள்களால் திருப்திப் படுகிறார்." என்று விநாயகரைப் பற்றி நண்பர்களிடம் பெருமையாகப் பேசுவான்.

ஆற்றில் ஒருநாள் குளிக்கும்போது வல்லாளன் காலில் ஒரு கல் இடறியது. அதைத் தூக்கி எறியலாம் என்று எடுத்தவன் கண்களுக்கு அது விநாயகராகக் காட்சி அளித்தது.

அதை பாசி நீங்கத் தேய்த்தான். தோப்பில் வைத்தான். வீட்டிலிருந்து சந்தனம், குங்குமம் கொண்டு வந்து வைத்தான். காட்டுப்பூக்களை மாலையாகக் கட்டிச் சாற்றினான். அவனுக்குத் தெரிந்த போற்றிகளைச் சொல்லி பூஜித்தான். தாய் கொடுத்த அவல், பொரி, கடலை, தேங் காய்ச்சில், வெல்லம் கொண்டு நிவேதித்தான்.

இந்த பூஜையில் எல்லாச் சிறுவர்களுக்கும் ஈடுபாடு வந்தது. 'என்னையும் சேர்த்துக்கோடா' என்று வல்லாளனிடம் கெஞ்சினர்.

ஒரு பையன் தரையைப் பெருக்கினால் இன்னொருவன் துணி கொண்டு துடைப்பான். குளிப்பதற்கு செம்பு செம்பாய் ஆற்றிலிருந்து நீர் கொண்டு வந்து விநாயகருக்கு அபிஷேகம் செய்வார்கள். வசதியான வீட்டுப் பிள்ளைகள் பால், தேன், தயிர், சந்தனம் எல்லாம் கொண்டு வந்து அபிஷேகிப்பார்கள். சிலர் ஊதுவத்தி, சூடம், சாம்பிராணி என்று கொண்டு வந்தனர்.


தோப்புக்கு உரிமையாளர் புதல்வன் தென்னை மட்டைகளைக் கொண்டு வந்தான். பந்தல் போடுபவர் மகன் மற்ற தோழர்களின் உதவியோடு பந்தல் போட்டான். பலர் மாவிலைத் தோரணம் கட்டினர். சமையற்காரர் மகன் பாயசம் தயாரித்தான்.

விநாயக சதுர்த்தி விழா மும்முரத்தில் வீடு என்று ஒன்று இருப்பதையே சிறுவர்கள் மறந்து விட்டனர். பூஜை முடிந்து, பஜனை தொடங்கியது.

அங்கே குழந்தைகளின் பெற்றோர் இந்துமதியின் வீட்டிற்கு வந்து கூப்பாடு போட்டனர்.

"இந்து! வரவர உன் பிள்ளையின் துஷ்டத்தனம் தாங்க முடியவில்லை! நீயாக அடக்குகிறாயா? இல்லை... நாங்கள் அடக்கட்டுமா? என் பிள்ளை ஒரு வாரமாய் வேத பாடசாலைக்கே போகவில்லை!" என்று குமுறினார் ஒருவர்.

"பெண் பிள்ளையிடம் பேசி என்ன பயன்? கலியாணன் வரட்டும். இன்று இரண்டிலொன்று கேட்காமல் விடுவதில்லை! மாட்டிடம் போய் என் மகன்



"நீ எங்கே போறே?"
"ரத்ததான விழாவுக்கு!"
— பாளை பசும்பொன்

பால் கறந்திருக்கிறான். அது உதைத்து படாத இடத்தில் பட்டிருந்தால் அவன் எதிர் காலமே பாழாய்ப் போயிருக்குமே" என்று குமுறினார் ஒருவர்.

"நேற்றைக்கு சந்தனம் அரைக்கிறேன் என்று தோலுரிந்து ரத்தம் வந்து விட்டது என் பிள்ளைக்கு! ஊமையாட்டம் தோப்பிலே உட்கார்ந்து கொண்டு இவர்களைத் தூண்டி விடுகிறான்'' என்றார் வேறொருவர்.

''உனக்கு ஒரே பிள்ளை. செல்லம் கொடுக்கிறாய்! கணவனில்லாத எனக்கு என் பிள்ளைதான் குடும்பத்தைத் தாங்க வேண்டும். தம்பிகளைப் படிக்க வைக்க வேண்டும்" என்று அழுதாள் மற்றொருத்தி.

இந்தச் சமயம் கலியாணன் வந்தார். எல்லோரும் அவரிடம் புகார் பட்டியல் படித்தனர். இந்துமதி எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் மூங்கில் கழியோடு ஆற்றங்கரைத் தோப்புக்கு விரைந்தார் கலியாணன்.

கலியாணனைக் கண்டதும் பஜனையைப் பாதியில் விட்டு விட்டு "வல்லாளா! உங்கப்பா கோபமா வருகிறார்டா! மூங்கில் தடியோடு வருகிறார்'' என்று கத்திக் கொண்டே நாலாபுறமும் ஓடி ஒளிந்தனர் எல்லாப் பையன்களும்.

''என்னைப் பிள்ளையார் காப்பாற்றுவார். நான் ஒரு தப்பும் செய்யவில்லையே" என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்ற வல்லாளனை தலைமுடியைப் பிடித்துக் கொண்டு மூங்கில் கம்பால் விளாசினார் தந்தை.


வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் தீப்பிடித்த இடத்துக்குக் காற்றாக வார்த்தைகளைக் கொட்டியது.

''அடித்து வளர்க்காத பிள்ளையும், துவைத்துக் கட்டாத துணியும் பாழ். அப்படிப் போடு– அப்போதுதான் புத்தி வரும்" என்றார்கள்.

கம்பு உடைந்தது. கையால் மொத்தினார். "இந்தக் கல்லாடா பிள்ளையார்?" என்று பூஜை செய்த கல்லைத் தூக்கி ஆற்றில் எறிந்தார்.

வல்லாளன் அழுதுகொண்டே தந்தையின் கால்களில் விழுந்து கதறினான்.

"அப்பா, பிள்ளையாரைத் திட்டாதீர்களப்பா... பூஜை செய்த விநாயகரைத் தூக்கி எறிந்து விட்டீர்களே! அவரை எடுத்து வந்து வைத்து மன்னிப்புக் கேளுங்கப்பா... இல்லையானால் திட்டிய வாய் பேச முடியாமல் போய் விடும்'' என்று கெஞ்சினான்.



''வங்கி அதிகாரிக்கு பிடிக்காத பாயசம் எது?''

''சேமியா பாயசம்!''

– ஆன்ட்டி ஜீ

கலியாணன் எகத்தாளமாகச் சிரித்தார். கோபம் வெறியாக மாறியது. போட்ட பந்தலைப் பிய்த்து எறிந்தார்.

"என்னையா கல்லை எடுத்து வந்து மன்னிப்புக் கேட்கச் சொல்கிறாய்? அவ்வளவு பெரிய பக்தனாகி விட்டாயா? நானல்ல... நீயும் அந்தக் கல்லை எடுத்து வரக் கூடாது" என்று உறுமியபடி, பந்தல் பிரித்த கயிறால் மரத்தில் இறுகக் கட்டினார்.

"உன் விநாயகருக்கு சக்தி இருந்தால் உன்னை அவிழ்த்து விடட்டும். பட்டினி கிடந்தால் தான் உனக்கு புத்தி வரும். பசி தீர்க்கும் விக்னேஸ்வரரை ஜபித்துக் கொண்டிரு. வாயைக் கட்டி போடவில்லையே'' என்று நையாண்டியாகச் சொல்லி விட்டுப் போய் விட்டார்.

வல்லாளன் சற்று முன் கோலாகலமாக பூஜையும் பஜனையுமாக இருந்த இடத்தைப் பார்த்துக் கண்ணீர் பெருக்கினான்.

"கணேசப் பெருமானே! நிந்தித்தவர்களுக்கு உடனே தண்டனை கொடுத்தாலல்லவா உலகில் பக்தி பெருகும்! என் தந்தையிடம் உனக்கும் பயமா? இவ்வளவு தூஷித்த இவரை என் தகப்பன் என்று ஏற்று இவர் தயவில் பசி தீர்க்க இனி நான் விரும்பவில்லை. மூச்சை அடக்கி உயிர்



''அந்த மணி ஏன் கோர்க்க முடியாம வழுக்கிட்டுப் போகுது?''

''அது 'பாசி' மணி ஆச்சே!''

— சங்கா கணேசன்

துறப்பேன்'' என்று கண்களை மூடி மூச்சை இழுத்தான்.

"வல்லாளா! கண்ணைத் திற" என்ற குரல் கேட்டு கண் விழித்தான் சிறுவன்.

எதிரே யானை முகத்தோன் குறுஞ் சிரிப்போடு!

"வல்லாளா! உன்னைத் துன்புறுத்திய உன் தந்தைக்கும், அதற்கு பக்க மேளம் கொட்டிய தூர்த்தர்களுக்கும் காட்சி கொடுக்க விரும்பாத நான் அவர்கள் போவதற்காகக் காத்திருந்தேன். உன் கெஞ்சுதலையும் கோரிக்கையையும் ஏற்காத உன் தந்தையின் காதுகள் இனி எவர் பேச்சையும் கேட்காது. உன்னைப் பழித்த அவர் வாயிலிருந்து இனி சொற்களே வராது. அற்புதமான உன் பூஜையைப் பார்க்க மறுத்த அவரது விழிகள் இந்த உலகில் வேறெதையும் பார்க்காது. உன் மேனியில் முண்டு முண்டாய்த் துடித்திருக்கும் அத்தனை காயங்களும் அவர் மேனியில் கொப்புளங்களாக மாறி விடும். என் பக்தர்களின் துயரம் கண்டு துடிப்பவன் நான்.

"இனி உனக்குப் பசி தாகம் இல்லை. ஆயுள் முடியும் வரை என்னை ஆராதித்த பின் என்னருகில் வந்து விடுவாய்!

"நீ பூஜித்த கல் என் உருவமாகவே மாறி இந்த இடத்தில் வல்லாள விநாயகராக எல்லோராலும் கொண்டாடப்படும்.

''இப்பிறவியில் மட்டுமின்றி மறு பிறவியிலும் செவிட்டு ஊமையாய், குருடனாய், உடலில் கொப்புளங்களோடு பிறப்பான் உன் தந்தை. உன் தந்தை உன்னை வெறுத்தது சில மணி நேரம்தான்! அவன் தந்தையோ பன்னிரண்டு ஆண்டுகள் அவனை காட்டிற்கே துரத்தி விடுவான். காய், கனி, கிழங்குகளை உண்டு, பிச்சையெடுத்து என்னை பூஜித்த பின் என் பக்தர் ஒருவரால் அவன் குறைகள் நீங்கும்.

''இனி உனக்குத் தாயும், தந்தையும், தோழனும் தெய்வமும், வாழ்வும் நானே'' என்று கூறி மறைந்தார் விநாயகர்.

வல்லாளன் நடந்தது கனவா, நனவா என்று பிரமித்திருந்தான். பிறகு தெளிந்து ஆற்றங்கரையில் பூஜித்த விநாயகரைத் தேடினான். கிடைத்தது.

கல்லாய் இருந்த கணபதி வல்லாளன் கைக்கு வந்ததும் கணேசரானார்.

மறுபடி அவரை ஸ்தாபித்து பூஜை செய்தான் சிறுவன். வீடு வருவதற்குள் ளாகவே கலியாணனின் உடலெல்லாம் கொப்புளங்கள். வாய் பேச முடியாமல் கோணிக் கொண்டது. பார்வை தடுமாற தூணில் மோதிக் கொண்டு விழுந்தான் கலியாணன்.

இந்துமதி கணவன் நிலை கண்டு கதறினாள். அவள் பேசிய எதுவும் அவன் காதில் விழவில்லை! அவன்தான் விநாயகர் கோபத்தால் செவிடாகி இருந்தானே!

இந்துமதி ஆற்றங்கரைக்கு ஓடினாள். வல்லாளனை வீட்டுக்குப் பலவிதமாய் அழைத்துத் தோற்றுப் போனாள். தன் இறுதிக்காலம் வரை கணவனுக்கு முகம் கோணாமல் பணி விடை செய்தாள்.

வல்லாளன் ஆயுள் முடியும் நேரம் பூத கணங்கள் அழகிய விமானத்தில் அவரை அழைத்துச் சென்றன.

கலியாணன்தான் இப்பிறவியில் தட்சனாய்ப் பிறந்து தன் பாப வினையை அனுபவித்தான். விநாயகப் பெருமானை தினந் தோறும் வழிபட்டு வாருங்கள். மன்னரே வந்து தங்களை அழைத்துச் செல்வார். விநாயகர் தனக்கு ஊறு செய்பவர்களை விட தன் பக்தர்களுக்குத் துன்பம் விளைவிப்பவர்களை சும்மா விட மாட்டார்'' என்று கூறி ஆசியளித்துச் சென்றார் முற்கல முனிவர்.


தாயும் மகனும் தினமும் பயபக்தியுடன் விநாயகரை வழி பட்டனர். வல்லவராஜன் தன் மனைவியையும், மகனையும் அழைத்துச் சென்றான்.




பயணி: தங்க அறை கிடைக்குமா?

விடுதியாளர்: இங்கே சாதாரண அறை தான் இருக்கு. 'தங்க' அறை எல்லாம் இல்லை!

— கே. ஆர். உதயகுமார், சென்னை.






"உங்கப்பா மிளகாய் வியாபாரம் செய்கிறாரா?"

"எப்படி கண்டுபிடிச்சே?"

"காரசாரமா பேசறதை வைத்துத் தான்!"

—கோ. முத்துகுமார், பத்தாம் வகுப்பு,
அரசு மேல்நிலை பள்ளி,
பெரியதச்சூர்.




"சொத்து உள்ள நாடு எது?"

"தெரியலையே!"

" 'ஆஸ்தி'ரேலியா தான்!"

— ச. சௌமியா,
எட்டாம் வகுப்பு, காட்பாடி.



"ஒரே ஒரு கிரகத்திற்கு மட்டும் வாய் இருக்கு. சொல் பார்ப்போம்!"

"செவ்வாய் கிரகம் தானே!"

— மு. ப. கௌதம் பாரதி,
தேவகோட்டை.

"காட்டில் கால்பந்தாட்டம் நடந்ததே, எந்த அணி வெற்றி பெற்றது?"

"கழுதைகள் அணிதான்!"

— தாரை மா. மகேஷ்ப்ரியன்



● ந. பெரியாழ்வார், நாகர்கோவில்

? நெஞ்சுச் சளி பச்சை நிறத்தில் வருவது ஏன்?

! நம் நுரையீரல்களில் சளியை உருவாக்குவது கிருமிகள்தானே! அவற்றுள் 'ஸ்டெஃபைலோகாக்கஸ் ஆரியஸ்' (Staphylococcus Aureus), ஸ்டோமோனஸ் பயோசயனியா (Pseudomonas pyocyanea) என்ற கிருமிகள் தாக்கும்போது சளி பச்சை நிறத்தில் வெளியேறும். காரணம் முதல் வகைக் கிருமி மஞ்சள் நிறத்தில் இருக்கும். இரண்டாவது வகை நீல நிறத்தில் இருக்கும். இரண்டும் சேரும்போது பச்சை நிறம் உருவாகும். சந்தேகமிருந்தால், உன் வண்ணக் கலவைப் பெட்டியில் இருக்கும் மஞ்சளையும் நீலத்தையும் சேர்த்துப் பார். பச்சை நிறம் வருவதைக் காண்பாய்.

● மண்ணடி,
எஸ். பாலாஜி,
சென்னை-1.

?தலைமுறைத் தலைமுறையாகத் தொற்றக் கூடிய நோய்கள் ஏதேனும் உண்டா, டாக்டர்?

! பல நோய்கள் உண்டு, பாலாஜி! சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். தெரிந்து கொள்கிறாயா? சர்க்கரை நோய், மூட்டு வாதம், ஹீமோஃபிலியா, நிறக் குருடு, சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ், சிறுவர்களுக்கு வருகின்ற கண்புற்று நோய், சிக்கில் செல் அனீமியா, பீனைல் கீட்டோனூரியா போன்றவை.

● ஜெனிபா, ஜூரேனிபுரம்

? சீனி, சாக்லேட், லட்டு போன்ற இனிப்பு வகைகளை சாப்பிட்டவுடன் காபி சாப்பிட்டால் காபி இனிப்பின்றி இருக்கிறது. இதற்கான காரணம் என்ன என்பதைக் கூறுங்கள், டாக்டர்!

! கிணற்று நீரில் ஒரு கல்லை எறிகிறாய். வட்ட வட்டமாக அலைகள் கிளம்புவது தெரியும். மீண்டும் ஒரு கல்லை எறிகிறாய். இந்தக் கல் முதலில் எறிந்த கல்லைவிட பெரிதாக இருந்தால்தான் புதிய, பெரிய அலைகள் உண்டாவது தெரியும்; மாறாக சிறிய கல்லாக இருந்தால் புதிய அலைகள் உண்டாவது தெரியாது. இது போலவே நீ சீனி, சாக்லேட், லட்டு சாப்பிடும்போது உன் நாக்கில் உள்ள சுவை மொட்டுகளில் குறிப்பிட்ட அளவுக்கு சுவையுணர்ச்சி ஏற்பட்டு உனக்கு இனிப்புச் சுவையைத் தெரிவித்திருக்கும். அடுத்ததாக நீ காபி சாப்பிடும்போது காபியில், முதலில் சாப்பிட்ட இனிப்பை விட மிக அதிகமாக இனிப்பு இருந்தால்தான் காபியின் இனிப்புச் சுவையை நாக்கு உணர முடியும். இனிப்பு குறைவாக இருந்தால் காபியின் சுவை குறைவாகத்தான் தெரியும்.



மனிதனுக்கு ஒரு சிறுநீரகம் போதுமா?

● ராஜலட்சுமி நாகராஜன், மேலப்பாதி.

? எந்த வகை ரத்தம் கிடைப்பது மிக மிக அரிது?

! 'பம்பாய் வகை' (Bombay Group) ரத்தம்தான் உலகிலேயே மிக மிக அரிதான ரத்த

வகை. மற்ற ரத்த வகைகளிலிருந்து பல வகையில் இது மாறுபட்டுள்ள காரணத்தால் இது அபூர்வமான ரத்த வகையாக உள்ளது. முதன்முதலில் பம்பாயில் (இப்போது மும்பை) இந்த ரத்த வகை உள்ள நபரைக் கண்டுபிடித்தனர். எனவேதான் இதற்கு 'பம்பாய் வகை' என்ற பெயரும் கிடைத்தது.

● **டி. ஜோஸ்பின், ஈரேனிபுரம்**

? பூனை, நாய் போன்றவை பிறந்த 2 வாரங்களுக்குப் பின்தான் கண் திறக்கின்றன. பசுவின் கன்றுக்கு பிறக்கும் போதே கண்கள் திறந்திருக்கின்றன. தாயின் வயிற்றில் குழந்தை கண் திறந்திருக்குமா? அல்லது பிறந்த பின்னர் தான் குழந்தைகள் விழிக்கின்றதா?

! தாயின் கருப்பையில் முழு வளர்ச்சியடைந்ததும் குழந்தை சில நொடிகளுக்குக் கண் திறந்து பார்க்கும். திரும்பவும் கண்களை மூடிக் கொள்ளும். குழந்தை பிறந்த பின்பு வெளியுலக தட்ப வெட்ப சூழ்நிலைகளின் தூண்டுதலால் கண்களை அடிக்கடி திறந்து பார்க்கும்.



● **காழி, ஆர். சீதாராமன், சீர்காழி**

? டிபன், சாப்பாடு என்று ஒரு நாளைக்கு எத்தனை முறை சாப்பிட வேண்டும்? எந்த நேரத்தில் சாப்பிட வேண்டும்?

! மொத்தம் நான்கு வேளைகள் சாப்பிடலாம். காலை எட்டு மணி, மதியம் 12½ மணி, மாலை 5 மணி, இரவு ஒன்பது மணி சாப்பிட வேண்டிய நேரங்கள். எந்த உணவைச் சாப்பிடுவது, எவ்வளவு சாப்பிடுவது என்பது அவரவர் வயது, உடல் எடை, செய்கின்ற வேலை, இருக்கின்ற நோய்கள் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும்.

● **ஆர். வேங்கடேஷ், குத்தாலம்.**

? கண்கள் வெவ்வேறு நிறமாக இருப்பது ஏன், டாக்டர்?

! கண்களில் உள்ள 'விழித்திரைப் படலம்' (IRIS) எந்த நிறத்தில் உள்ளதோ அந்த நிறம் தான் நம் கண்களுக்கும் அமையும். இந்தியர்களுக்கு இதன் நிறம் கறுப்பு. ஆனால் அமெரிக்கர்களுக்கு இது இளம் பச்சை நிறத்தில் இருக்கும்; சிலருக்கு நீல நிறத்தில் இருக்கும். 'வெள்ளுடல் நோய்' (Albinism) உள்ளவர்களுக்கு இது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

● **வி. கௌரி, சீர்காழி.**

? மனிதனுக்கு ஒரு சிறுநீரகம் இருந்தால் போதுமா? வயதான பின்பு ஏதாவது தொல்லைகள் வருமா?

! நாம் வீட்டுக் கதவுகளுக்குப் பூட்டு வாங்கும்போது இரண்டு சாவிகளைத் தருவார்கள். ஒரு சாவியே போதும். ஏன் இரண்டு தருகிறார்கள்? ஒரு பாதுகாப்பிற்காக. ஒரு சாவி தொலைந்து விட்டால் மற்றொரு சாவியை உபயோகித்துக் கொள்ள. சரி, ஒரு சாவி நிரந்தரமாகத் தொலைந்து விட்டது. கையில் ஒரே சாவிதான் உள்ளது. இப்போது என்ன செய்வது? வீட்டுக் கதவைத் திறப்பதில் மூடுவதில் சிரமமில்லை. ஆனால் இருக்கிற ஒரு சாவியும் தொலைந்து விடாமலிருக்க 'பத்திரம், பத்திரம்' என்று நாம் பத்திரப் படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறதல்லவா? அந்த மாதிரிதான் சிறுநீரக விஷயமும். நமக்கு ஒரு சிறுநீரகம் போதும். ஆனால் அதற்கு எந்த ஒரு தொல்லையும் ஏற்பட்டு விடாமல் பாதுகாக்க வேண்டிய அவசியம் நிறைய உண்டாகும். முக்கியமாக வயதான காலத்தில்!

டாக்டர் கு. கணேசன்

கோலப் போட்டி முடிவுகள்

எஸ். கிரிதா,
மதுரை.





கே. சித்ரா,
லால்குடி, திருச்சி.

எஸ். நித்யா,
பத்தாம் வகுப்பு, 'ஆ' பிரிவு
அரசினர் மேல்
நிலைப் பள்ளி, சிக்கல்,
நாகை மாவட்டம்.



பி. பானுமதி,
திருவாரூர் மாவட்டம்.





எம். கண்ணன்,
ஒன்பதாம் வகுப்பு,
திருநகர், மதுரை.

ஜெ. பாலாஜி,
எட்டாம் வகுப்பு,
ஜி.பி. உயர் நிலைப் பள்ளி,
பட்டுக்கோட்டை.



பா. சுந்தரி,
விருதுநகர்.



ஒன்பதாம் வீடு!

13. விபத்து

சித்ராவுக்கு வலது தோள் பட்டையிலிருந்து மணிக்கட்டு வரை மாவுக் கட்டுப் போட்டுப் படுக்க வைத்திருந்தார்கள்.

"இரண்டு இடங்களில் எலும்பு விரிசல் இருக்கு. குறைந்தது மூன்று மாதங்கள் வரை கட்டு இருந்தாகணும். ஒரு மாதம் வரை கையை அசைக்கக் கூடாது'' என்றார் டாக்டர்.

"இன்னும் இரண்டு மாதங்களில் நான் அவசியம் கலந்து கொள்ள வேண்டிய ஓவியப் போட்டி இருக்கே டாக்டர்?'' என்று கலங்கினாள் சித்ரா.

"இந்தக் கவலை எங்கேயோ குருட்டாம்போக்கில் சிந்தித்தபடி சாலையைக் கடந்தப்போ இருந்திருக்கணும்மா. நல்ல காலம், மோதினது மாருதியா இருந்ததால இந்த மட்டும் போச்சு. லாரியா இருந்திருந்தா உன் கதி என்னவாகியிருக்கும்?'' என்று கேட்டார் டாக்டர்.

"இந்திய சுதந்தரப் பொன் விழாவுக்காக இந்திய ஓவியர் சங்கமே நடத்தும் போட்டி இது டாக்டர். உலகத்தின் பல நாடுகளில் இருந்தும் புகழ் பெற்ற ஓவியர்கள் வந்து நடுவராக இருப்பார்கள். இதில் பரிசு வாங்கினால், பாரீசில் ஓர் ஆண்டுக் காலம் ஓவியப் பயிற்சி பெற நிதி உதவி கிடைக்கும். இவளுடைய இலட்சியமே அதுதான்'' என்று விளக்கினார் பசுபதி.

"முதலில் எலும்பு விரிசல்கள் கூடட்டும். பிறகு பார்க்கலாம்'' என்று சொன்னார் டாக்டர்.

உள்ளே வந்த ஒரு மப்டி போலீஸ்காரர், சித்ராவுக்கு அருகே வந்து நின்றார்.

"என்ன பாப்பா. நான் சொன்னதை நல்லா யோசிச்சியா? இப்போ விட்டுட்டா பிறகு எதுவுமே கேட்க முடியாது. உன் மேல மாருதில வந்து மோதியிருக்கிற ஆள் சாதாரணமானவர் அல்ல. பல கோடிகளுக்கு அதிபர். மிரட்டியே பல லட்சம் கறந்து விடலாம். நான் சரியாகத்தான் நடந்து வந்து கொண்டிருந்தேன். மாருதிக் கார்க்காரர்தான் கண்ணு மண்ணு தெரியாம ஓட்டிக்கிட்டு வந்து எம் மேல மோதிட்டார்னு எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து உங்கப்பாகிட்டயும் கையெழுத்து வாங்கி கேஸ் புக் பண்ணிடறேன். எல்லாம் உன் கையில இருக்கு'' என்று குழைந்தார் போலீஸ்காரர்.

"ஐயா, நீங்கள் எத்தனை முறை கேட்டாலும் என் பதில் ஒரே மாதிரிதான் இருக்கும். தவறு என் மேல்தான். ஏதோ சிந்தனை செய்தபடி நான்தான் சிக்னலைக் கவனிக்காமல் சாலையைக் கடந்தேன். கார்க்காரர் மேல் எந்தக் குற்றமும் இல்லை. அவரிடம் பணம்

கறக்க வேண்டும் என்பதற்காக நான் நடந்ததை ஒருக்காலும் மாற்றிச் சொல்ல மாட்டேன். நீங்கள் இந்த மாதிரி என்னைக் கேட்டதே தவறு" என்று வெறுப்புடன் பதிலளித்தாள் சித்ரா.



வார்டுக்குள் யாரோ வரும் சத்தம் கேட்டது. சித்ராவிடம் தவறான வாக்கு மூலத்திற்காகக் குழைந்து கொண்டிருந்த போலீஸ்காரர் நிமிர்ந்து சல்யூட் அடித்தார்! ஆமாம், ஏற்கெனவே அறிமுகமாகியிருந்த காவல் துறைத் தலைவர்தான் கையில் பூங்கொத்துடன் உள்ளே வந்தார். கூடவே பெரிய மேடம்.

"என்னம்மா இப்படி அசட்டையா இருந்துட்டே? படைப்பாளிகளுக்கு வலது கை எத்தனை முக்கியம்? விபத்து எப்படி நடந்தது? யார் கார்க்காரர்?" என்று அன்பொழுகக் கேட்டு சித்ராவின் நெற்றியை தடவிக் கொடுத்தார் காவல் துறைத் தலைவர்.

காலடியில் நின்றிருந்த போலீஸ்காரர், 'தான் கேட்ட எதையும் கூறிவிட வேண்டாம்' என்று சைகையில் கெஞ்சினார்.

"தவறு முழுக்க என் மேலதான் சார். என்னமோ சிந்தித்தபடி சிக்னலைக் கவனிக்காமல் சாலையைக் கடந்து விட்டேன். அந்த மாருதிக்கார்க்காரர் மேல் எந்தத் தவறும் இல்லை" என்றாள் சித்ரா.

"உன்னுடைய நியாய உணர்வை நான் மனதாரப் பாராட்டுகிறேன் சித்ரா. நீ சீக்கிரமே குணம் பெற வாழ்த்துகிறேன். ஆண்டவனை வேண்டுகிறேன். நான் செய்யக் கூடியது ஏதாவது இருக்கிறதா?" என்றார் காவல்துறைத் தலைவர்.

சித்ரா சிரித்தாள்.

"சுதந்தரப் பொன் விழாவை ஒட்டி இந்திய ஓவியர் சங்கம் இன்னும் இரண்டு மாதங்களில் சென்னையில் ஒரு ஓவியப் போட்டி நடத்த இருக்கிறது. அதில் கலந்து கொள்ளும் வகையில் என் கை குணமாக ஏதாவது குறுக்கு வழி இருந்தால் சொல்லுங்கள் அங்கிள்?" என்றாள் சித்ரா.

"**கு**றும்புக்காரப் பெண்ணே, நாங்கள் நீ நல்லபடியாக கைக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் குணமடைய வேண்டும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பொன்விழாப் போட்டி இல்லையென்றால் என்ன? இந்த மாதிரி ஆயிரம் போட்டிகளில் நீ கலந்து கொண்டு பரிசு வாங்கித் தள்ளப் போகிறாய்! தமாஷ் செய்கிறாயே!" என்று சிரித்த அவர், "இந்த நகைச்சுவை உணர்வு எந்த ரணத்


வெ. நல்லதம்பி

''கோபு வாய்க்கால்ல நேத்து விழுந்துட்டான்.''

''அப்புறம்?''

''வாய்-கால்'ல சிறுகாயம் ஏற்பட்டிருச்சு.''

– அ. பேச்சியப்பன்



ைதயும் போக்கி உடலையும் மனதையும் குணமாக்கவல்லது'' என்று பூங்கொத்தைக் கொடுத்தார்.

செய்தி அறிந்து டாக்டர் அவசரம் அவசரமாக உள்ளே வந்தார். காவல் துறைத் தலைவரை வரவேற்றார். "என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். தயங்காமல் கேளுங்கள்'' என்று பகபதியிடம் கூறிவிட்டு விடைபெற்றார் காவல் துறைத் தலைவர்.

வனிதாவும் தமிழரசி டீச்சரும் உள்ளே வந்தார்கள்.

"பொன் விழா போட்டியில் கலந்து கொண்டு பரிசு வாங்கி, நம் பள்ளியின் பெயரை நாடறியச் செய்யப் போகிறாய் என்று எண்ணியிருந்தோம். இப்படிப் பண்ணிக் கொண்டு விட்டாயே!" என்று துணிவுக்குப் பெயர் போன வனிதா மேடம் கலங்கிய போது சித்ரா வியப்புடன் அவரைப் பார்த்தாள்.

"இப்போ எனக்கு என்ன ஆகிவிட்டது மேடம்? போட்டிக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்கே? அதற்குள் என் கை சரியாகி விடும். நான் கண்டிப்பாகப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு வாங்குவேன். அசெம்பிளியில் என்னை மேடை ஏற்றி நீங்கள் பாராட்டத்தான் போகிறீர்கள். அந்த நம்பிக்கை எனக்கு உறுதியாக இருக்கிறது என்றாள் சித்ரா."

எல்லோரும் சென்ற பிறகு தயங்கித் தயங்கி ஒருவர் வந்தார்.

''அப்பா, இவர்தான் அழகப்பன்,'' என்று வந்தவரை அறிமுகம் செய்து வைத்தாள் சித்ரா.

"எத்தனை தங்கமான குழந்தை! எத்தனையோ முறை ஆசை காட்டியும் விபத்துக்குக் காரணம் தன் தவறே என்பதை எத்தனை உறுதியாகக் கூறி விட்டாள்! உண்மையாகவே இதுதான் துணிவு என்பது. எத்தனை மனவளர்ச்சி இருந்தால் இப்படி ஒரு வாக்குமூலத்தைத் தரும் துணிவு ஏற்படும்?" என்று விம்மிய அழகப்பன், "ஐயா, நீங்கள் எத்தனை பணம் கேட்டாலும் தரக்கூடிய வசதியை ஆண்டவன் தந்திருக்கிறான். நானும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் நியாய உணர்வை மாற்றிக் கொள்ளாது உங்கள் மகள் இத்தனை உறுதியாக இருக்கிறாளே! இவளுக்கு யாராலும் எந்தக் கெடுதலும் ஏற்படாது; ஏற்படுத்தவும் முடியாது! ஆண்டவன் இவள் பக்கம் இருந்து இவளுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்பான்'' என்றார்.

''உங்களைப் போன்றவர்களின் ஆசிதான் அவளுக்கு இப்போது தேவை'' என்று விம்மினார் பகபதி.

"எனக்கு ஏதாவது செய்ய அனுமதியுங்கள். சிகிச்சைக்கான செலவு முழுவதையும் நான் ஏற்கிறேன்'' என்றார் அழகப்பன்.

''அவசியம் இல்லை சார். எங்கள் அலுவலகம் என் மகளுக்குச் சிகிச்சைக்குப் பணம் தந்து விடும். அவள் விரைவில் குணம் பெற வாழ்த்துங்கள். அது போதும்'' என்றார் பகபதி.

ஒரு வாரம் ஓடியது. சித்ராவைப் பற்றிய கவலை ஒரு பக்கம் இருந்தாலும், வீடு தேடும் படலத்தை இடையிடையே நடத்தி வந்தார் பகபதி. இரண்டொரு இடங்களை புரோக்கரோடு சென்று பார்த்தார். ஒன்று, வாடகை பயங்கரமாக இருந்தது. அதைவிட பயங்கரமாக

இருந்தது அவர்கள் கேட்ட முன்பணம். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. ஒன்பதாவது வீடாவது, சித்ரா அமைதியாகச் சிந்தித்து ஓவியம் வரைய ஏற்ற வகையில் இருக்க வேண்டும் என்று அவர் இப்பொழுது எண்ணினார். அதற்குத் தகுந்த மாதிரி எதுவும் கிடைக்கவில்லை.

இந்திரா காட்டன் மில்ஸுக்கு அருகே ஒரு சிறிய வீடு இருந்தது. மொட்டை மாடியுடன், தற்கால நவீன அமைப்பு எதுவுமில்லாமல், சுற்றிலும் பூஞ்செடிகள் நிறைந்திருக்க, பார்ப்பதற்கே கலையழகு நிறைந்ததாக, அதே சமயம் அடக்கமாகவும் இருந்தது அது. பகபதி அந்த வீட்டைத் தாண்டித்தான் அலுவலகம் போவார், வருவார். அந்த வீடு வாடகைக்குக் கிடைக்காதா என்று அவருக்கு அடிக்கடி ஆசை வரும். வசதிக்குப் பொருந்தாத ஆசை என்று அடக்கிக் கொள்வார்.


அன்றும் அலுவலகத்திற்குப் போகும் வழியில் ஒருகணம் நின்று அந்த பங்களா வீட்டைப் பார்த்தார். வீட்டைக் காலி பண்ணி சாமான்களை லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

மனதில் ஒரு நப்பாசை. சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தவரிடம், "ஐயா, வீட்டைக் காலி பண்ணுகிறீர்கள் போலிருக்கே? எனக்கு வீடு தேவைப்படுகிறது. வீட்டுக்காரர் யாருங்க?" என்று கேட்டுப் பார்த்தார்.

"வீடு காலிதாங்க. வீட்டுக்காரர் பெரம்பூரில் இருக்கிறார். பெயர் திருஞானம். அவருக்கு உள்ள எத்தனையோ வீடுகளில் இதுவும் ஒன்று. கேட்டுப் பாருங்க" என்று ஒரு டெலிபோன் நெம்பரைத் தந்தார் அவர்.

தயங்கியபடியே பகபதி போன் பண்ணினார். பெண் குரல் கேட்டது. "இரண்டாயிரம் ரூபாய் வாடகை, இருபதாயிரம் அட்வான்ஸ்" என்று பதில் வந்தது. பகபதி நன்றி கூறி முடித்துக் கொண்டார். வாடகையும் சரி, அட்வான்சும் சரி அவரது நிலைக்கு மீறியது.

வழக்கப்படி நர்சிங்ஹோமுக்கு அழகப்பன் சித்ராவைப் பார்க்க வந்தார். அவரைப் பார்த்ததும் பகபதிக்கு ஒரு யோசனை தோன்றியது. "பெரம்பூர் திருஞானம் என்பவரைத் தெரியுமா?" என்று கேட்டார். எந்த வீடு என்பதையெல்லாம் வியப்புடன் கேட்டுத் தெரிந்து கொண்ட அழகப்பன், "பகபதி சார்,



திருஞானம் என் தந்தையார்தான். அந்த வீடு எங்களுடையதுதான். உங்களால் வாடகை எத்தனை முடியுமோ அதைக் கொடுங்கள் போதும். முன்பணம் எதுவும் வேண்டாம். எந்தவிதத்திலாவது உங்களுக்கு உதவ நான் துடிக்கிறேன். எனக்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள். நீங்கள் எங்கள் வீட்டில் குடித்தனம் இருப்பதைப் பற்றி நான் பெருமையாகக் கூறிக் கொள்வேன். வீட்டில் என்ன கூடுதல் வசதி வேண்டுமானாலும் செய்து தருகிறேன்," என்று பசுபதியின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

பசுபதியால் மறுக்க முடியவில்லை.

பசுபதி, ஒன்பதாவது வீட்டுக்குக் குடிவந்து இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன. அழகப்பன் பார்த்துப் பார்த்து, தேவையான வசதிகள் எல்லாவற்றையும் செய்து தந்தார். "இந்த வீட்டுக்குக் குடிவந்த நேரம், சித்ரா பூரண குணமாகித் திரும்பி வந்து, பொன்விழாப் போட்டியில் கலந்து கொண்டு, பரிசு பெற்று, அயல் நாட்டுக்குச் செல்ல வேண்டும். அவளுடைய ஓவியத் திறமை மற்ற நாடுகளுக்கும் பரவி, இங்கே பெருமையோடு வாழ வேண்டும்" என்று மனதார வாழ்த்தினார் நல்ல மனம் கொண்ட அழகப்பன்.

"ஏன் ராகவ், அடிக்கடி கர்ஜனை செய்யறான்?"

"அவனுக்குப் புதுசா ஒரு 'சிங்கப் பல்' முளைச்சிருக்காம்..."

– அ.சு. கிருஷ்ணன்



சித்ராவுக்கு மாவுக்கட்டுப் போட்டு நான்கு வாரங்கள் ஓடின. மூன்றாவது வாரம் கட்டைப் பிரித்து எக்ஸ்ரே எடுத்தார்கள். எலும்பு விரிசல்கள் கூடியிருப்பது தெரிந்தது. இருந்தாலும் தசைகளை இறுகத் தேய்த்து வரும் பயிற்சி தினமும் நடந்தது.

போட்டி நடைபெற இன்னும் ஒரு வாரமே இருந்த நிலையில்தான், வலது கை விரல்களை அதிர வைக்காமல் மெதுவாக அசைக்க டாக்டர் அனுமதித்தார்.

நான்கு நாட்கள் கழித்து மெதுவாகப் பென்சிலைப் பிடித்து கையைத் தூக்கி எழுதிப் பார்க்க அனுமதித்தார். ஒரு நிமிடத்திற்கு மேல் அதே நிலையில் இருக்க முடியவில்லை.

"கவலைப்படாதே சித்ரா, போர்டில் நான்கு மூலைகளிலும் டிராயிங் பின் போட்டு அழுத்தி நிற்க வைத்த டிராயிங் காகிதத்தில் தானே படம் போட வேண்டும். மணிக்கட்டு வலிக்கும் போது அதை இடது கையால் தாங்கிப் பிடித்துப் போட்டுப் பார்" என்று டாக்டரே வழி சொன்னார்.

சித்ரா அப்படியே செய்து பார்த்தாள். பதினைந்து நிமிடங்கள் வரை தாக்குப் பிடிக்க முடிந்தது.

"கவலைப்படாதே... இரண்டு மூன்று நிமிடங்கள் இரண்டு கைகளுக்கும் ஓய்வு தந்து விட்டு மறுபடி முயற்சி செய். உன்னால் கண்டிப்பாக முடியும். நம்பிக்கையை மட்டும் இழந்து விடாதே" என்று உற்சாகமூட்டினார்.

"எந்தக் காரணத்தைக் கொண்டும், வலது கைக்கு தாங்குதல் ஏதும் தராமல், வலிக்க வலிக்கப் படம் போடாதே. எல்லாவற்றையும் விட முக்கியமான ஒன்று. இந்த முறை பரிசு கிடைக்காவிட்டால் ஏமாற்றமடையாதே. இயன்ற வரை முயற்சி செய்து படம் போடு. என் வாழ்த்துகள்" என்று அறிவுரை வழங்கினார் டாக்டர்.

போட்டி மண்டபம். நாடெங்கிருந்தும் வந்திருந்த நூற்றுக்கணக்கான



போட்டியாளர்கள் தங்கள் ஓவியத் திறமையைக் காட்ட வந்திருந்தனர். அத்தனை பேரும் பிளஸ் டூ வரை பல்வேறு வகுப்புகளில் படிப்பவர்கள்.

ஒவ்வொருவருக்கும் போர்டு தரப் பட்டு, தனித்தனியே தடுப்பும் தரப்பட்டிருந்தது. சித்ரா போட ஆரம்பித்தாள். கால் மணி நேரத்திற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இடது கையால் தாங்கிக் கொண்டு சிறிது நேரம் போட்டாள். வலி உயிர் போயிற்று. எப்படியோ பொறுத்துக் கொண்டு படத்தை முடித்து விட்டு வந்து விட்டாள். பரிசு கிடைக்காவிட்டாலும் கலந்து கொண்டோம் என்ற மனநிறைவு இருந்தது.

நாட்கள் பறந்தன. டாக்டரின் சிறப்பான கவனிப்பாலும், வலது கையை முன் போல் வலுவுள்ளதாகக் குணமாக்கிக் கொள்ள வேண்டும் என்று சித்ராவுக்கு இருந்த துடிப்பாலும் வெகு விரைவில் முழுமையாகக் குணமாயிற்று. அவள் பள்ளிக்குப் போக ஆரம்பித்து விட்டாள். சிநேகிதிகளும், ஆசிரியைகளும் தனி அக்கறையுடன் அவளுக்கு உதவினர்.

அன்றைய செய்தித்தாளில் ஓவியப் போட்டியின் முடிவு வெளியாகியிருந்தது. தனக்குப் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கையே சித்ராவுக்கு இல்லை. அவளுடைய பெற்றோர், அபிமானிகள் எல்லோருமே கூட அதே நிலையில்தான் இருந்தனர். கை பூரணமாகக் குணமானதே முதல் பரிசு கிடைத்த மாதிரிதான் என்ற மனநிறைவோடு அவர்கள் இருந்தனர்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஆனந்த அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. சித்ராவின் ஓவியத்திற்கு இரண்டாவது பரிசு கிடைத்திருந்தது! முதல் பரிசு யாருக்கு என்பதை அறிந்த போது மறுபடியும் திகைப்பு. முதல் பரிசு விஜயா வரைந்த ஓவியத்திற்கு. விஜயாவின் படமும் அவள் வரைந்து முதல் பரிசு பெற்ற ஓவியத்தின் படமும் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. பரிசு பெற்ற ஓவியம் காந்தி ராட்டையில் நூற்கும் படம்!

(அடுத்த இதழில் முடியும்)

அணை கட்டும் பீவர்கள்

எஸ். சுஜாதா

உறவினரின் திருமணத்திற்காக நான், அம்மா, அப்பா, தம்பி எல்லோரும் சேலம் சென்றிருந்தோம். திருமணம் முடிந்தது. எங்களுக்கு மாலை ஆறு மணிக்குத்தான் ரயில்.

எனக்கு ரொம்ப 'போர்' அடித்தது. அப்பாவிடம் சென்றேன். ''அப்பா சேலத்தை கொஞ்சம் சுற்றிப் பார்க்கலாமா?'' என்று கேட்டேன்.

''இந்த டவுனுக்குள் பார்க்க என்னம்மா இருக்கு? பார்க்க வேண்டிய இடங்களுக்கு சில மணி நேரம் பிரயாணம் செய்யணும். அடுத்த தடவை வரும் போது போகலாம்'' என்றார் அப்பா.

என் ஏமாற்றத்தை கவனித்த அம்மா ''மேட்டூர் அணை கொஞ்சம் பக்கத்திலேதானே இருக்கு. ஆறு மணிக்குள்ளே திரும்பிடலாம்'' என்றார்.

அப்பாவுக்கும் 'சரி' என்றுபட மேட்டூர் செல்லும் பேருந்தில் ஏறினோம்.

ஒரு மணி நேர பயணத்திற்குப் பின் மேட்டூர் அணை கண்ணில் தென்பட்டது.

எனக்கும் தம்பிக்கும் அணையையும், தண்ணீரையும் பார்த்ததும் ஒரே சந்தோஷமாக இருந்தது.

அணையை அடைந்தோம். அணை





ப்க உயரமாக இருந்தது. அதிலிருந்து தண்ணீர் 'தட தட'வென்று கொட்டிக் கொண்டிருந்தது. நானும் தம்பியும் இன்னும் அருகில் பார்க்க ஆசைப்பட்டு ஓடினோம். அம்மாவும் அப்பாவும் எங்களை தடுத்து நிறுத்தினார்கள்.

''புவனா, சேது வாங்க, மரத்தடியில் சிறிது ஓய்வெடுத்துட்டு கிளம்பலாம்'' என்றார் அப்பா.

''நீங்க ஓய்வெடுங்க. நான் இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துட்டு வந்துடறேன்'' என்றேன் மெதுவாக.

''தனியா நிற்க வேண்டாம், சீக்கிரம் வா'' என்று அம்மா அழைக்க மறுக்க முடியாமல் நானும் தம்பியும் பின் தொடர்ந்தோம்.



''அப்பா அணையின் ஒரு புறம் முழுவதும் மரங்களால் சூழப்பட்டு, ஜில்லுன்னு இருக்கு'' என்றான் தம்பி.

''அதனாலதான் எத்தனை பேர் இந்த இடத்தைச் சுற்றிப் பார்க்க வந்திருக்காங்க'' என்றார் அப்பா.

''இவ்வளவு பெரிய அணையை எப்படி கட்டியிருப்பாங்க?'' என்று அப்பாவிடம் கேட்டேன் நான்.

''ம்... மனிதர்கள் ரெண்டு கையாலும் கட்டியிருப்பாங்க'' என்றான் தம்பி.

''மனிதர்கள்தான் கட்டுவாங்க, பிறகு விலங்குகளா கட்டும்?'' என்றேன் என் தம்பிக்கு பதிலடி கொடுக்கும் விதமாக.

''ஏன் விலங்கு கூட அணை கட்டுதே!'' என்று அப்பா சொல்லவும் நானும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

''என்னப்பா சொல்றீங்க, விலங்கு அணை கட்டுதா? உண்மையாவா? எந்த ஊர்ல?'' என்று இருவரும் கேள்விகளை அடுக்கினோம்.

''நான் சொல்வது உண்மைதான். பீவர் என்று ஒரு விலங்கு இருக்கு. இதுதான் ஆற்றில் அணை கட்டுகிறது.''

''அணை கட்டி விவசாயம்கூட செய்யுமாப்பா?'' என்றான் என் குறும்புக்கார தம்பி.



''சேது, அப்பா சொல்றதை முழுவது மாக கேட்டுட்டு, உன் கிண்டலை வச்சுக்கலாம்'' என்றேன் நான்.

● பீவர்கள் ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா கண்டங்களில் வாழ்கின்றன.

● இவை 'கொறி விலங்கு' (Rodent) வகையைச் சாழ்ந்தவை.

● மீனுக்கு இணையாக நன்றாக நீந்தக்கூடியவை.

● குட்டிப் போட்டு பால் கொடுக்கும்.

● பகலில் விளையாடவும் ஓய்வெடுக்கவும் செய்கின்றன.

● இரவில் உணவிற்காகவும் அணை கட்டவும் மரத்தை வெட்டி கடுமையாக உழைக்கின்றன.

● மரத்தை கடிப்பதால் பல் ஆரஞ்சு வண்ணத்தில் இருக்கும்.

● தாய் பீவர் ஆண்டுதோறும் குட்டிகளை ஈனுகிறது. ஒரு முறைக்கு இரண்டிலிருந்து எட்டு குட்டிகள் வரை பிறக்கின்றன.

உடனே ''எதுக்காக அணை கட்டுதுன்னு சொல்லுங்களேன் அப்பா'' என்றான் தம்பி.

''அணை கட்டி அதுக்குள்ளே தான் தாங்கள் குடியிருக்கும் வீடுகளை அமைத்துக் கொள்கின்றன பீவர்கள். சில், மரக்கட்டை, மண் முதலியவற்றை வைத்து அணையை எழுப்புகின்றன. அணைக்குள் தேங்கும் நீருக்குள் வீடுகளை கட்டுகின்றன. இந்த வீடு ஒரே அறையுடையதாக இருக்கும்'' என்று நிறுத்தினார் அப்பா.

''அப்படீன்னா இதன் வீடு தீவு போல் இருக்கும்தானே'' என்றேன் நான்.

''ஆமாம். ஆற்றில் தண்ணீர் அதிகமாக வரும்போதும் தண்ணீர் வற்றும்போதும் அணையிலுள்ள நீர் கூடவோ, குறையவோ செய்யாது. எப்படி இந்த சிவில் என்ஜினியருடைய பணி!'' என்றார் அப்பா.

கொறி விலங்கு என்றால் என்ன?

● கொறி விலங்குகள் பாலூட்டி வகையைச் சார்ந்தவை. நீண்ட கூர்மையான பற்களுடையவை.

● இவ்வகை விலங்குகள் வலிமையான மரத்தைக்கூட தங்கள் பற்களால் கொறித்து வெட்டிச் சாய்த்து விடுகின்றன.

● எலி, சுண்டெலி, பீவர், அணில் மற்றும் கினியா பன்றி முதலியன கொறி விலங்குகள்.

''சூப்பர்'' என்றோம் நாங்கள்.

''அப்பா மரக்கட்டையை வைத்து அணை கட்டுவதாக சொன்னீங்க. கட்டையை எப்படி கொண்டு வரும்?'' என்றான் தம்பி ஆர்வமாக.

''நீ உன் முன் பல்லால் தேங்காய் மூடியிலிருந்து தேங்காயை



கடித்துச் சாப்பிடுவியே அது போலத் தான் பீவர்களும் தங்கள் கூர்மையான

மரத்தை வெட்டுவது ஏன்?

- இவற்றின் உணவு இலைகள், மரப்பட்டைகள், வேர்த்தண்டு ஆகியனவே. எனவே மரத்தை உணவிற்காகவும், உறைவிடத்திற்காகவும் வெட்டுகின்றன.
- பீவர்கள் பெரிய மரத்தின் அடிப்பகுதியைக்கூட 15 நிமிடங்களில் வெட்டிச் சாய்த்து விடும் வல்லமை பெற்றவை.
- மிகப் பெரிய பீவர் அணை 700 மீட்டர் நீளமுடையது. இவ்வணையின் மீது குதிரையில் மனிதன் சென்றால்கூட உடையாத அளவிற்கு வலிமையாக இருக்கும்.
- சில பீவர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலும் உயிர் வாழ்கின்றன.
- இவை மூச்சை அடக்கிக் கொண்டு 15 நிமிடங்கள் வரை தண்ணீருக்கடியில் மூழ்கியிருக்கும்.

பற்களால் மரத்தை வெட்டி துண்டுகளாக்கி அணை கட்டுகின்றன" என்று சொல்லிக் கொண்டிருந்த அப்பா கடிகாரத்தைப் பார்த்தார்.

"ரயிலுக்கு நேர மாச்சு, கிளம்பு, மீதி பஸ்ல பேசிக்கலாம்" என்று



நடக்க ஆரம்பித்தார்.

நானும் தம்பியும் பீவர் கட்டும் அணையை கற்பனை செய்தபடி

நீந்துவது எப்படி?

பீவர்களின் கால் விரல்கள் வாத்தின் கால் விரல்களைப் போல் சவ்வுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் தட்டையான வால் வேகமாக நீந்த உதவி புரிகிறது.

பஸ்ஸை நோக்கி நடந்தோம்.

பீவர்கள் நூறாண்டுகளுக்கு முன்பு முற்றிலும் அழிந்து விடக் கூடிய நிலையில் இருந்தன. பளபளப்பான, மென்மையான முடிக்காகவும், தோலுக்காகவும் வேட்டையாடப்பட்டன. வட அமெரிக்காவில் ஓரளவு பீவர்கள் காணப்படுகின்றன. ஐரோப்பாவில்

அணை கட்டுவது ஏன்?

- தங்கள் வீட்டை ஆற்றின் வெள்ளம் பாதிக்காமலும் கோடை காலத்தில் தண்ணீர் வற்றாமலும் இருப்பதற்கு அணைகளைக் கட்டுகின்றன. அணைக்குச் செல்லும் வழி நீருக்கடியில் இருப்பதால் தங்கள் எதிரிகளிடமிருந்து தப்பி விடுகின்றன.
- சாதாரணமாக பீவர்களின் அணை 23 மீட்டர் நீளம் உடையது.
- எதிரிகளைக் கண்டவுடன் பீவர் தனது வாலை தண்ணீரில் ஆட்டி தங்கள் குடும்பத்தாருக்கு எச்சரிக்கை செய்து விடும்.
- தங்கள் வீட்டில் உணவுகளை சேமித்து வைத்திருக்கும்.

இன்று பீவர்கள் அரிதான எண்ணிக்கையிலேதான் உள்ளன.

கோகுலம் க்விஸ்

1. பீவர்கள் எங்கு வாழ்கின்றன?
2. எவ்வளவு நேரம் நீருக்குள் மூழ்கியிருக்கும்?
3. இவை எதற்காக வேட்டையாடப்படுகின்றன?
4. இவற்றின் உணவு என்ன?
5. தாய் ஒருமுறை எத்தனை குட்டிகளை ஈனும்?

விடை


1. ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா
2. 15 நிமிடங்கள்
3. தோல் மற்றும் முடிக்காக
4. இலை, மரப்பட்டை, வேர்த்தண்டு
5. 2 முதல் 8 வரை.

போட்டி

கதை: சக்தி சரவணன்,
மோகனூர்
படம்: சசி




திமிர் பிடித்தவனே! சென்ற முறை என்னிடம் தோற்றது மறந்து விட்டதா?
இந்த முறை அப்படி நடக்காது.
பார்க்கலாம்! இந்தப் போட்டியில் நானும் இந்த முயலும் மட்டுமே கலந்து கொள்வோம்.
முயலாரே என்ன சொல்கிறீர்?
சரி! நானும் போட்டிக்குத் தயார்
போட்டிக்கு முதல் நாள் இரவு—
போன தடவை மாதிரி இந்தத் தடவையும் நான்தான் ஜெயிக்கணும். என்ன செய்யலாம்?
என்ன ஆமையாரே யோசனை?
போன தடவை மாதிரி முயல் பாதிப் போட்டியில் தூங்குமா?
கவலையை விடு. என் நண்பன் கொசுவிடம் சொன்னால் போதும்.
கொசுவால் என்ன செய்ய முடியும்?



என்ன செய்ய முடியுமா? இரவு முழுவதும் முயலை தூங்க விடாமல் செய்ய முடியும்.
நல்ல யோசனை. காலையில் களைப்பிலேயே தூங்க ஆரம்பித்து விடும்.
ஆமையார் நிம்மதியாகச் சென்றார்.
மறுநாள் காலை –
முயலாரே நன்றாகத் தூங்கினீரா?
இல்லை. ஒரே கொசுத் தொல்லை!
ஆஹா! பரிசு எனக்குத்தான்.
போட்டி ஆரம்பமானது
நல்லா ஓடு. இன்னும் சிறிது நேரத்தில் தூங்கிடுவே. நான் மெதுவாகப் போனாலே போதும்.
ஆமையாரே ஓடினது போதும். முயலார் ஜெயிச்சிட்டார்.
விளையாட்டுத் திடலில் –
கொசுவே இப்படி ஏமாற்றி விட்டாயே!
நாங்க என்ன செய்வது? முயலார் புகை போட்டுட்டுலே தூங்கினார்.

கிளி வரையலாம்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் கிளி உருவாகி விடும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!

உடல்: T2→U1→Q1→O2→N3→ M5 → I11→ H14→ G17→ H18→ F19→ E21→ F21→E22→G21→ I20→M17→ P14→ P15→Q14→ R8→Q7→ P7→N8


இறக்கை: F21 →H18 →J16 ● J14 → J17→ L16→ M14● M12→ M15→P12→P10

வால்: I20→ J26→ K20→ K26→ M17

முகம்: Q7 → R6 → R5→Q3 → R2 → T2 → U3 → U5 →T6 → T3 → R5

அலகு: S4→T5→R5→H14


கிளை: D9 → I11→ O15→P19 → X19● → B11 → H14 → M17 →N20 → T25● → X21→ S21→ X25



நன்றி: லிட்டில் ஆர்க்

SPORTS SPECIAL

FRIENDS



FISH THAT TRAVEL

Plenty to read and enjoy

SEPTEMBER '98
Rs. 6/- ONLY

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

அல்பூக்கா!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி 1

இடம்: விசு வீடு
(விசு பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறான்)

சாரதா: விசு...! என்ன பேப்பர்லே ஒரேயடியா மூழ்கிப் போயிட்டியா?

விசு: இதோ இங்கே பாரு!... பாருன்னா பார்க்காதே, கீழே இருக்கறதை படிச்சும் பாரு!

சாரதா: சரி படிக்கிறேன்! போலீஸ் பிடியிலிருந்து ஓடிப்போன இமாலயக் கேடி அல்பூக்கா! இந்தப் புகைப்படத்தில் இருக்கும் இவனைப் பற்றித் துப்புத் தருபவர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் பரிசு! தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் கீழே தரப்பட்டுள்ளன! என்ன விசு.... இதைப் படிச்சதும் துப்பறியும் நிபுணரா மாறியாச்சா? இந்தக் கேடியைப் பிடிச்சுக் கொடுத்து, பத்தாயிரம் ரூபா பரிசு வாங்கற மாதிரி கனவு காண ஆரம்பிச்சாச்சா?

விசு: கவலைப்படாதே சாரதாக்கா, என் கனவு நனவாயிட்டா உனக்கும் ஒரு பட்டுப் பாவாடை பரிசு!

சாரதா: பட்டுப் பாவாடையா? அப்படீன்னா உன் கனவு கட்டாயம் பலிக்கும்!... ஆ....மா...ம்! நாளைக்கு நடக்கப் போற சிறுவர் நாடகத்துலே நீ நரிக்குறவனாத்தானே நடிக்கப் போறே?

விசு: ஆமாம்! ஊஷ்ஷி வாங்கல்லியோ... பாஷ்ஷி மணி வாங்கல்லியோ...



காட்சி 2

இடம்: நாடக மேடை
(விசு நரிக்குறவச் சிறுவனாக நடித்துக் கொண்டிருக்கிறான்)

விசு: அம்மாமாரே!ஓ ஐயாமாரே! இந்த நரிக்குறவன் சொல்றதை நல்லா கேளுங்கோ! இந்தப் பாஷ்ஷிமணி வாங்கிப் போட்டுப் பாருங்கோ! தோஷம் போகும்! இந்த நரிப்பல்லை வாங்கி வீட்டுலே வையுங்கோ! பணம் நோட்டு நோட்டா கொட்டும்! (அப்போது கோட்டுக்காரர் ஒருவர் வருகிறார்)

கோட்டுக்காரர்: ஏய், தம்பி! போன வாரம் நீ கொடுத்த நரிப்பல் நல்லா வேலை செய்யுது... இப்போ எனக்கு நிறைய பணம் வந்துக்கிட்டேயிருக்கு! இன்னொரு பல் கொடு!

விசு: சாமி! சந்தோஷஞ் சாமி! வர பணத்தைப் பத்திரமா வச்சுக்கோங்கோ சாமி! ஊர் கெட்டுக் கிடக்கு! இமாலய கேடிங்க நாட்டுலே நடமாடறாங்க... இந்தாங்க இன்னொரு நரிப் பல்!


கோட்டுக்காரர்: ம்... இந்தா காசு!... தம்பி, திடீர்னு அங்கே என்ன கவனிக்கறே?

விசு: சாமி, அதோ பாருங்க கூட்

டத்துலே ஒரு ஆளு கேடிப் பய மாதிரி தெரியுது. 'எதுக்கும் நீங்க ஜாக்கிரதையா இருங்க! சாமி, அந்த கேடிப் பய உங் இருக்கே... ஐய்யய்யோ என்ன இவன் இப்படி நரிக்குறவ வேஷத்தோடு அப் படியே ஸ்டேஜைவிட்டு இறங்கி ஓட றான்... நாடக டைரக்டர் நான்... திரும் பிப் பாக்காம ஓடறானே! என்ன ஆச்சு?... டேய் வேணு, நீதான் சரி! விகவைத் துரத்திப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வாடா!

வேணு: (நாடகம் பார்க்க வந்திருந்த கூட்டத்தினர் நடு வில் உட்கார்ந்திருந்த வேறு ஒரு அசல் நரிக்குறவச் சிறு வனை விசுவாக நினைத்து) டேய் விசு, ஏண்டா திமிர்னு இங்கே வந்து உட்கார்ந்துட்டே? எழுந்து வாடா! அடுத்த காட்சியில நடிக்கணும்!

குறவன்: ஷாரு...



களைத்தான் பாத்துக் கிட்டேயிருக்கான்... ஓடிருங்க சாமி! நானும் வரேஞ் சாமி!

காட்சி 3

இடம்: நாடக மேடை யின் ஓரப் பகுதி

(விசு மேடையை விட் டிறங்கி ஓட)

பாலு: டேய் விசு, எங் கேடா ஓடறே, நில்லுடா! அடுத்த காட்சியிலேயும் நீ

நான் விஷு இல்லே... எங்க நைனா காணாம போயிட்டாரு... அவரைத் தேடிக்கிட்டுத்தான் வந்தேன்...

வேணு: டேய் விசு... விளையாடாதேடா... உனக்கு நல்லா நடிக்க வரும் கிறதுக்காக இப்படியெல்லாம் ஏமாத்தாதே. உன் நடிப்பை மேடையிலே காட்டு... எழுந்து வாடா....

குறவன்: ஐயா ஷாமி! ஆவோஜி ஷாமி! நான் விஷு இல்லே... எனக்கு நடிக்கத் தெரியாது....

வேணு: ம்... சரி, அப்படியே இருக்கட்டும். அடுத்த சீன்லே 'கேடி'யால நீ அடிபட்டு நொண்டி வர... அவ்வளவு தான்.... அடுத்த சீன் முடிஞ்சதும் நீ நைனாவைப் பார்க்க ஓடிடலாம்! வாடா விசு! (என்றபடி குறவனைப் பற்றி தள்ளிக் கொண்டு மேடையின் உட்பகுதிக்குச் செல்கிறான்)

காட்சி 4

இடம்: நாடக மேடையின் ஓரப் பகுதி

குறவன்: ஷாமிகளா! நீங்க சொன்ன படியே நொண்டியா நடிச்சுட்டேன்... என்னை விட்டுடுங்கோ... ஷாமி... எங்க நைனாவைக் காணோம்! போலீஸ்லே சொல்லணும்!

வேணு: டேய் விசு, இன்னும் எங்களை ஏமாத்தப் பார்க்கறியா?... அதே மேக்கப்! அதே மூஞ்சி! அதே நிறம், உயரம்! அதே குரல்!

குறவன்: ஷாமி, நான் விஷு இல்லே... அசல் குறவன் ஷாமி! நான் நைனாகிட்டே போகணும்!

பாலு: ஆமாம் நீ விஷு இல்லே... விசுதான்டா!

வேணு: டேய்! சரிடா! உன் நைனா பத்தி போலீஸ்லே புகார் செய்யணும் அவ்வளவுதானே? இதோ பார், பக்கத்துத் தெரு சுபாஷ் தெரு, அதுலே பதினாலாம் நெம்பர் வீட்டுக்குப் போ! அங்கே உங்க அப்பாவைத் தேடித் தருவாங்க!

குறவன்: அப்படியா.... இப்பவே போயிடறேன் ஷாமி! (என்றபடி ஓட)


பாலு: டேய் விசு, நில்லுடா 'மேக்கப்' பைக் கலைச்சுட்டுப் போ!... பவழ மாலை, மணி மாலைகளையெல்லாம் கழட்டி வச்சுட்டுப் போ.. என்ன ஆச்சு இந்த விசுவுக்கு ஏன் இப்படி நடந்துக்கறான்?

காட்சி 5

இடம்: தெரு

(விசு நரிக்குறவ





அம்மா: டேய் ராமு வீட்டு மேல ஏறி என்னடா தேடுறே?

ராமு: அப்பாவிடம் செலவுக்குப் பணம் கேட்டேன். பணத்தையெல்லாம் வீட்டு மேல போட்டுட்டேன்னு சொல்றார், அதான்!

– தேனி முருகேசன்

வேடம் கலைக்காமல் இமாலயக் கேடியைத் துரத்திக் கொண்டு வர)

அல்பூக்கா: ஏய் தம்பி! நில்லு! என்னை ஏன் துரத்தறே?

விசு: ஐயா நீங்க நல்லாயிருக்கணும்! நீங்க ரொம்ப குண்டா, பலசாலியா இருக்கிங்க! நீங்கதான் எனக்கு ஒரு உதவி செய்ய முடியும்! அதனாலதான் நீங்க நாடகக் கொட்டகையிலே எழுந்து வந்ததும் நானும் வேஷம் கலைக்காம ஓடி வந்துட்டேன்! உங் களைப் பாத்தா நல்லவரா தெரியறது.

அல்பூக்கா: என்னடா உதவி? 'சட்' டுன்னு சொல்லு! இப்படி இருட்டிலே நடந்துக்கிட்டே சொல்லு.

விசு: ஐயா, எங்க அப்பாகிட்டே யிருந்து ஒரு ஆளு பத்தாயிரம் ரூபா வாங்கிக்கிட்டு, திருப்பித் தர மாட்டேங் கறாரு!... அந்த ஆளைப் பயமுறுத்தி பத்தாயிரம் ரூபாயை எங்களுக்கு வாங்கித் தரணும்! அதுலே ஐயாயிரம் ரூபா நீங்க எடுத்துக்குங்க.

அல்பூக்கா: ஏய் பேச்சு மாறினே, இந்த அல்பூக்கா உன்னை அல்வா ஆக்கிடுவான்!

விசு: மாற மாட்டேங்க... என் கூட வாங்க! சுபாஷ் தெருவிலே பதினாலாம் நெம்பர் வீட்டுலேதான் எங்களை ஏமாத்தின ஆளு இருக்காரு! வாங்க!

காட்சி 6

இடம்: விசு வீடு

(உண்மைக் குறச் சிறுவன் உள்ளே நுழைகிறான்)

குறவன்: ஷாமி!

விசுவின் அப்பா: சுபா... சீக்கிரம் வா இப்படி... நம்ம பிள்ளை விசு எப்படி வந்து நிக்கறான் பாரு!

அம்மா: அட! டேய் விசு! உனக்கு இந்த நரிக்குறவ வேஷம் நல்லா பொருந்தறதுடா!

குறவன்: ஷாமி! என்னை நல்லா பாருங்க!... நான் உங்க விஷு இல்லே. நெசம் நரிக்குறவன். என் நைனாவைக் காணோம் ஷாமி! நாடகக்காரங்க உங் களைப் பார்த்து புகார் கொடுக்கச் சொன் னாங்க ஷாரு! கொஞ்சம் போலீஸுக்கு போன் பண்ணுங்கோ ஷாரு!

அப்பா: டேய் விசு, நானே ஒரு சி.ஐ.டி. ஆபீஸர். எங்கிட்டேயே உன் நடிப்பா?

சாரதா: ஆமாம் விசு, நீ நல்லா நடிக்கறே!

குறவன்: இல்லே அம்மணி! நான் விஷு இல்லே!

(இந்தச் சமயத்தில் நரிக்குறவ வேடத் துடன் விசு அல்பூக்கா பின் தொடர உள்ளே நுழைகிறான்)

விசு: அல்பூக்கா, இவருதான் எங் களை ஏமாத்தின ஆளு!

அல்பூக்கா: ஏய் சாரு மருவாதையா இவங்ககிட்டே வாங்கின பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்திடு இல்லே! உன் பல்லைக் கழட்டிடுவேன்!

அப்பா: சராதா, சுபா நீங்க குறுக்கே எதுவும் பேசாதீங்க!

அல்பூக்கா: என்ன போன் பண்றே? மொதல்லே பத்தாயிரத்தை எடுத்து வை.

குறவன்: ஏய் குண்டு ஷாரு! என் நைனாவைப் பத்தி கேட்கத்தான் ஷாரு போன் பண்றாரு! கம்மா கிட!

அல்பூக்கா: என்ன சாரு இங் கிலீஷ்லே பேசறாரு...

குறவன்: எங்க நைனா பத்திதான்...

அல்பூக்கா: ஏ சாரு! பத்தாயிரத்தை எடுக்கறியா இல்லை குத்து விடவா?

அப்பா: ஏய், பின்னால திரும்பிப்

பாரு, பத்தாயிரம் ரெடியா இருக்கு!

அல்பூக்கா: ஹா போலீஸ்காரங்க!

கான்ஸ்டபிள்: ஏய் அல்பூக்கா! சார் ஒரு சி.ஐ.டி ஆபீசர்! அவர் போன் பண்ணிதான் எங்களை வரச் சொன்னார்! பக்கத்துலேதான் போலீஸ் ஸ்டேஷன்! வகையா மாட்டிக்கிட்டே!

குறவன்: ஷாரு! உங்க விசு இவரு தான்! குறவனா நடிச்சுக்கிட்டிருந்தப்போ கீழே இறங்கி இந்தக் குண்டு ஷாரைத் துரத்திக்கிட்டு ஓடினாரு!

சாரதா: அப்பா ரெண்டு பேரும் அச்சுலே வார்த்த மாதிரி ஒரே மாதிரியா இருக்காங்க இல்லே... டேய் விசு! இந்த அல்பூக்காவை எப்படிப் பிடிச்சே?

விசு: நாடகம் நடந்துக்கிட்டிருக்கும்போது கூட்டத்திலே இவனைக் கவனிச்சேன்... இமாலயக் கேடிங்க வசனத்தைக் கலந்து பேசி இவனையே உற்றுப் பார்த்தேன். இவன் திடீர்னு எழுந்து நழுவ ஆரம்பிச்சான். இவன் தான் அல்பூக்கான்னு தீர்மானிச்சு நானும் வேஷத்தோடு தெருவிலே இறங்கி இவனைப் பின் தொடர்ந்தேன்... ஒரு ஆள் பத்தாயிரம் ரூபா எங்ககிட்டே வாங்கிக்கிட்டு ஏமாத்திட்டதா சொல்லி, அதைத் திருப்பி வாங்கித் தரும்படி கெஞ்சினேன்... ஐயாயிரம் ரூபா தரதா ஆசை காட்டி நைசா இங்கே அழைச்சுக்கிட்டு வந்துட்டேன்!

அப்பா: ம்!... கான்ஸ்டபிள்! இவனைப் பத்திரமா ஸ்டேஷனுக்கு இழுத்துக்கிட்டுப் போங்க... வழியிலே தப்பிச்சுடப் போறான்...

கான்ஸ்டபிள்: சார்! இந்த நரிக்குறவப் பையனோட அப்பாவும், இவனைத் தேடிக்கிட்டு நம்ம ஸ்டேஷன்லே வந்து உட்கார்ந்திருக்கார்.

குறவன்: அப்போ நானும் உங்க கூடவே வரேன் சார்!

விசு: அப்பா... அடுத்தது...


அப்பா: பேப்பர்லே போட்டிருந்த படி பத்தாயிரம் ரூபா பரிசு உனக்குத்தான்...

சாரதா: விசு!... கன்கிராட்ஸ்!.... அடுத்தது...

விசு: நாளைக்கே பட்டுப் பாவாடை வாங்க கடைக்குப் போறோம்!

(சிரிப்பலைகள்)

குறுக்கெழுத்துப் புதிர் விடை!



வி	சா	ஞ்	1 பா		ம்	க	ர	2 க
3 எ			ன		ட			ல்
	தி	த்	4 க		5 க	வி	ப்	பா
ம்			ம்	6 ஆ				க்
7 ர	யி	ல்				னி	ணி	8 க
த				9 ம	னை			ம்
ந்	ஹி	ய்	10 ஜெ		11 த	வ	ளை	
த			ய		ந்			12 மா
13 சு	த்	த	ம்		14 சி	வ	கா	சி



பற்பொடி கிடைப்பது எப்படி?

இங்கேதான்....

அறிவியல் பாட வேளை முடிந்தது. ஆசிரியர் கிளம்பத் தயாரானார். என் தோழி வேகமாக எழுந்து "சார் நாளைக்கு சனிக்கிழமை, பள்ளிக் கூடம் இருக்கா" என்று கேட்டான். அதற்கு ஆசிரியர் "பள்ளிக் கூடம் எப்பொழுதும் இங்கே




தான் இருக்கும். அதில் என்ன சந்தேகம்?" என்று சிரித்தபடியே கூறினார். நாங்களும் சிரித்தோம்.

– எஸ். நீரஜாக்ஷி, சென்னை - 82.

எப்படி கிடைக்கும்?


ஆசிரியர் மிளகாய், மஞ்சள் கிழங்கைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பாடத்தை கவனிக்காத மாணவனை எழுப்பி, "மிளகாய்ப் பொடி எப்படி கிடைக்கிறது?" என்றார். அவன் "மிளகாயை அரைத்து" என்றான். அடுத்து "மஞ்சள் பொடி எப்படி கிடைக்கிறது" என்றார் ஆசிரியர். அவனும் "மஞ்சளை அரைத்து" என்று கூறினான். அடுத்தது "பற்பொடி எப்படி கிடைக்கிறது?" என்றார் ஆசிரியர். அவன் "பற்களை அரைத்து" என்றான் அவசரத்தில். எல்லோரும் சிரித்தோம். அவனைப் பார்த்து, "ஒழுங்கா பாடத்தைக் கவனி" என்றார் ஆசிரியர்.



– கே.என். பாலபாரதி,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

ஒரு டீதான் வரும்!

ஆங்கிலப் பாடவேளை. வகுப்புத் தலைவனை கட்டுரை எழுதிப் போடச் சொன்னார் ஆசிரியர். அவன் கரும்பல



கையில் எழுதிக் கொண்டிருந்தான். அப்போது 'Writer' என்று எழுதுவதற்கு பதில் 'Writter' என்று எழுதி விட்டான். இதை கவனித்த என் நண்பன் "ஒரு 'T' தான் வரும்" என்று கூறினான். "அவன் காலையிலே சாப்பிடாமல் வந்திருக்கான். ரெண்டு டீதான் சாப்பிடட்டுமே!" என்று இன்னொருவன் கூறியவுடன் வகுப்பே

சிரித்தது.

– ஆர்.வி. மயில்வாகனன்,
டான்பாஸ்கோ உயர் நிலைப்
பள்ளி, மதுரை மாவட்டம்.

அண்ணலின் பெயர்?

தமிழ் ஆசிரியர் 'உதயகுமார காவியம்' பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்பாடத்தில் வரும் உதயனை 'அண்ணல்' என்று குறிப்பிட்டார். அப்பொழுது சுவர் ஓரமாக சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் ஒரு மாணவன்.



அவனை எழுப்பி, "அண்ணலின் பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு சற்று யோசித்த அவன் "காந்தியடிகள்" என்று கூறினான். அவனையும் ஆசிரியரையும் தவிர அனைவரும் சிரித்தோம்.

– ச. தமிழ் ப்ரியன்,
மூலப்பாளையம், ஈரோடு.

கால் பந்து

உடற் பயிற்சி வகுப்பு. மைதானத்தில் மாணவர்களை நிறுத்திவிட்டு உடற்பயிற்சி ஆசிரியரிடம் சென்றேன். "என்ன வேண்டும்?" என்று கேட்டார் அவர். "கால் பந்து கொடுங்க சார்" என்றேன். "கால் பந்து என்னிடம் இல்லை, முழு பந்துதான் இருக்கு என்று சிரித்தபடி கூறினார் ஆசிரியர். நான் சற்றும் சளைக்காமல் "கால் பந்து இல்லாவிட்டால் உதை பந்து கொடுங்கள்" என்றேன்!



– சுதாகர்,
துத்திப்பட்டு, தென் ஆற்காடு மாவட்டம்.

சாப்பாட்டு நேரம்!

என் தோழியின் வீடு அருகில் இருந்ததால் மதியம் சாப்பிட வீட்டிற்குச் சென்று விடுவாள். ஒரு நாள் எங்களுடன் பள்ளியில் சாப்பிட ஆசைப்பட்டாள். அன்று உணவை கையில் கொண்டு வந்திருந்தாள். காலையில் மூன்று பாட வேளைகள் முடிந்து கணித வகுப்பிற்குத் தயாராகிக் கொண்டிருந்தோம். என் தோழி தன் சாப்பாடு டப்பாவை எடுத்துக் கொண்டு கிளம்



பினாள். "எங்கே போறே?" என்று கேட்டேன் நான். "சாப்பாட்டிற்கு மணியடிச்சாச்சே!" என்றாள். நாங்கள் சிரிக்க ஆரம்பித்தோம். கடிகாரத்தைப் பார்த்துவிட்டு பெஞ்சில் போய் உட்கார்ந்தாள்.

– ஐ. விஷ்ணு சுபா, பத்தாம் வகுப்பு,
சேலம் - 9.

"கனமான சூட் எது?"
"பார'சூட்தான்!"
– கங்கா கணேசன்



கறுப்புப் பட்டு

காலை மணி 8:45. வானதி சாப்பிட உட்கார்ந்தாள். பரிமாறிக் கொண்டிருந்த அம்மா, “சாப்பாடு வைத்தால், தட்டைப் பார்த்து சாப்பிடுவியா, என்ன பொழுதுக்கும் ஜன்னல் பக்கம் பார்வை? உன் தோழி வந்தாச்சா? பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு, நினைவில் வச்சுக்கோ” என்றார்.

“அம்மா, அது வர்ற நேரம்தான்”

‘குக்கூ... கூ...க்கா... குக்கூ... கூ...க்கா’ என்ற குரல் ஓங்கி ஒலித்தது. வானதி எச்சில் கையோடு எழுந்து வேகமாய் ஜன்னலருகில் ஓடினாள். அருகிலிருந்த கட்டிலில் உட்கார்ந்து குரல் வந்த இடத்தைத் தேடினாள். எளிதில் தெரியவே இல்லை. அது ஓர் அடர்த்தியான பச்சைப் பசேலென்றவாதா மரம். கிளைகள் படர்ந்து, அடர்த்தியாய் அந்தக் காம்பவுண்டு முழுவதும் நிறைந்திருந்தது. மரம் கொஞ்சம் உயரமானதும் கூட. கட்டடத்தின் இரண்டாவது மொட்டை மாடியையும் தாண்டி வளர்ந்திருந்தது. பச்சைப் பசேலென்ற அகலமான பெரிய இலைகள், மரமே தெரியாமல், பச்சை மட்டுமே தெரியும்படியாய் மேலாடையுடன் மரம்.

இந்தக் கரும்பச்சை இலைகள் கூட்டத்திற்குள், கருங்குயிலைத் தேடிக் கண்டுபிடிப்பது என்றால் கொஞ்சம் சிரமமான காரியம்தான். இருந்தாலும் பழக்கத்தினால் வானதி, குரல் வந்த இடம் பார்த்து, அதைக் கண்டு பிடித்து விட்டாள். உடனே சந்தோஷம்! “ஜோதி இங்கே வாயேன்! சீக்கிரமாக வந்து பார்! இந்தக் ‘கறுப்புப் பட்டு’ எவ்வளவு அழகாக உட்கார்ந்து தன் ஜோடியை கூப்பிடுது. அது மட்டுமல்ல. ரெண்டு வருஷமா தொடர்ந்து இந்தக் கிளைக்கே வருது” என்று தன் தம்பியை அழைத்தாள் வானதி.

“நீ போனது பத்தாதா? அவனையும் கூப்பிட்டு விட்டியா? நீங்க இந்தக் குயிலுக்காக செலவழிக்கும் நேரம்தான் அதிகம். பள்ளி, படிப்பு, எல்லாத்தையும் மறந்துடறீங்க! பள்ளிக்கூடத்துக்கு நேரத்துக்குப் போகணும். சாப்பிடணும்! ஞாபகத்தில் வெச்சுக்கோங்கோ” என்றார் அம்மா.

அம்மா சொல்வதை காதில் வாங்காமல் அக்காவும், தம்பியும் அந்தக் குயில் அழகினைக் கண்கொட்டாது பார்த்தனர். வானதி அதற்கு வைத்த செல்லப் பெயர்தான் ‘கறுப்புப் பட்டு’. பட்டு போல பளபளவென்று இருப்பதால், அக்காவும் தம்பியும் சேர்ந்து





வைத்த பெயர் இது. "உனக்கு ஒண்ணு தெரியுமா? என் தோழி கலாவை நீ குயில் பார்த்திருக்கியா என்று கேட்டேன். நாமெல்லாம் டவுனில் இருக்கோம். எப்படி பார்க்கிறது? புத்தகத்துல பார்த்ததுதான் என்கிறாள். ஒரு நாளைக்கு அவளைக் கூட்டிட்டு வந்து காட்டணும்" என்றாள் வானதி.

"அது எப்படிக்கா முடியும், இதுதான் சரியா காலையில 8:50 மணிக்கு வந்துட்டு, 9:15க்கெல்லாம் ஓடிடுதே."

"இருடா, தொணதொணன்னு பேசாதே! அதைப் பார். எப்படி அழகா நீட்டி, 'குக்கூ... கூ...க்கா'ன்னு கூவுது. கறுப்பு ஒரு நிறமான்னு கேட்கிறாங்களே! இந்தக் கறுப்பு கொள்ளை அழகுடா ஜோதி! எடுத்து கண்ணுல ஒத்திக்கலாம் போல இருக்கு."

"அக்கா, அந்தக் கறுப்புக்கு நுனியில அந்த லேசான மஞ்சள் மூக்கும், லேசா சிவந்த கண்ணும் எடுப்பா இருக்குல்ல."

"டேய், அங்க பாருடா! அதோட ஜோடி எதிர்புறம் வேப்ப மரத்துல வந்து உட்கார்ந்துட்டுது."

"எங்கக்கா, எனக்குத் தெரியலியே!"

"நல்லாப் பாருடா! புள்ளியா, கறுப்பும், சாம்பல் கலரும் கலந்து லேசான மரக்கலர் போல, கிழக்குப் பக்கம் இருக்குற கிளையில உட்கார்ந்துக்கிட்டு இருக்குல்ல அதுதான்."

உடனே, "குக்கூ... கூ...க்கா" என்ற குரல், ஓங்கி, நீண்டு ஒலித்தது. "எவ்வளவு அழகாய் கூவுகிறது" என்ற ஜோதியை "சப்தம் போடாதே" என்று அடக்கினாள் வானதி.

உடனே, "ட்டுர ட்டுர" என்று தகரத்தைச் சுரண்டுவதைப் போன்ற நாராசமான சப்தத்தை எழுப்பியது – சாம்பல் நிறக் குயில். மீண்டும் "குக்கூ... கூ... கூ... மீண்டும்.. ட்டுர.. ட்டுர.."

"அக்கா, இதில் ஆண் குயில் எது? பெண் குயில் எது?"

"இன்னும் உனக்கு இது தெரியாதா? பளபளவென்ற ஜொலிக்கும் கறுப்புடன், அழகான, வளமான குரலுடன் உள்ளதுதான் ஆண். ஆனால் பெண்ணுக்கு அந்த அழகும் இல்லை, குரலும் இல்லை."

பெண் குயில் வேப்ப மரத்திலிருந்து பறந்து வந்து, வாதாமரத்தின் கிளை இடுக்கில் அமர்ந்திருந்த ஆண் குயிலுக்கு அருகில் வந்து ஜம்மென்று உட்கார்ந்தது. மீண்டும் "குக்கூ... கூ....க்கா" பெருமிதத்துடன் குரல் ஒலித்தது.

"டேய் பாருடா, என் ஜோடி வந்து விட்டது என்று பெருமையாய் சொல்கிறது."

"அக்கா, அதோ பார், ரெண்டும் மூக்கை உரசிக் கொண்டு, விளையாடுவதை. பள்ளிக்கூடம் இல்லாட்டி நாம உட்கார்ந்து இதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்கா."

ஜோதி சொல்லவும், குயில் ஜோடிகள் இரண்டும் வேகமாய் பறந்தன. உள்ளிருந்து அம்மாவின் குரல். "என்ன அக்கா, தம்பி ரெண்டு பேருக்கும் பள்ளிக்கூடம் போவதாக உத்தேசம் இல்லையா... மணி 9:15."

"இதோ வந்துட்டோம்மா" இரட்டைக் குரல்கள் பறந்தன உள்நோக்கி. இருவரும் விட்ட சாப்பாட்டைத் தொடர ஓடினர்.

மறுநாள் காலை மணி 8:45. வானதி சாப்பாட்டுத் தட்டில் கை அலைவதும், ஜன்னலைப் பார்ப்பதுமாக இருந்தாள். அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. இன்னும் குயிலின் குரலைக் காணோம். "என்னம்மா, இன்னும் குயில் கூவல்லையே! என்ன காரணம்?" வருத்தத்துடன் கேட்டாள் வானதி. "அது உனக்குத் தெரியாதா? நேத்து மத்தியானம் சில பையன்கள் பெண் குயிலைப் பிடித்துக் கொண்டு போய் விட்டனர். அதைப் பார்த்த ஆண் குயில் வேகமாக, கத்தி கத்தி பறந்தது. பாவம், இன்று வருதோ இல்லியோ!"

உடனே ஒரு குக்கூ... கூ.... க்கா... குரல் மிக வேகமாய் ஓங்கி ஒலித்தது. அந்தக் குரலி லுள்ள சோகத்தைக் கண்டுகொண்ட வானதி வேகமாக ஜன்னலருகே ஓடி, வாதாமரக் கிளையைப் பார்த்தாள். நேற்று உட்கார்ந்திருந்த அதே இடத்தில் அமர்ந்து கூவிக் கொண்டிருந்தது. ஜோதியும் பின்னால் நின்று பார்த்தான். "பாவம்க்கா அதோட ஜோடி இன்னிக்கு வராதுல்ல" என்ற ஜோதியின் கண்களில் நீர் முட்டியது.

— அர்ச்சனா



பாபுவுக்குப் புரிந்தது!

த. ஜானகி

பள்ளியில் காலைப் பிரார்த்தனை துவங்கியது.

"மாவட்ட அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நம் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவில் படிக்கும் விஜய்க்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது. பரிசுத் தொகையான ரூபாய் இருநூறு அவனுக்கு வழங்கப்படுகிறது'' என்று தலைமை ஆசிரியர் அறிவித்தார்.

பலத்த கை தட்டல்களுக்கு இடையே பணிவோடு விஜய் பரிசு வாங்கிச் செல்வதை எல்லா மாணவர்களும் பார்த்துக் கொண்டிருந்தது போலவே பாபுவும் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் உள்ளத்திலோ ஏமாற்றம்! பொறாமை தீ அதிகமாகியது.

சுதந்தரப் பொன்விழா ஆண்டை ஒட்டி மாவட்ட அளவிலான கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் இரண்டு மாணவர்கள் மட்டும் அனுப்பும்படி அறிவிக்கப்பட்டிருந்தது. பாபு படிக்கும் பள்ளியிலிருந்து விஜய், பாபு இருவரும் தமிழ் ஆசிரியரால் தேர்வு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். எப்படியும் முதல் பரிசு வாங்க வேண்டும் என்று இருவருமே எடுத்த கடும் முயற்சியில் விஜய்க்குத் தான் வெற்றி கிடைத்தது.

"நான் நன்றாகத்தான் எழுதியிருந்தேன். எனக்கு என்னமோ சந்தேகமாக இருக்கிறது. கட்டுரையை யார் திருத்தினாங்களோ அவங்களைப் பார்த்து விஜய் தனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருப்பான் என்று தோன்றுகிறது. அவனோட தாத்தா பெரிய அரசியல்வாதி இல்லையா?" என்று தன் நண்பன் பிரபுவிடம் கூறினான் பாபு.

"சே...சே அப்படி எல்லாம் இருக்காதுடா.... அவன் நன்றாக எழுதியிருக்கலாம்" என்று பிரபு கூறினான்.

"போடா உனக்கு ஒன்றும் தெரியாது. நான் எவ்வளவு அருமையாக எழுதியிருந்தேன் தெரியுமா? காக்காய் பிடித்து வாங்கியிருக்கிறான்."

"பாபு! நீ இப்படி எல்லாம் பேசுவது நன்றாக இல்லை" என்று பிரபு எடுத்துக் கூறியும் பாபுவின் மனம் ஏற்க மறுத்தது.

அன்று விடுமுறையாதலால் பாபு தன் வீட்டு டி.வி.யின் முன்பு அமர்ந்திருந்தான். அப்போது விஜய் அங்கு வந்தான்.

"பாபு! எனக்கு உடம்பு சரியில்லாமல் நாலு நாளா நான் ஸ்கூலுக்கே வரலே. உன்னோட மேப் ட்ராயிங் நோட்டைக் கொஞ்சம் கொடேன். அடுத்த வாரம் நம்ம ஸ்கூல்லே இன்ஸ்பெக்ஷன் வேறே"

என்றான்.

பாபுவுக்கு அவன் மீது கொண்ட பொறாமை இன்னும் கொஞ்சம் கூட குறையவில்லை. தாத்தாவின் சிபாரிசு மூலம்தான் பரிசு பெற்றான் என்ற எண்ணமும் இன்னும் மனதைவிட்டு அகலவில்லை. வெளிப் பார்வைக்கு பேசிக் கொண்டிருந்தாலும் எப்படியாவது அவனை மாட்டிவிட்டு ஆசிரியரிடம் திட்டு வாங்க வைக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தான்.

'நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வந்து விட்டது. வாத்தியார்கிட்டே மாட்டிகிட்டு நீ நல்லா அடிவாங்கணும். அப்பத்தான் என் மனசு அமைதி அடையும்' என்று மனதிற்குள் சந்தோஷத்துடன் கூறிக் கொண்டான்.

ஆனால் வெளியில், "ஸாரிடா விஜய்! என் மேப் ட்ராயிங் நோட்டை பள்ளிக் கூடத்திலேயே வெச்சுட்டேன்'' என்று சொன்னான். விஜய் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டான்.

விடியற்காலையில் பாபு மேப் ட்ராயிங் நோட்டில் வர்ணம் தீட்டிக் குறித்துக் கொண்டிருந்ததை அவன் அம்மா கவனித்திருந்தார்.


அன்று காலை பதினோரு மணி குமாருக்கு தபால்காரர் தன்னிடம் கொடுத்த தந்தியைப் படித்த பாபு உற்சாக மிகுதியால் துள்ளிக் குதித்தான்.

ஆம்! சிறுவர்களுக்காக வெளி வரும் பத்திரிகை ஒன்றில் மாணவர்களுக்காக நடத்திய சிறுகதைப் போட்டியில் அவன் கலந்து கொண்டிருந்தான். அவனுக்கு முதல் பரிசு கிடைத்திருக்கும் செய்தியை அறிவித்திருந்தார்கள். "அம்மா... அம்மா..." என்று கூவியபடி சமையல் அறையை நோக்கி விரைந்தான். விஷயத்தை அறிந்த அவன் அம்மா ஆனந்தப்பட்டார்.

அன்று மதியம் டைனிங் டேபிளின் முன்பு பாபுவும் அவன் அண்ணன் ஆனந்தும் சாப்பிட அமர்ந்திருந்தனர்.

தனக்கு முதல் பரிசு கிடைத்திருக்கும் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்தான். தான் நன்றாக எழுதியிருந்ததால்தான் தனக்குப் பரிசு கிடைத்திருக்கிறது என்றும் கூறினான் பாபு.

"இல்லை. நான் இதை நம்பத் தயாராக இல்லை. உன்னை விட நான் பெரியவன். நன்றாக யோசித்து நானும்தான் உன் கதையைவிட அருமையான கதையை அனுப்பினேன். ஆனால் பரிசு உனக்குத்தான் கிடைச்சிருக்கு. காரணம் அந்தப் பத்திரிகையிலே உன்னோட சில துணுக்குகள் பிரசுரமாயிருக்கு. நம்ம பள்ளி




இலக்கிய மன்ற விழாவிற்கு ஒருமுறை பத்திரிகை ஆசிரியர் வந்தபோது அவரோட பேசி அவர்கிட்டே ஆட்டோகிராப் வேறே வாங்கியிருக்கே. அதனால அந்த ஆசிரியர் உனக்குப் பரிசு கொடுத்திருக்கலாம். நடுவர்களை எனக்குத் தெரியாமல் காக்காய் பிடித்து நீ வாங்கியிருக்கலாம்'' என்றான் கோபத்துடன் ஆனந்த்.

''அம்மா! அண்ணன் சொல்றதை கேட்டீங்களா? நான் யாரையும் காக்காய் பிடிக்கலை''- மேற்கொண்டு பாபுவால் பேச முடியவில்லை. விழிகளில் நீர் எட்டிப் பார்த்தது.

''ஆனந்த்! நீ இப்படி பேசறது கொஞ்சங்கூட நன்றாக இல்லை. போட்டியிலே எத்தனையோ பேர் கலந்துக்கிறாங்க. எல்லாவற்றையும் படித்து எது சிறந்ததாக இருக்கிறதோ அதுக்குத்தான் நடுவரோ, ஆசிரியரோ முதல் பரிசு கொடுக்கறாங்க. ஆளைப் பார்த்தோ, அல்லது நீ சொன்ன மாதிரி காக்காய் பிடிப்பதாலோ கொடுக்கப்படுவதில்லை. 'என்னை விட அவன் நன்றாக எழுதியிருக்கிறான். அதனால்தான் அவனுக்குப் பரிசு கிடைச்சிருக்குங்'கற உண்மையை உன்னால ஏன் உணர முடியலே? காரணம்... பொறாமைதான். பொறாமைங்கிறது நெருப்புப் பொறி மாதிரி. ஆரம்பத்திலேயே அதை அணைச்சிடு'' என்றார் அம்மா.

புரிந்தது பாபுவுக்கு. அம்மா சொல்வதில்தான் எத்தனை உண்மை. தன்னை விட விஜய் நன்றாக எழுதியிருக்கிறான். அதனால்தான் பரிசு பெற்றான் என்கிற உண்மையை அன்றைக்கு உணரவில்லை. ஆனால் இன்றைக்கு உணர்ந்து கொண்டு விட்டான். அவசர அவசரமாக சாப்பிட்டு விட்டு தன் மேப் ட்ராயிங் நோட்டை எடுத்துக் கொண்டான். ''அம்மா! விஜய் வீட்டிற்குப் போய் விட்டு வரேன்'' என்று கூறியபடி கிளம்பினான்.

அவன் போனதும் ஆனந்த் அம்மாவை நோக்கி கண்சிமிட்டினான். அம்மாவும் சிரித்தபடியே, ''ஆனந்த்!'' நீ போட்டியில் கலந்துக்கிட்டு கதை எழுதி அனுப்பாட்டாலும் நல்லா நாடக டயலாக் பேசினே, தாங்க்ஸ்'' என்றார்!





விடுகதை பக்கம்

ஒல்லியான மனிதனுக்கு ஒரே காது!

①

1. உள்ளே வெள்ளிப் பூட்டு, வெளியே நார் பூட்டு.
2. காடுமேடெல்லாம் கிடக்கும், கால் வைத்தால் அலற வைக்கும்.
3. தொட்டால் சுருங்கிக்கு தொண்ணூறு கால்.
4. கால் இல்லை தாவுவான், வாயில்லை கத்துவான்.

– ஆர். ஜனனி,
2-சி, சின்மயா வித்யாலயா, மனக்காட்,
திருவனந்தபுரம்,
கேரளா.

②

1. குச்சி உடம்பில் குண்டுத் தலை அவன் யார்?
2. ஆத்தோரத்து அக்கா விடியும் வரை பாடினாள் கேட்பார் இல்லை. அவள் யார்?
3. செக்கச் சிவந்த சிங்காரி குளிக்கப் போனாளாம். தண்ணீர் மேலே பட்டதும் கறுத்துப் போனாளாம். அவள் யார்?
4. கழுத்து உண்டு-தலை இல்லை, கை உண்டு, விரல் இல்லை, உடம்பு உண்டு-கால் இல்லை அது என்ன?
5. அண்ணனும் தம்பியும் சேர்ந்தால் தொட்டதெல்லாம் இரண்டாகும் அது என்ன?

– சு. காத்யாயனி
ஏழாம் வகுப்பு 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி-1.

③

1. ஒல்லியான மனிதனுக்கு ஒரே காது.
2. மூடாத வாய்க்கு மூழம் வால்.
3. ஆயிரம் குழந்தைகளுக்கு அரைஞான் ஒன்று.
4. வளைக்க முடியும் ஒடிக்க முடியாது
5. குண்டு மனிதனுக்கு இரண்டு மூண்டாசு
6. நூறு கிளிக்கு ஒரே வால்
7. திரி இல்லாத விளக்கு
8. கட்டைப் பனையில் எட்டுக் கலயம்
9. பட்டுப் பை நிறைய பவுன் காசு.

– பொன் திருவரங்கன்,
ஐந்தாம் வகுப்பு 'அ' பிரிவு,
ஆர். சி. நடுநிலைப் பள்ளி, மானாமதுரை
– 630 606.



விடை: 1
1. தேங்காய்
2. முள்
3. மரவட்டை
4. கடல்.

விடை: 2
1. கரண்டி,
2. தவளை,
3. கங்கு,
4. சட்டை,
5. கத்தரிக்கோல்.

விடை: 3
1. ஊசி, 2. அகப்பை
3 துடப்பம் 4. தலைமுடி
5. பட்டாணிக் கடலை
6. வாழைப் பூ 7. சூரியன்
8. கத்திரிக்காய்
9. மிளகாய் வற்றல்



பிருந்தாவனக் கதையரங்கம்

கொட்டட்டுமா, வேண்டாமா?

அதிர்ஷ்ட வீடு!

ரங்கன் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு புது வீடு கட்டிக் கொண்டிருந்தான். அந்த வீடு மிகவும் அதிர்ஷ்டகரமான வீடாக இருக்க வேண்டும் என்பதற்காக அவன் ஒவ்வொரு நாளும் நல்ல நேரங்களாகப் பார்த்துப் பார்த்து நிதானமாக வீட்டைக் கட்டி முடித்தான்.



கட்டி முடிந்ததும் நல்ல சுப முகூர்த்த நாளாகப் பார்த்து கிரகப்பிரவேசம் செய்து அந்தப் புது வீட்டுக்குக் குடியேறினான்.

அன்றிரவு, புது வீட்டில் எல்லோரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் போது நள்ளிரவு வேளையில், "கொட்டட்டுமா, வேண்டாமா?" என்று பயங்கரமான ஒரு குரல் கூரை மேலிருந்து ஒலித்தது.

ரங்கன் மிகவும் பயந்து போய் எழுந்து சென்று சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. 'ஏதாவது கெட்ட கனவாக இருக்கும்' என்று நினைத்து தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டு படுக்கச் சென்றான்.

அப்போது, மீண்டும் அதே குரல் கூரை மேலிருந்து, "கொட்டட்டுமா, வேண்டாமா?" என்று கேட்டது. அதைக் கேட்டு அஞ்சி நடுங்கிய ரங்கன், 'இது ஏதோ பூதத்தின் வேலையாகத்தான் இருக்கும்' என்று நினைத்து, "இன்று வேண்டாம், நாளைக்கு வந்து கொட்டு" என்று கூறினான். அதன் பிறகு அந்தக் குரல் கேட்கவில்லை. ரங்கன் நிம்மதியாகப் படுத்து உறங்கினான். ஆனால் அந்த நிம்மதி அவனுக்கு நிலைக்கவில்லை.

மீண்டும் மறுநாளிரவு அதே போல அசரீரி குரல் கேட்டது. ரங்கன் முன்பு கூறியது போலவே, 'இன்று போய் நாளை வந்து கொட்டு' என்றான். குரல் அடங்கி விட்டது. அவனும் உறங்கி விட்டான். இப்படியே தினமும் நடந்து கொண்டிருந்தது.

'என்றைக்காவது ஒரு நாள் அந்தப் பூதம் நம் வீட்டை நாசமாக்கத்தான் போகிறது. நாமும் வீட்டோடு சேர்ந்து நசுங்கிச் சாகத்தான் போகிறோம். அதற்குள் இந்த வீட்டை வேறு யாருக்காவது விற்று விட்டு வெளியூருக்குப் போய்விட வேண்டும்' என்று முடிவு செய்தான் ரங்கன். அவ்வாறே அந்தப் புது வீட்டை 'முத்து' என்பவனுக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, 'தன்னை விட்டால் போதும்' என்று ஏதோ ஒரு ஊருக்குக் குடி

பெயர்ந்து விட்டான்.

தான் வாங்கிய அந்தப் புது வீட்டில் பூதம் குடியிருக்கிறது என்ற உண்மை முத்துவுக்குத் தெரியவில்லை. ரங்கன் அதைச் சொல்லாமலேயே மறைத்து விட்டான்.

முத்து, புது வீட்டிற்குக் குடிவந்த அன்றிரவு, வழக்கம் போல, "கொட்டட்டுமா, வேண்டாமா?" என்ற குரல் கேட்டது.

முத்து எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணோம். 'என்னவாக இருக்கும்?' என்று யோசித்தவாறே படுக்கச் சென்றான். மீண்டும் அதே குரல் ஒலித்தது. முத்து மிகவும் துணிச்சலானவன். அவன், கூரை மேலிருந்து குரல் வருவதை அறிந்து, "யாரடா நீ எதைக் கொட்டப் போகிறாய்? எங்கே கொட்டு பார்க்கலாம்!" என்றான், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு.

மறுநிமிடம், வீட்டுக் கூரை மேலிருந்து 'பொல பொல'வென தங்கக் காசுகள் கொட்டின.

அதை வைத்துக் கொண்டு முத்து மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். அசரீரி குரல் மறுபடி ஒலிக்கவேயில்லை.

அதிர்ஷ்டகரமான வீட்டைக் கட்டியும் அதை அனுபவிக்க முடியாமல் எங்கோ சென்று அலைந்து கொண்டிருந்தான் ரங்கன்.

– வி.ஏ. சுப்பையன், கோவை - 11.

இயற்கையே இனிமை!

கிச்சாவால் வெயிலைத் தாங்கவே முடியவில்லை. அவனுக்கு வேர்த்து வேர்த்து ஊற்றியது. கிச்சா, அந்தக் காலத்தில் முனிவர்கள் தவம் செய்து தங்களுக்கு வேண்டியதை நடத்திக் கொள்வார்கள் என்று படித்துள்ளான். அது போல் தானும் தவம் செய்து வெயிலைப் போக்க வேண்டும் என்று முடிவு செய்து காட்டிற்குச் சென்று தவம் செய்தான்.

அவன் முன் வன தேவதை தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டாள். உடனே கிச்சா, "தேவதையே இனிமேல் எங்கள் நாட்டில் வெயிலே இருக்கக் கூடாது" என்று வேண்டினான். "அப்படியே ஆகட்டும்" என்று தேவதை கூறி மறைந்தாள்.

அவள் கூறியது போல அந்த ஆண்டு வெயிலே இல்லை, ஆனால் நல்ல மழை இருந்தது. அதனால் பயிர் எல்லாம் நாசமானது. கிச்சாவின் குடிசையும் சேதமடைந்தது. அதனால் கிச்சா மறுபடி காட்டிற்குச் சென்று தவம் செய்தான். இந்த முறையும் வன தேவதை அவன் முன் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டாள். உடனே கிச்சா, "தேவ



தையே எங்கள் நாட்டில் மழையும் இருக்கக் கூடாது, வெயிலும் இருக்கக் கூடாது" என்று வரம் கேட்டான். தேவதை அப்படியே ஆகட்டும் என்று கூறி மறைந் தாள்.


வன தேவதை கூறியபடி அந்த ஆண்டு மழையும் இல்லை வெயிலும் இல்லை. அதனால் விளைச்சலும் இல்லை. கிச்சா உண்ண உணவும் இல்லை. மறுபடி கிச்சா காட்டிற்குச் சென்று தவம் செய்தான். வன தேவதை அவன் முன் தோன்றி "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டாள். அதற்கு கிச்சா, "தேவதையே நான் ஒன் றைப் புரிந்து கொண்டேன். இயற்கை இயற்கையாய் இருந்தால்தான் இனிமை. அதை ஆட்டுவிப்பது புத்திசாலித்தனம் அல்ல. வானிலை இயற்கையாக இருக்கட் டும்" என்றான்.

உடனே தேவதை "இப்பொழுதாவது உண்மையை உணர்ந்தாயே! சரி, இத்தனை நாட்கள் கடுமையாகத் தவம் செய்து உனக்கு மட்டும் நல்லது கேட்காமல் நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வரம் கேட்டாய். ஆனால் அது தீங்காய் முடிந்து விட்டது. அது வேறு விஷயம். உனக்காக இந்தா நூறு பொற்காசுகள். சந்தோஷமாக இரு" என்று ஒரு பையைக் கொடுத்து விட்டு மறைந்து விட்டாள். கிச்சா சந்தோஷமாக வீட்டிற்குச் சென்றான்.

– பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி,
சென்னை.

இதுதான் ஜோஸியம்!

மூன்று நண்பர்கள் ஒரு ஜோஸிய ரிடம் சென்றனர். "நாங்கள் மூன்று பேரும் பரீட்சை எழுதிவிட்டு முடிவிற்காகக் காத்திருக்கிறோம். நாங்கள் தேர்ச்சி பெறுவோமா?" என்று கேட்டனர்.




ஜோஸியரோ பதில் எதுவும் கூறாமல் ஒரே ஒரு விரலை மட்டும் காட்டினார். ரிசல்ட்டும் வந்தது. ஒரு பையன் பாஸ் மற்ற இரண்டு பேர் ஃபெயில்.

நண்பர்களுக்கோ ஆச்சரியம். நேராக ஜோஸியரிடம் சென்று "நீங்கள் ஒரு விரலைக் காட்டினீர்கள். அதுபோலவே எங்கள் மூவரில் ஒருத்தர்தான் பாஸ் செய்தோம். உங்களால், எப்படி இவ்வளவு சரியாகச் சொல்ல முடிந்தது?" எனக் கேட்டனர்.

ஜோஸியரோ, "தம்பி! நான் ஒரு விரலைக் காட்டியது உண்மை தான்! நீங்கள் மூன்று பேரும் ஃபெயிலாகி இருந்தால் ஒருவர் கூட தேர்ச்சி பெற மாட்டீர்கள் என்பதை உணர்த்தியதாகவும், ஒருவர் ஃபெயிலாகி இருந்தால் அதைத்தான் ஒரு விரல் உயர்த்தி காட்டியதாகவும் ஒரு விரலுக்கு விளக்கம் சொல்லி இருப்பேன். எது நடந்தாலும் சமாளிக்கத் தெரிய வேண்டும். அதுதான் ஜோஸியம்" என்றார் அந்த ஜோஸியர்.

– சக்தி. சரவணன், மோகனூர்.

பிருந்தாவனக் கவியரங்கம்



கடிகாரம்

காலத்தை அழகாய் காட்டிடும்
கால் இல்லாமல் நின்றிடும்,

இரண்டு முட்கள் இருந்திடும்
இருளில் கூட உணர்த்திடும்,

பலவகை சத்தம் கொடுத்திடும்
பார்ப்போர் மனதைக் கவர்ந்திடும்,

சிறிது பெரிதாய் விளங்கிடும்
சிங்காரக் கடிகாரம் பலபடும்!

— பி.என். நாகராஜன்,
நாகமங்கலம்.

முயன்று முன்னேறு

மலைப்பில் ஆரம்பம் செய்தால்
மூச்சில் செய்யும் வேலையும்
மலையாய்த் தென் படுமே
முனைப்பில் தன்னம்பிக்கை வேண்டுமே!

எடுத்த நல்ல காரியம்
என்றும் வெற்றி பெற்றிட
இடுக்கணை எதிர்த்து நின்று
இடைவிடா முயற்சியில் இறங்கிடுவாய்!

உழைப்பிலே உறுதி பூண்டு
ஒழுக்கத்தை உயிராய்க் கொண்டு
களைப்பின்றி பாடு பட்டாலே
காரியத்தில் வெற்றி கொள்வாய்!

உண்மை உயர்வை உணர்ந்தே
ஊக்கம் கொண்டு திகழ்ந்தே
நன்மை பயக்கும் நற்செயலை
நலமாய் முடித்து மகிழ்வாயே!

— லாலாபுரம் ஆர். சுந்தரராஜன்.



இனிமை பலா

பழுத்த நல் பலாப்பழம்
பலரும் சுவைக்கும் பலாப்பழம்
பண்ருட்டிச் சந்தையிலே
பார்த்து வாங்கிய முதிர் பழம்!

மூன்று கனியுள் ஒன்றாகும்
முத்த மிழ்க்கு உறவாகும்
தேன் போல் சுவையிருக்கும்
தின்போர் மனதை மகிழவைக்கும்!

சுளையில் உள்ள கொட்டையினைத்
துவரம் பருப்புக் குழம்பினிலே
அளவாய்ப் போட்டுச் சமைத்திடலாம்
அதிகச் சுவையாய்ச் சாப்பிடலாம்!

— காழி. கோ.வை. எழிலன், சீர்காழி வட்டம்.



நூறு கோடி ரூபாய் கால்கள்

ரொனால்டோவின் கால்கள் மட்டும் நூறு கோடி ரூபாய்க்கு மேல் காப்பீடு செய்யப் பட்டிருக்கின்றன! வேகம், வலிமை, ஆரோக் கியம் - இவை மூன்றும் விளையாட்டுகளின் வெற்றிக்கு அடித்தளம். மூன்றில் ஒன்று குறைந்ததாலோ என்னவோ ரொனால்டோ உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் 'கோல்' போடாமல் பிரேசில் ரசிகர்களின் காலை வாரி விட்டார். உலகக் கோப்பை '98 பிரான்ஸ் அணியின் கைவசமாயிற்று.

1938 இல் பிரான்ஸ் முதல்முறையாக உலகக் கோப்பைப் போட்டியை' நடத்தியது. அதில் கால் இறுதி ஆட்டத்தில் இத்தாலியிடம் தோற் றது பிரான்ஸ் அணி. 60 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பிரான்ஸிலேயே நடந்த உலகக் கோப்பை போட்டியில் கோப்பையைத் தவற விடவில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பிரான்ஸ் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. அதன் பிறகு நாடு முழுவதும் மகிழ்ச்சியும் கொண் டாட்டமுமாய் இருப்பது இப்போதுதான். பிரான்ஸ் அணியின் ஸினெடின் ஸிடேன் அடித்த இரண்டு கோல்களுக்கே, பிரே சில் அணியினால் பதிலடி கொடுக்க முடிய வில்லை. அந்த நிலையில் பிரான்ஸ் அணியின் பெடிட் ஒரு கோல் அடித்து வெற்றிக்கு மேலும் வலு சேர்த்தார். பிரான்ஸ் கோல் கீப்பர் மார் தெஸ் பிரேசில் வீரர்களின் கோல் முயற்சிகளை மிகத் திறமையாகத் தடுத்து அணியின் வெற் றிக்கு உதவினார்.

ஸினெடின் ஸிடேன் (பிரான்ஸ்)



குரோஷிய வீரர் டேவோ சுகேர் தங்கக் காலணியை வென்றார். உலகக் கோப்பை கால் பந்தாட்டத்தில் அதிக கோல்கள் (6) அடித் ததற்காகவே இப்பரிசு. மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தின் முடிவில், சுகேர் தனது ஆறாவது கோலை போட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுகேரைத் தொடர்ந்து அதிக கோல் அடித்து நம் பட்டியலில் இடம் பெறுவோர் இதோ:

5 கோல்: கிறிஸ்டியன் வியரி (இத்தாலி), கேப்ரியல் பாடிஸ்டுடா (அர்ஜென்டினா)

4 கோல்: மார்செலோ சலாஸ் (சிலி), லூயிஸ் ஹெர்னான்டஸ் (மெக்சிகோ), ரொனால்டோ (பிரேசில்)

FRANCE 98
WORLD CUP

3 கோல்: தியரி ஹென்ரி (பிரான்ஸ்), சீசர் சாம்பையோ (பிரேசில்) பெபடோ (பிரேசில்), ரிவால்டோ (பிரேசில்), ஜெர்ஜென் கிளின்ஸ் மன் (ஜெர்மனி), ஆலிவர் பியர்ஹோஃப் (ஜெர்மனி), டெனிஸ் பெர்காம்ப் (ஹாலாந்து)

2 கோல்: 23 வீரர்கள்

1 கோல் : 72 வீரர்கள்

இவர்களைத் தவிர 4 வீரர்கள் தங்கள் சொந்த போஸ்டிலேயே கோல் அடித்து எதிரணிக்கு உதவியிருக்கின்றனர்!

ரொனால்டோவுக்கு தங்கக் கால்பந்து பரிசு!

அதிக 'கோல்' போடவில்லை; பிரே சிலுக்கு வெற்றி தேடித் தரவும் இயலவில்லை.

பலமிழந்து விட்டனவா?

இருந்தும் ரொனால்டோவின் மதிப்பு ரசிகர்கள் மத்தியில் குறையவில்லை. சமீபத்திய உலகக் கோப்பை ஆட்டத்தின் சிறந்த வீரர் யார் என்பதைக் கண்டறிவதற்கான கருத்துக்கணிப்பு அண்மையில் நடத்தப் பட்டது. இதில் 21 வயதான ரொனால்டோவுக்கு ஆதரவாக 21.3 சதவிகித ரசிகர்கள் வாக்களித்தனர். இதனால் அடிடாஸ் நிறுவனம் வழங்கும் தங்கக் கால்பந்து பரிசை அவர் பெறுகிறார்.

10.8 சதவிகித ரசிகர்களின் ஆதரவைப் பெற்ற குரோஷிய வீரர் சுகேர் வெள்ளிக் கால் பந்துக்குச் சொந்தக்காரராகிறார். 8.8 சதவிகித ரசிகர்களின் ஆதரவைப் பெற்ற பிரான்ஸ் வீரர் துராமுக்கு வெண்கலப் பந்து பரிசு.

இம் மூன்று வீரர்களைப் பின் தொடர்வோர்:

4. மார்செல் டெசாய்லி (பிரான்ஸ்), 5. ரிவால்டோ (பிரேசில்) 6. ஸினெடின் ஸிடேன் (பிரான்ஸ்) 7. மைக்கேல் ஓவென் (இங்கிலாந்து) 8. எட்கர் டேவிட்ஸ் (ஹாலந்து) 9.டுங்கா (பிரேசில்), 10. டெனிஸ் பெர்காம்ப் (ஹாலந்து)



• டோவோ சுகேர் (குரோஷியா)



— விளையாட்டுப் பையன்

கால்பந்து டேட்டா

உலகக் கோப்பை ஆட்டங்களில் அதிக 'கோல்' அடித்தவர்கள்

எந்த ஆண்டு?	யார்? யார்?	எத்தனை கோல்?
1930	கில்லர்மோ ஸ்டேபைல் - அர்ஜென்டினா	8
1934	ஒல்ட்ரிச் நெஜ்ட்லி - செக்கோஸ்லேவாகியா	5
1938	லியோனிதாஸ் - பிரேசில்	8
1950	அடிமிர் - பிரேசில்	9
1954	சந்தூர் கோஸிஸ் - ஹங்கேரி	11
1958	ஜஸ்ட் ஃபான்டைன் - பிரான்ஸ்	13
1962	டிராஸான் ஜெர்கோவிக் - யூகோஸ்லேவியா	4
	கரிஞ்சா - பிரேசில்	4
	வாவா - பிரேசில்	4
	லியோனில் சான்ஜெஸ் - சிலி	4
	ஃப்ளோரியன் ஆல்பெர்ட் - ஹங்கேரி	4
	வாலென்டின் இவானேவ் - ரஷ்யா	4
1966	ஈஸ்பயோ - போர்ச்சுகல்	9
1970	ஜெர்ட் முல்லர் - மேற்கு ஜெர்மனி	10
1974	கிரேஸ் கோர்ஸ் லாட்டோ - போலந்து	7
1978	மரியோ கெம்பெஸ் - அர்ஜென்டினா	6
1982	பாவ்லோ ரோஸ்ஸி - இத்தாலி	6
1986	கேரி லைன்கெர் - இங்கிலாந்து	6
1990	சால்வடார் ஸ்லாச்சி - இத்தாலி	6
1994	ஒலேக் சாலெங்கோ - ரஷ்யா	6
	ஹரிஸ்டோ ஸ்டோச்கவ் - பல்கேரியா	6
1998	டோவோ சுகேர் - குரோஷியா	6

அமேசான் காட்டிற்குப் போகலாம்!

உச்சி வெயில். கதிர் முற்றி தலை சாய்ந்து கிடந்த நெல் வயல்களில் நெல்மணிகளை நன்றாக கொத்தித் தின்று விட்டு, பக்கத்தில் உள்ள புளியமரத்தில் இளைப்பாறலாம் என்று சிட்டுக் குருவிகள் வந்து உட்கார்ந்தன. அடர்ந்த புளியமரத்தில் காக்கைகள், கிளிகள், மைனாக்கள், ஆந்தைகள் என்று பல பறவைகள் கிளைக்குக் கிளை உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தன.

மொழிகள் வேறு வேறாயிருந்தாலும் அவைகளிடத்தில் மொழிப் பிரச்னை இல்லை. ஒரே மரத்தில் எவ்வளவு பறவையினம்? சில கூடுகட்டி குஞ்சு பொரித்திருக்கின்றன. சில மரப் பொந்துகளில் வாழ்கின்றன. இப்படி ஏராளமான பறவைகளுக்கு அந்தப் புளியமரம்தான் வீடு.

"மரம் பெரிசா இருக்கு. பறவைகளும் நிறைய இருக்கு. நமக்குள்ளே சண்டை இல்லை. ஆனால் மனிதர்கள் மாதிரி நம்மால் வாழ முடியலையே..." என்று பெண் சிட்டுக் குருவி ஆண் சிட்டுக் குருவியிடம் சொன்னது.

"என்ன சொல்றே! மனிதர்கள் மாதிரி நாம் வாழ வேண்டாம். அவர்களிடம் ஜாதி, மதம், மொழி, இனம் என்ற பாகுபாடு உண்டு. அவைகளின் பேரால் சண்டைகள், குத்து வெட்டுகள், வெடிகுண்டு வெடிப்பு என்று அடிக்கடி தங்கள் இனத்தையே கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றது ஆண் சிட்டு.

"அவங்களுக்குள்ளே மட்டுமா பிரச்னை. நம்ம இனத்தின் மேலேயும்தான் தாக்குதல் நடத்தறாங்க. எத்தனை பறவைகள் இதுவரைக்கும் பலியாகியிருக்கு!" என்று வருத்தப்பட்டது மைனா.

"மைனா அண்ணா எனக்கு இந்த பயம் ரொம்ப நாளாவே இருக்கு. அதனாலே தான் எனக்கு இந்த மனிதர்களையே பிடிக்கலே" என்று கூறியது ஆண் சிட்டு.

அந்த சமயம் பார்த்து ஒரு ஆசாமி வலையுடன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான்.

உடனே மரத்திலுள்ள பறவைகள் எல்லாம் குப்பென்று பறந்து மூலைக்கொன்றாய் சென்றன.

சிட்டுக் குருவிகள் பறந்து போய் எப்போதும் ஓய்வெடுக்கிற அந்த ஊர் பள்ளிக்கூடக் கூரையின் உட்புறத்தில் சென்று உட்கார்ந்து கொண்டன. இங்குதான் இந்தச் சிட்டுகள் கூடுகட்டி பலமுறை குஞ்சுகளை பொரித்திருக்கின்றன. கூட்டில் அடைகாத்துக் கொண்டே வாத்தியார் சொல்லும் பாடங்களையெல்லாம் கேட்டிருக்கின்றன.

"ஏம்மா... நாம நாளைக்கே எல்லாப் பறவைகளையும் கூப்பிட்டு ஒரு கூட்டம் போடணும். மனிதர்களின் இந்த அடாவடித்தனத்திலிருந்து எப்படியாவது நாம் விடுதலை பெற்றாக வேண்டும். இது சம்பந்தமா நாம் விவரமா நம்ம இனங்களிடையே பேச வேண்டும்" என்று ஆண் சிட்டு கூறியது.

"உடனே கூட்டத்தைக் கூட்டுங்க. நீங்க சொல்றது நல்லதா எனக்குத் தோணுது. நாமும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி பயந்து பயந்து வாழறது" என்றது பெண் சிட்டு.

மறுநாள் பறவைகள் கூட்டத்தை சிட்டுக் குருவிகள் கூட்டின. புளியமரம் நிரம்பி வழிந்தது. கூட்டத்திற்கு பருந்தண்ணன் தலைமை வகிக்க எல்லாப் பறவைகளும் கேட்டுக் கொண்டன. பருந்து ஒப்புக் கொண்டது.

"சரி, திடீரென்று இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்குக் காரணம் என்ன? கூட்டத்தைக் கூட்டிய சிட்டுக் குருவி இதை நம் முன்னால் விளக்கினால் நன்றாக இருக்

சி. இராமலிங்கம்

கும்'' என்று தலைமை வகித்த பருந்து கேட்டுக் கொண்டது.

"கூட்டத்தில் உள்ள அனைவருக்கும் வணக்கம். நாளுக்கு நாள் மனிதர்களில் வேட்டையாடும் கூட்டம் அதிகமாகி விட்டது. இவர்களுக்குப் பயந்து வனங்களுக்குச் சென்றால் அங்கே காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் நாம் இங்கே இருந்தால் நாம் கூண்டோடு கைலாசம் போய் விடுவோம் என்பது உறுதி. ஆகவே நம்மை நாமே பாது



காத்துக் கொள்ள ஒரு முடிவு எடுக்கத்தான் இந்தக் கூட்டத்தைக் கூட்டினேன்'' என்று சிட்டுக்கு குருவி கூறியது.

''நீ சொல்வது முழுக்க முழுக்க உண்மை. எங்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சிட்டுக் குருவிகளாகிய நீங்கள்தான் மனிதர்களிடத்தில் நெருங்கிப் பழகுகிறீர்கள். அவர்கள் பேசுவது உங்களுக்கு நன்றாகப் புரியும். நீங்களே என்ன செய்யலாம் என்று கூறினால் இங்கே அது பற்றி பரிசீலிக்கலாம்'' என்று பருந்து கூறியது.


"பருந்தண்ணா, நாங்கள் ஒரு பள்ளிக் கூடத்தின் கூரையில்தான் வசிக்கிறோம். நாங்கள் ஓய்வெடுக்கும் போது அங்கே சொல்லிக் கொடுக்கிற பாடங்களை கேட்போம். அதில் பூகோள வாத்தியார் நல்லா சொல்லிக் கொடுப்பாரு. அவர் பாடம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம் இப்ப?" என்று பருந்து கேட்டது.

"நான் இன்னும் முடிக்கவில்லை. அந்த பூகோள ஆசிரியர் ஒரு நாள் அமேசான் காடுகளைப் பற்றி சொன்னார். அது மிகப் பெரிய வனமாம். அங்கு எந்தத் தொந்தரவும் இருக்காதாம். மனிதர்கள் நடமாட்டமே இல்லையாம். அங்கு பறவை இனங்கள் நிம்மதியாக வாழ்கின்றனவாம். நாம் அங்கு சென்றால் நிம்மதியாக வாழலாம்" என்று சிட்டு தனது யோசனையைச் சொன்னது.

"இது நல்ல யோசனை. ஆனால் அமேசான் காடுகள் பல ஆயிரம் மைல் தூரத்தில் உள்ளன. நமக்கு அவ்வளவு தூரம் பறந்து செல்வது இயலாத காரியம். நாம் பறந்து சென்றால் பலர் பாதி வழியிலேயே இறந்து விடுவோம். நாம் போகும் போது கடல்கள், பாலைவனம், மலைகள் என்று பலவற்றைக் கடந்து செல்ல வேண்டும். அதற்கு எத்தனை பேர் தயாராயிருப்பார்கள்? இது சாத்தியமில்லை என்றுதான் தோன்றுகிறது'' என்று கூட்டத்தில் உள்ள கிளி விவரமாகக் கூறியது.

"கிளி சொல்வது உண்மைதான். அதற்கு



''சர்க்கஸ் கூடாரம் ஒழிஞ்சாலும் கவலையே இல்லை.''

''ஏன்?''

''அங்கேதான் ஒட்ட'கம்' இருக்குமே!''

– கே.ஆர். உதயகுமார்

ஒரு வழி உண்டு. அந்தப் பூகோள வாத்தியார் மேலும் ஒன்றைக் கூறியிருக்கிறார். அதாவது பூமி சுற்றிக் கொண்டிருக்கிறதாம். இந்தப் பூமி 23 மணி 56 நிமிடத்திற்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறதாம். இது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. இந்தப் பூமி பல கோடிக்கணக்கான வருடங்களாக தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருக்கிறதாம்'' என்றது ஆண் சிட்டு.

''ஆகையால் நாம் பருந்தண்ணா பறக்கும் அளவுக்கு உயரே பறந்து அங்கேயே சுற்றிக் கொண்டிருப்போம். ஒரு பன்னிரண்டு மணி நேரம் சுற்றிக் கொண்டிருந்தால் அதற்குள் நாம் வசித்த இடம் போய்விடும். நாம் இருந்த இடத்திற்கு அமேசான் காடுகள் வந்து விடும். அப்பொழுது கீழே இறங்கி விடலாம். இது நமக்கு சுலபமான வழி. நாம் பல ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்லத் தேவையில்லை'' என்று பெண் சிட்டு விவரித்தது.

''ஆஹா இப்படி ஒரு வழி இருப்பது நமக்கு இது நாள் வரைக்கும் தெரியவில்லையே. நாம் நாளைக்கே இதற்கான முயற்சி செய்வோம்'' என்று எல்லாம் சந்தோஷமாகக் கூறின.

யார், யார் நாளைக்கு அமேசானுக்கு செல்லுவது என்ற பட்டியல் தயார் செய்யப்பட்டது. எல்லாம் வேகமாகப் பெயர்களைக் கொடுத்தன.

''போதும்... போதும் மற்றவர்கள் அடுத்தடுத்த நாட்களில் வரலாம்'' என்று பருந்தண்ணன் கூறியது.

மறுநாள் காலை பருந்தண்ணன் தலைமையில் பறவைக் கூட்டம் மிகவும் உயரமாகப் பறந்து சென்று வட்டமடித்துக் கொண்டிருந்தன. தொடர்ந்து ஏழு மணி நேரம் பறந்து கொண்டிருந்தன. பறவைகளுக்கு மிகுந்த சந்தோஷம். இன்னும் சிறிது நேரத்தில் அமேசான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருந்தன.

சிறிது நேரம் கழித்து ''வாங்க நம்ம எல்லோரும் தரையிறங்குவோம். பூமி ஒண்ணும் சுற்றவில்லை. நம்ம நேரம்தான் வீணாகிப் போச்சு. நாம் வசித்த அதே புளியமரம், அதே வீடுகள், அதே காடுகள் எல்லாம் என் கண்ணை விட்டு அகலவில்லை. சிட்டுக் குருவியை பூகோள வாத்தியார் ஏமாற்றிட்டார். நாம் கீழே இறங்கலாம்'' என்று பருந்தண்ணன் கூறியது.

சிட்டுக் குருவி யோசனையின் மீது பறவைகள் ஆத்திரமடைந்தன. இனி சிட்டுக் குருவி சொல்வதை நாம் கேட்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தன.

மனம் வெதும்பிய சிட்டுக் குருவிகள் பள்ளிக்கூட கூட்டில் சென்றடைந்து மன வருத்தத்துடன் மாணவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தன. அப்பொழுது பூகோள ஆசிரியர் உள்ளே நுழைந்தார். சிட்டுக் குருவி அவரை ஆத்திரத்துடன் பார்த்தது.

''டேய், நேற்று பூமி சுற்றுவதைப் பற்றி சொன்னேன். அப்ப ரமேஷ் ஒரு கேள்வி கேட்டான் ஞாபகம் இருக்கிறதா'' என்று கேட்டார் ஆசிரியர்.

''சார், 'பூமி தன்னைத் தானே சுற்றுகிறது. அப்படீன்னா நாம ஒரு ஹெலிகாப்டரில் போய் மேலே ஒரு சில மணி நேரம் தங்கி இருந்து விட்டு திரும்பி கீழே இறங்கினால் வேறு நாடு வருமா?' என்று ரமேஷ் கேட்டான்'' என்று கண்ணன் சொன்னான்.

''வெரிகுட். அதுதான் கேள்வி. ஆனால் அப்படி நடக்காது. காரணம் பூமிக்கு ஈர்ப்பு விசை இருக்கிறது. இந்த ஈர்ப்பு விசை பூமிக்கு மேலே நூறு மைல் வரைக்கும் இருக்கும். ஆகையால் பூமிக்கு மேலே நூறு மைல் வரைக்கும் இருக்கக் கூடிய பொருள்கள் அனைத்தும் பூமி சுற்றும் திசையிலேயே சுற்றும். அதனால், ரமேஷ் நினைத்த மாதிரி நாம் அடுத்த நாட்டுக்குப் போக முடியாது'' என்றார் ஆசிரியர்.

குருவிகளுக்கும் புரிந்தது.



சார் தபால்!

✉ 'நிலா நம்மைப் பின் தொடர்கிறதா?' என்ற கேள்விக்கு சிறுகதை மூலம் கொடுத்த விளக்கம் மிகவும் பயனுள்ளது. எல்லோருக்கும் இருக்கக்கூடிய சந்தேகத்தை தீர்த்து வைத்தது.

– டி. கே. சீனிவாசன், திருவண்ணாமலை.

✉ பிருந்தாவனக் கதையரங்கம், படக்கதைகளை இன்னும் அதிகமாக வெளியிடுங்கள். எனக்கு ரொம்பப் பிடித்த பகுதிகள் இவை.

– ஜி. சரண்யா, நான்காம் வகுப்பு, பி.ஆர். சித்தா நாயுடு பள்ளி, கோவை.

✉ கால்பந்தாட்டத்தில் உலகக் கோப்பை எந்த நாடு, எந்த ஆண்டில், யாரை வென்றது என்ற அருமையான தகவலை வெளியிட்டிருந்தீர்கள். விளையாட்டு பற்றிய தகவலை சேகரிக்கும் என் போன்றோருக்கு மிகவும் உதவியாக இருந்தது. விளையாட்டுச் செய்திகளை அதிகம் எதிர்பார்க்கிறேன்.

– கே. மான்விழி, புதுப்பேட்டை, சிதம்பரம்.

✉ கோலப் போட்டியில் பரிசு பெற்ற ஒவ்வொரு கோலமும் 'ஏ-ஒன்'!

– வி. பிரசன்ன குமார், மதுரை – 19.

✉ ஐம்பது ரூபாய் படக்கதையை நான் கதையாக உணரவில்லை. நிஜத்திலும் சந்தர்ப்பச் சூழ்நிலையில் சிலரை தப்பாக எண்ணி விடுகிறோம். சேற்றில்தான் செந்தாமரை பூக்கும் என்பதை உணர வைத்தது.

– சிவகண்மணி, மூன்றாம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, கரும்பம்புலம்.

சேற்றில் பூக்கும் செந்தாமரை!

✉ ஒவ்வொரு மாதமும் கண்களைக் கவரும் வண்ணப்படங்களுடன் வெளிவரும் அறிவியல் கட்டுரை கருத்து மிக்கது. கல்விக்கும் உதவுகிறது.

– கே. வெங்கடேஷ், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்.

✉ 'எங்கள் எண்ணம்' புதிய பகுதி. ஆரம்பமே பெரிய விஷயத்தைப் பற்றியதாக இருந்தது. அணு யுத்தத்தால் ஏற்படும் பாதிப்புகளையும் மற்ற உயிரினங்களும் இப் பூமியில் வாழ சம உரிமை உண்டு என்பதையும் தெளிவாக விளக்கியிருந்தது.


– மோ. ரீட்டா ராணி, எட்டாம் வகுப்பு, புனித இருதய மேல் நிலைப் பள்ளி, திருச்சி.

✉ 'மந்திரக் கிழவியும் மாயாஜாலப் பையும்' என்ற ஜானகிமணாளனின் கதையும் படமும் அருமை.

– கனக. முத்துச் சிதம்பரம், மணல்மேடு.

✉ நான் கம்ப்யூட்டர் படிப்பை கடந்த ஒரு வருடமாகப் பயின்று வருகிறேன். எனக்குக் கம்ப்யூட்டர் மேல் ஆர்வம் அதிகம். 'கம்ப்யூட்டர் பயன்படுத்தும் கண்மணிகள் கவனத்திற்கு' என்ற பகுதியை வெட்டி என் அம்மா நான் படிக்கும் மேஜை மீது ஒட்டி விட்டார்.

– ஆர். பூங்குழலி, பத்தாம் வகுப்பு, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஒத்தக்கால் மண்டபம், கோவை.



யார் பெரிய கஞ்சன்?

சங்கரனும், சுந்தரமும் நெருங்கிய நண்பர்கள். யாருக்கும் எந்த உதவியும் செய்ய மாட்டார்கள். அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளாமல் பணம் சேர்த்து வைப்பார்கள். கருமித்தனமே அவர்கள் இரண்டு பேரையும் நண்பர்களாக்கியது என்று கூடச் சொல்லலாம்.

அன்று இருவரின் பெற்றோர்களும் ஊருக்குச் செல்வதால், பணத்தைக் கொடுத்து இரவு உணவை ஹோட்டலில் சாப்பிடச் சொன்னார்கள்.

மறுநாள் நண்பர்கள் இருவரும் தங்களின் கஞ்சத்தனத்தைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

"நேத்து ராத்திரி நான் சாப்பிடவே இல்லை. வெறும் பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டுப் படுத்துக்கிட்டேன்'' என்றான் சங்கரன் பெருமையுடன்.

"நானும்தான் நேத்து ராத்திரி சாப்பிடலை. ஆனா உன்னை மாதிரி வீட்ல இருந்த தண்ணீரை வீணாக்கலை. அடுத்த வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடிச்சேன்" என்றான் சுந்தரம்.

அந்த நேரத்தில் தெரு முனையில் ஒரு பிச்சைக்காரன் வந்து கொண்டிருந்தான்.

"அதோ ஒரு பிச்சைக்காரன் வர்றான். அவனுக்கு யார் மிகவும் குறைந்த பிச்சை போடறோம்னு பார்க்கலாமா?" என்றான் சங்கரன்.

சுந்தரமும் ஒப்புக் கொண்டான்.

பிச்சைக்காரன் ஒவ்வொரு வீடாக பிச்சை கேட்டுவிட்டு இவர்களிடம் வந்தான்.


வீட்டுக்குள் போன சங்கரன் செல்லாத ஐந்து பைசாவை எடுத்து வந்து சுந்தரத்திடம் காட்டிவிட்டு பிச்சைக்காரனின் பாத்திரத்தில் போட்டான்.

"போ போ. ரெண்டு பேருக்கும் சேர்த்துத்தான் அவன் பிச்சை போட்டான். போய் அடுத்த வீட்டில் கேள்" என்று பிச்சைக்காரனை விரட்டினான் சுந்தரம்.

சங்கரன் விக்கித்து நின்றான்.


— கே. சுதர்ஷன்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



பூனை எலியை அடைய வழி சொல்லுங்கள்!

இந்த நான்கு படங்களில் என்ன தெரிகிறது?



விடை:
1. மெத்தையில் ஒருவர் படுத்திருக்கிறார்.
2. படகு தண்ணீரில் மிதக்கிறது.
3. கதவில் பூட்டு தொங்குகிறது.
4. கிணற்றில் கயிற்றுடன் வாளி கிடக்கிறது.

பிருந்தாவனம்




''எதிர் வீட்டு ராமு சுத்த அல்பம்டா.''

''எப்படி சொல்றே?''


''சட்டையை 'அயர்ன்' பண்ணக் கொடுக்கிறதுக்கு முன்னாடி நல்லாக் கசக்கிட்டுத் தான் கொடுக்கிறான்னா பாரேன்!''

– டி. முருகேசன், பவித்திரமாணிக்கம்

ஜோடி சேருங்கள்



மறுபாதியை வரையுங்கள்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

